REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஓகஸ்ட் 27 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 204 | Tuesday 27, August, 2024 | 16 பக்கங்கள் | 50/-






# நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டுசெல்லும் சிறந்த குழு என்னுடன்

## சட்டத்தரணிகளுடனான சந்திப்பில் ஜனாதிபதி

- எனது குழுவுக்குச் சவால் விடக் கூடிய குழுவொன்று வேறு எந்தக் கட்சியிலும் இல்லை.
- ஜனாதிபதி யார் என்பதில் போட்டி கிடையாது, மக்களை வாழ வைப்பது தொடர்பிலேயே போட்டி உள்ளது.
- கேஸ் சிலிண்டர்களை தேடிச் செல்வதிலிருந்து விடுபடவே இம்முறை வாக்களிக்க வேண்டும்.
- நல்லாட்சியில் திருடர்களைப் பிடிக்கும் பொறுப்பை ஏற்ற ஜே.வி.பி தோல்வியடைந்தது.
- எலிகளைப் பிடிக்க, பற்களுள்ள பூனையே தேவை. பற்கள் இல்லாத பூனையை ஏசுவதில் பயனில்லை.

06

## மனித உரிமைகள் ஆணையாளரின் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை

### இலங்கை நிராகரிப்பு, உறுப்பு நாடுகளுக்கு விளக்கம்



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க், முன்வைத்த குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசாங்கம் மறுத்துள்ளது.

இலங்கையின் மனித உரிமை நிலவரம் குறித்த ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளரின் முழுமையான அறிக்கை அண்மையில் வெளியிடப்பட்டிருந்தது.

06

## தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனம் யதார்த்தமற்றது

### நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தேசிய மக்கள் சக்தி தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வறுமை நாடு கஷ்டமான வாழ்க்கை என்ற பாதையில் பயணிக்கும் விடயங்களையே, வெளியிட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

06

## நீர்க்கட்டணத்தை ஏழு வீதம் குறைக்க அரசாங்கம் தீர்மானம்

### ஜீவனின் கோரிக்கைக்கு அமைச்சரவை அனுமதி



சமுர்த்தி பெறுபவர்கள் மற்றும் தோட்ட குடியிருப்பு தவிர்ந்த வீட்டு பாவனையாளர்களின் நீர்க் கட்டணங்கள் குறைக்கப்படவுள்ளன.

இவர்களுக்கான கட்டணங்கள் 07 சதவீதத்தால் குறைக்கப்படுமென, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது. இதுதொடர்பாக சபை நேற்று (26) அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

06

## ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனம் 29 இல்



ஐக்கிய மக்கள் சக்தியினதும், ஐக்கிய மக்கள் கூட்டணியினதும் ஜனாதிபதி வேட்பாளர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் தேர்தல் விஞ்ஞாபனம், எதிர்வரும் (29) வெளியிடப்படும் என, ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ். எம். மரிக்கார் தெரிவித்தார். ஜேக்கிய மக்கள் கூட்டணி தலைமையகத்தில் நேற்று(26) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## கண்டி மாவட்ட எம்.பிக்கள் 13 பேரில் 07 பேர் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கண்டி மாவட்டத்திலிருந்து கடந்த பொதுத் தேர்தலில் பாராளுமன்றத்திற்கு தெரிவான பாராளுமன்ற உறுப்பினர்கள் 13 பேரில் 7 பேர், இம்முறை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளனர். பொது ஜன பெரமுன கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றத்துக்குத் தெரிவான திலும் அமுனுகம, மகிந்தானந்த அளுத்கமகே, லொஹான் ரத்வத்த, அனுராத ஜயரத்ன, குணதிலக ராஜபக்ச, மற்றும் உதயன கிரிந்திகொட ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்களும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமாரும்

06

## பொதுத் தேர்தலில் பிரதமர் தினேஷ் தலைமையிலான அணியில் போட்டி



பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் உருவாக்கப்படும் பரந்துபட்ட அரசியல் கூட்டணியில் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடவுள்ளதாகத் தெரிவித்த ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க,பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ படு தோல்வியடைவார்

06

## எல்பிட்டிய உள்ளூராட்சி மன்றத்துக்கு தேர்தல்

### கட்டுப்பணங்கள் இன்று முதல் ஏற்பு



எல்பிட்டிய உள்ளூராட்சி சபைக்கு வேட்பு மனுக்கள் கோரப்பட்டுள்ளன. தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக் கொள்வது தொடர்பான அறிவிப்பு, நேற்று (26) எல்பிட்டிய உள்ளூராட்சி சபையின் தேர்தல் அதிகாரியால் அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டின் இறுதிக்குள் இந்த உள்ளூராட்சி சபைக்கு தேர்தல் நடத்தப்படவுள்ளது. தேர்தலுக்கான கட்டுப்பணங்கள் நேற்று (26) முதல் செப்படம்பர் (11) வரை ஏற்றுக்கொள்ளப்படும்.



06 **ஆறு மாதங்களில் 5000 பேருக்கு எலிக்காய்ச்சல்**

சுகாதாரப்பிரிவு மக்களுக்கு எச்சரிக்கை




06 **ஜனாதிபதி தேர்தல்; கருத்து கணிப்புகளுக்கு தடை வரலாம்**

## கட்சி முடிவெடுத்தால் ஜனாதிபதிக்கு ஆதரவு



கட்சி முடிவெடுத்தால் ஜனாதிபதியை ஆதரிப்பேன், கட்சியின் தீர்மானமே இறுதித்தீர்மானமாக அமையுமென, கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார். ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

06




06 **தேர்தல் விதி மீறல் குறித்த முறைப்பாடுகள் அதிகரிப்பு**

## தபால் மூல வாக்கு சீட்டுக்களை விநியோகிக்கும் பணிகள் ஆரம்பம்

### செப்டம்பர் 03 இல், வாக்காளர் அட்டைகள் விநியோகம்




**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதித் தேர்தலில், தபால் மூலம் வாக்களிப்பதற்கு வாக்குச்சீட்டுகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பமானதாக தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க

06

## சாதனை வீரன் சஹ்மிக்கு வரவேற்பு



இலங்கையை சுற்றி, கரையோரமாக சுமார் 1500 கிலோ மீட்டர் தூரத்தை நடைபயணத்தினூடாக, 45 தினங்களில் பூர்த்தி செய்து சாதனை நிலைநாட்டிய சாதனை வீரன் சஹ்மி சஹீதுக்கு நேற்று (26) தனது ஊரான பேருவளையில், நிகழ்வின் ஏற்பாட்டாளரும் ஸிமி ஹோல்டிங் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளருமான இஜ்லான் யூசுப் தலைமையில் வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றது.

## பட்டாசு உற்பத்தி அதிகரிப்பு



நாட்டில் பட்டாசு உற்பத்தி அதிகரித்துள்ளதாக அகில இலங்கை பட்டாசு உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர், தினேஸ் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பட்டாசு உற்பத்தி அதிகரிப்பதற்கு தேர்தல் காலங்களே காரணமென்றும் அவர் தெரிவித்தார். ஜனாதிபதி தேர்தலையடுத்து, இந்த ஆண்டு இறுதிக்குள் மேலும்

06

## தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனம்

### அழகான நாடு–சுகமான வாழ்வு கருப்பொருளில் வெளியீடு



தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனம் நேற்றுக் காலை வெளியிடப்பட்டது. அழகான நாடு – சுகமான வாழ்வு என்பதே தேர்தல் விஞ்ஞாபனத்தின் கருப்பொருளாகும்.

06

# அதிகாரத்தை மாத்திரம் பெறுவதற்கு முயற்சிப்போரிடம் நாட்டை ஒப்படைத்தால் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடையும்



## தம்புள்ளை மக்கள் பேரணிக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

தொலைநோக்குப் பார்வை இல்லாமல் அதிகாரத்தை மாத்திரம் பெறுவதற்கு முயற்சிப்பவர்களிடம் நாட்டை ஒப்படைத்தால் நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடைவது உறுதி என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சிக்கலில் இருந்து மக்களை விடுவிப்பதன்றி, அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதே எதிர்க்கட்சியின் பிரதான நோக்கம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தம்புள்ளை நகரில் நடைபெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' மாத்தளை மாவட்ட வெற்றிப் பேரணி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

மக்களுக்காக நாட்டைப் பொறுப்பேற்று, நெருக்கடியான சூழலை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த பாடுபட்ட தாம் தற்போது நாட்டு மக்களுக்காகவே சுயேச்சை வேட்பாளராக தேர்தலில் போட்டியிடுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தம்புள்ளை நகரில் நடைபெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' மாத்தளை மாவட்ட வெற்றிப் பேரணி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:

"யாரும் ஏற்றுக்கொள்ள விரும்பாத நாட்டைப் பொறுப்பேற்று மக்களின் வாழ்வுரிமையைப் பாதுகாப்பதற்காக நான் அர்ப்பணிப்புடன் செயற்படும்போது, தேர்





தலைக் கோரி நீதிமன்றத்திற்குச் சென்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டாரவும் ஜே. வி. பி எம். பி ஹரிணி அமரசூரியவும் நான் அடிப்படை உரிமைகளை மீறியதாக நீதிமன்றத் தீர்ப்பைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

நெருக்கடியான நிலையிலிருந்து மக்களை விடுவிப்பதன்றி அதிகாரத்தைப் பெறுவதே அவர்களின் நோக்கம் என்பது இதன் மூலம் உறுதிப்படுகிறது. தொலைநோக்குப் பார்வையும் வேலைத்திட்டமும் இல்லாமல் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்தை மாத்திரம் கொண்ட தரப்பினரிடம் நாட்டை ஒப்படைத்தால் நாடு அழிவதைத் தடுக்க முடியாது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் கடந்த இரண்டு வருடங்களாக கஷ்டப்பட்டுப் பெற்ற வெற்றிகளைப் பாதுகாத்து முன்னோக்கிச் செல்ல மக்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்த வேண்டும். நான் எதற்காக சுயாதீன வேட்பாளராக களமிறங்குகிறேன் என்றால் அது மக்களுக்காக போராடவும் மக்களுக்கு சலுகை வழங்கவும் மற்றும் அடுத்த தலைமுறையினருக்கு நல்ல எதிர்காலத்தை வழங்கும் சரியான பாதையில் நாட்டை கொண்டு செல்லவுமேயாகும்.

அன்று நாட்டில் வன்முறை தலையெடுத்தபோது, அதனைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் காணப்பட்டது. அதற்காக நான் முன்வந்திருக்காவிட்டால் பங்களாதேஷின் நிலைமையே இலங்கைக்கும் ஏற்பட்டிருக்கும். அந்தச் சந்தர்ப்பத்தில் கட்சி தொடர்பில் சிந்திக்காமல் நாட்டைப் பற்றிச் சிந்தித்து தீர்மானம் எடுத்தேன். அந்த வகையில் நாட்டில் தற்போது மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் தொடர வேண்டும். எதிர்க்கட்சித் தலைவருக்கும் மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உள்ளது. அவர் மற்றுமொரு பிரதமருக்கு நிகரானவர். நெருக்கடி வந்தபோது அவர் அந்தப் பொறுப்புக்களை மறந்து ஓடிவிட்டார்.

நெருக்கடியான காலத்தை நாடு எதிர்கொண்டது. அதிலிருந்து மீண்டுவர கஷ்டமான தீர்மானங்களை எடுக்க வேண்டியிருந்தது. அதற்காக சர்வதேச நாணய நிதியம் மற்றும் கடன் வழங்கிய தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தி இணக்கப்பாடுகளை எட்டினோம். சில தீர்மானங்கள் மக்களுக்குச் சுமையாக அமைந்தன. அதனைப் பொறுத்துக் கொண்ட மக்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

நாம் அதனைச் செய்திருக்காவிட்டால், நாட்டின் நிலைமை என்னவாகியிருக்கும் என்பதை சகலரும் சிந்திக்க வேண்டும். நாம் மேற்கொண்ட முயற்சிகள் நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியை அதிகரித்துள்ளன.

ரூபாவின் பெறுமதியும் தற்போது வலுவடைந்திருக்கிறது. சிறுநீரக நோயாளர்களுக்கு நிவாரணம் வழங்கினோம். 24 இலட்சம் பேருக்கு அஸ்வெசும வழங்கினோம். இலசவசமாக அரிசி வழங்கினோம். அடுத்த வருடத்திலிருந்து அரச ஊழியர்களின் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு 25,000 ரூபாவாக அதிகரிக்கப்படும். அதனால் அடிப்படைச் சம்பளம் 55.000 ரூபாவாக அதிகரிக்கும்.

'உறுமய' திட்டத்தின் கீழ் 20 இலட்சம் பேருக்கு காணி உறுதிப் பத்திரம் வழங்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. தேர்தல் காரணமாக அந்தத் திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. அடுத்த வருடம் அந்தத் திட்டம் மீள ஆரம்பிக்கப்படும்.

திருகோணமலை மாவட்டம் அபிவிருத்தி செய்யப்பட்டு அங்கு முதலீட்டு வலயங்களை அமைப்போம். நெல் உற்பத்தி அதிகரிக்கப்படும். விவசாயத்தை நவீனமயப்படுத்துவோம். பொருட்களின் விலைகளை பெருமளவில் குறைத்திருக்கின்றோம். குறிப்பாக எரிவாயு விலை குறைந்துள்ளது. அதனாலேயே சிலிண்டர் சின்னத்தை நான் தெரிவு செய்தேன்.

இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய 18 நாடுகள் காலஅவகாசம் வழங்கியுள்ளன. நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வோம். ஐக்கிய மக்கள் சக்தியும், தேசிய மக்கள் சக்தியும் வரிகளை நீக்கப் போவதாகக் கூறுகின்றன. அவ்வாறு செய்தால் 2022 ஆம் ஆண்டின் நிலைமைக்கே நாம் மீண்டும் தள்ளப்படுவோம்.

நாட்டு மக்களின் வாழ்க்கையைக் குழப்புவதே எதிர்க்கட்சியினரின் தேவையாகவுள்ளது. அவர்கள் எனக்கு எதிராக நீதிமன்றத் தீர்ப்பைப் பெற்றுள்ளனர். யார் எதைச் சொன்னாலும் மக்களுக்காக எதையும் செய்வேன். அதனால் எதிர்வரும் செப்டெம்பர் 21 ஆம் திகதி சிலிண்டர் சின்னத்துக்கு வாக்களியுங்கள். அவ்வாறு இல்லாவிட்டால் எதிர்காலத்தில் எரிவாயு இல்லை என்று கவலைப்பட நேரிடும்."

இவ்வாறு ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்தார்.

**லோரன்ஸ் செல்வநாயகம்...**



---

# சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளின் பவள விழாவும் 'அறம் பாலிக்கும் ஞான மோகனம்' நூல் வெளியீடும்

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகளின் பவள விழாவும் 'அறம் பாலிக்கும் ஞான மோகனம்' என்ற நூல் வெளியீடும் எதிர்வரும் (31.08.2024) சனிக்கிழமை காலை 8:30 மணிக்கு ஓய்வுபெற்ற அதிபர் ஆ. சிவநாதன் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்பு நடனத்தை பண்டாரவளை மகாவித்தியாலய மாணவிகளும் வரவேற்புரையை ஆசிரியர் க. கைலைநாதனும் ஆசியுரைகளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் சிவஸ்ரீ சோமாஸ் கந்த தண்டபாணிக தேசிகர் பிரம்மஸ்ரீ ப. மனோகர குருக்கள் ஆகியோர் ஆற்றுவர்.



நிகழ்வின் சிறப்புரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் ஆற்றுவார்.

நிகழ்வில் வெளியிடப்படவுள்ள அறம் பாலிக்கும் ஞான மோகனம் என்ற நூலின் வெளியீட்டுரையை கே.எஸ். சிவஞானராசா ஆற்றுவார். சந்நிதியான் ஆச்சிரமத்தால் போசிக்கப்படும் நிறுவனங்கள் சார்ந்து மாவட்ட ரீதியான பிரதிநிதிகள் வாழ்த்துரைகள் வழங்குவர். ஆசிரியை சசிரேகா ஜெயராசன் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை சார்பில் வாழ்த்து பா வழங்குவார்.

# யாழில் விபத்து; சமுர்த்தி உத்தியோகத்தர் உயிரிழப்பு

(யாழ் . விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற விபத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் நேற்றைய தினம் திங்கட்கிழமை அதிகாலை உயிரிழந்துள்ளார்.

காரைநகரை சேர்ந்த ப, ஐங்கரன் என்பவர், தனது மகனை தனியார் வகுப்பில் இருந்து மோட்டார் சைக்கிளில் அழைத்து வந்தவேளை, பிறவுண் வீதியில் முச்சக்கர வண்டி மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்தவரை, அங்கிருந்தவர்கள் மீட்டு, சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வடக்கின் உதயம்

## அருணகிரிநாதர் திருவிழா



(யாழ். விசேட நிருபர்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் பதினேழாவது நாளாகிய நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அருணகிரிநாதர் திருவிழா பக்திபூர்வமாக இடம்பெற்றது.

# மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்திற்கு அழைப்பு



(யாழ். விசேட நிருபர்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சர்வதேச தினமான எதிர்வரும் 30ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மாபெரும் போராட்டத்தினை முன்னெடுக்கவுள்ளதாக வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றைய தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே போராட்டம் தொடர்பில் அறிவித்துள்ளனர். யுத்தம் நிறைவுக்கு வந்த நாட்கள் தொடக்கம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளை தேடி போராடி வருகிறோம்.

இதுவரையில் எமக்கான நீதி கிடைக்கப்பெறவில்லை.

உள்ளக விசாரணைகளின் ஊடாக நீதி கிடைக்கும் என நாங்கள் நம்பவில்லை எனவே தான் நாம் சர்வதேச விசாரணைகளை கோரி போராட்டங்களை முன்னெடுத்து வருகிறோம்.

அந்த வகையில் எதிர்வரும் 30ஆம் திகதி வடக்கில் யாழ்ப்பாணத்திலும் கிழக்கில் திருகோணமலையிலும் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். எமது போராட்டத்திற்கு தமது அரசியல் நிலைப்பாடுகளை கடந்து கட்சி பேதங்கள் இன்றி அனைத்து தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும். அரசில் கட்சிகள், சிவில் அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சங்கங்கள் என அனைத்து தரப்பினரும் எமது போராட்டத்திற்கு வலு சேர்க்க தமது ஆதரவுகளை வழங்கி போராட்டத்தில் கலந்துகொண்டு எமது குரலை சர்வதேசத்திற்கு கேட்குமாறு கூற வேண்டும் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கேட்டுக்கொண்டுள்ளன.

அதேவேளை குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன், அகில இலங்கை தொழிலார் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் என்.வி.சுப்பிரமணியன் மற்றும் அகில இலங்கை மீனவர் மக்கள் தொழிற்சங்க வடமாகாண இணைப்பாளர் அன்னலிங்கம் அன்னராசா ஆகியோரும் குறித்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு போராட்டத்திற்கு தமது அமைப்புக்கள் சார்ந்த ஆதரவை தெரிவித்துள்ளனர்.

# பசுமாடு திருடிய இருவர் கைது

(யாழ். விசேட நிருபர்)

வாழ்வாதாரத்திற்காக வழங்கப்பட்ட பசுமாட்டினை திருடிய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த பயனாளி ஒருவருக்கு வழங்கப்பட்ட சுமார் 05 இலட்சரூபாய் பெறுமதியான பசு மாடு ஒன்று திருட்டுப்போயிருந்தது தொடர்பில் பாதிக்கப்பட்டவரால், சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், அச்செழு பகுதியைச் சேர்ந்த இருவரை சந்தேகத்தில் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்ததன் அடிப்படையில் திருடப்பட்ட பசு மாடு மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இருவரையும் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.





பண்ணாகத்தில் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்தின் 97ஆவது பிறந்தநாள் நினைவு ஊர்மக்களால் நடத்தப்பட்டது.

# மனைவியை அறைக்குள் வைத்து தீ மூட்டிய கணவன்

(யாழ். விசேட நிருபர்)

குடும்ப பிரச்சினையில், மனைவியை அறைக்குள் வைத்து பூட்டி கணவன் தீ மூட்டியதில் மனைவி தீக்காயங்களுக்குள்ளான நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அச்சுவேலி பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற குறித்த சம்பவத்தில், அப்பகுதியை சேர்ந்த பாலகிருஷ்ணன் நிருத்திகா (வயது 28) எனும் குடும்ப பெண்ணே படுகாயமடைந்துள்ளார். கணவன் மனைவிக்கிடையில் நீண்ட காலமாக பிரச்சினைகள் நிலவி வந்ததாகவும், நேற்று முன்தினமும் இருவருக்கும் இடையில் பிரச்சினைகள் ஏற்பட்ட நிலையில், கணவன், மனைவியை வீட்டின் அறைக்குள் இழுத்துச்சென்று தாக்கிய பின்னர், மனைவிக்கு தீ வைத்து விட்டு அறைக் கதவை பூட்டிவிட்டு தப்பிச் சென்ற நிலையில், அயலவர், குறித்த பெண்ணை காப்பாற்றி அச்சுவேலி வைத்திய சாலையில் அனுமதித்த நிலையில், அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஓகஸ்ட் 27 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 04.47
லுஹர் - 12.13
அஸர் - 03.22
மஃரிப் - 06.21
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் ஆவணி 10
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



## கடமையிலிருந்து வெளியேறிய பதில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி

மன அழுத்தத்தால் கடமைகளைச் செய்ய முடியாதென தெரிவித்து பொலிஸ் நிலையத்தை விட்டு வெளியேறிய உப்புவெளி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி குறித்து விசாரணை நடத்தப்படுமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி நிஹால் தல்துவா தெரிவித்தார்.

உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையால் இவர், மன அழுத்தத்துக்குட்பட்டதாக தெரியவருகிறது.இதனால், கடந்த (25) பொலிஸ் நிலையத்தை விட்டு இவர் வெளியேறியுள்ளார். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக இருந்த பிரதான பொலிஸ் பரிசோதகர், கடமையிலிருந்த உத்தியோகத்தரிடம் தனது கையடக்க தொலைபேசியை ஒப்படைத்து விட்டு பொலிஸ் நிலையத்தை விட்டு வெளியேறியதாக பொலிஸ் அத்தியட்சகர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## நாட்டைக் கட்டியெழுப்பும் கடைசி சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

### ஆசை வார்த்தைகளுக்கு பலியானால் மீண்டும் ஆபத்து



நாட்டைக் கட்டியெழுப்பும் கடைசி சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள். ஆசை வார்த்தைகளுக்கு பலியானால் மீண்டும் ஆபத்துதான் என போக்குவரத்து நெடுஞ்சாலைகள் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதி செய்யும் வகையில், தேர்தல் நடவடிக்கைகளுக்கான அலுவலகம் மீகொடதொம்பே பகுதியில் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இங்கு உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

நீண்ட காலமாக பல்வேறு அரசியல் கட்சிகளில் கருத்துகளுக்கு அமைவாக ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் வாக்களித்துள்ளோம். சுதந்திரத்திற்குப் பிறகு நாட்டில் நடைபெறவுள்ள மிக முக்கியமான ஜனாதிபதித் தேர்தல் இது. சுதந்திரத்திற்குப் பிறகு, நாட்டைக் கட்டியெழுப்ப பல்வேறு அரசுகளின் கீழ் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. அதற்காக ஒவ்வொரு அரசாங்கமும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கடன்களை பெற்றன. இவ்வாறு இல்லாமல் எந்த திட்டமும் நம் நாட்டில் செயல்படுத்தப்படவில்லை. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்றவை மானிய வட்டியில் கடன் வழங்கின. இந்த கடன் மட்டும் போதாது என்பதால், சர்வதேச சந்தையில் அதிக வட்டிக்கும் திறைசேரி பத்திரங்கள் மூலமும் கடன்கள் பெறப்பட்டன. இது தவிர,தேவையான அளவு பணமும் அச்சிடப்பட்டது.

இந்நிலைமை தொடர்பில் சர்வதேச நிதி நிறுவனங்கள் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம், நாடு மீளமுடியாத வகையில் வீழ்ச்சியடையப் போவதாகவும் கடன் நிலைத்தன்மையை இழக்க நேரிடும் என்றும் எச்சரித்தன.இந்த அபாயகரமான சூழ்நிலைக்கு தீர்வு காண வேண்டும் என்றும் நிதி நிறுவனங்கள் அறிவித்தன. எவராலும் நாட்டை மீட்டெடுக்க முடியாத நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில், தீர்வுகளை வழங்கக் கூடிய நிபுணர்களின் உதவியை நாடுமாறு கோட்டாபய ராஜபக்ஷ அமைச்சரவைக்கு அறிவித்தார்.

06

## மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகள் நேற்று ஆரம்பம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

அரசாங்க மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலைகளின் மூன்றாம் தவணைக் கல்வி நடவடிக்கைகள், நேற்று ஆரம்பமாகின.

அந்த வகையில் நாட்டிலுள்ள அனைத்து தமிழ் மற்றும் சிங்கள மொழி மூல பாடசாலைகளில் மூன்றாம் தவணைக்கான முதல் கட்ட கல்வி நடவடிக்கைகள், நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டுக்கான இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகள் கடந்த (16) நிறைவடைந்தது. இதையடுத்து பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டன.

அந்த வகையில் மூன்றாம் தவணைக்கான முதல் கட்ட கல்விச் செயற்பாடுகளே, நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டதாகவும் கல்விய மைச்சு தெரிவித்துள்ளது.

## பாடசாலைகளின் வளர்ச்சிக்கு தேவையான பணிகள் ஆரம்பம்



மாணவர்களின் நன்மை கருதி பாடசாலைகளின் வளர்ச்சிக்கு உதவும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக,நிந்தவூர் பிரதேச சபையின் உதவி தவிசாளரும் அகில இலங்கை சமாதான நீதவானுமான சுலைமா லெப்பை தெரிவித்தார்.இதுபற்றித் தெரிவித்த அவர்: முதல் கட்டமாக இமாம் கஸ்ஸாலி வித்தியாலயத்தில் க.பொ.த. உயர்தரம், சாதாரணதரம் மாணவர்களின் நன்மை கருதி தேவையான கட்டட வசதிகள் வழங்கப்பட்டு ஆசிரியர்களும் நியமிக்கப்படுவர். அல் அஸ்ஹர் தேசிய பாடசாலைக்கான பாதை சீர்செய்யப்பட்டு மாணவர்களின் பாவனைக்கு கையளிக்கப்படவுள்ளது கதிரைகள், மேசைகள் இன்னும் பாடசாலைகளுக்கான பொதுப்பணிகளும் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன. இது தவிர,நிந்தவூர் பிரதேச பாடசாலைகளின் நன்மை மற்றும் வளர்ச்சியில் அக்கறை கொண்டு செயற்படத் தீர்மானித்துள்ளேன். இதற்காக,உலக வங்கி திட்டத்தின் கீழ் உதவிகளும் பெறப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## நூல் வெளியீட்டு விழா

சிரேஷ்ட சட்டத்தரணி எம்.எம்.அபுல்கலாம் எழுதிய "நாட்டு நலனில் முஸ்லிம்களின் பங்களிப்பு" என்ற வரலாற்று ஆய்வு நூலின் வெளியீட்டு, இம்மாதம் (31) சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

கொழும்பு தமிழச்சங்கத்தில் பிற்பகல் நடைபெறும் இந்நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்க ஆர்வமுள்ளோர் அழைக்கப்படுகின்றனர்.

## 4 கோடி ரூபா சட்டவிரோத பொருட்களுடன் இருவர் கைது

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டுக்குள் சட்ட விரோதமாக கொண்டுவரப்பட்ட நான்கு கோடி ரூபா பெறுமதியான பொருட்களுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் நேற்றுக் காலை இந்தியாவிலிருந்து விமான மூலம் நாட்டுக்கு வந்தனர்.

சட்டவிரோதமான முறையில் இவர்கள் கொண்டு வந்த 4 கோடி ரூபா பெறுமதியான பொருட்கள் விமான நிலையத்தில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகத்திற்கிடமான வகையில் செயற்பட்டுள்ள இவர்களை, விமான நிலையத்தில் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர். சட்டவிரோதமான முறையில் கொண்டுவரப்பட்ட பொருட்களையும் கைப்பற்றியுள்ளதாக விமான நிலைய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

06

## உத்தியோகபூர்வ தேர்தல் பெறுபேறுகளை தகவல் திணைக்களமூடாக வழங்க முடிவு

ஜனாதிபதித் தேர்தலின் (2024) உத்தியோகபூர்வ தேர்தல் முடிவுகளை கவல் திணைக்களத்தின் ஊடாக ஊடகங்களுக்கு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. தேர்தல் ஆணைக்குழுவிடம் முடிவுகளைப் பெற்ற பின்னர் இவை, அரசாங்க தவல் திணைக்களமூடாக ஊடகங்களுக்கு வழங்கப்படவுள்ளன.

தகவல் திணைக்களத்தின் மூலம் ஊடகங்களுக்கு செய்திகள் மற்றும் அறிக்கைகள் அனுப்பப்படும் dgi@dgi.lk என்ற ஈமெயில் மூலம் இந்த உத்தியோக பூர்வ தேர்தல் முடிவுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதற்கு மேலதிகமாக அரசாங்க தகவல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வாட்ஸ் அப் Dgi Priority group 01,Dgi Priority group 02 மற்றும் All TV News Head's மூலமும் அந்த பெறுபேறுகள் வெளியிடப்படவுள்ளதாகவும் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.



(85ஆவது ஆண்டு நிறைவு சிறப்பு) நேர்காணல்

## பெருநிறுவன மற்றும் வெளிநாட்டு வங்கிச்சேவை மூலோபாயங்களூடாக நாட்டின் பொருளாதாரத்துக்கு உறுதுணையளிக்கிறது இலங்கை வங்கி!

### இலங்கை வங்கியின் பெருநிறுவன மற்றும் வெளிநாட்டு வங்கிச்சேவைப் பிரிவின் பிரதிப் பொது முகாமையாளர் எம்.ஆர்.என்.ரோஹண குமாரவுடனான உரையாடலில் இருந்து....

[illegible]

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆவணி மாதம் 10ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ஸபர் பிறை 21

## குறள் தரும் சிந்தனை



பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண்

*பிறன் மனைவியிடம் முறைகேடாக நடக்க நினைப்பவனிடமிருந்து பகை, தீமை, அச்சம், பழி ஆகிய நான்கும் நீங்குவதில்லை.*

# இலங்கையர்களுக்கு ஆறுதலளிக்கும் இஸ்ரேலிலுள்ள தூதுவரின் செய்தி

தெற்கு லெபனானில் செயற்படும் ஹிஸ்புல்லாஹ் போராளிக்குழுவினர் நேற்றுமுன்தினம் அதிகாலையில் இஸ்ரேல் பிரதேசங்கள் மீது அதிகளவிலான ரொக்கட்டுகளை ஏவி தாக்குதல்களை மேற்கொண்டனர். கடந்த ஜுலை 31 ஆம் திகதி பெய்ரூட் நகரில் வான்வழித் தாக்குதலில் ஹிஸ்புல்லாஹ்வின் முக்கியஸ்தர் புவாட் சுஹுர் கொல்லப்பட்டதற்கு பழிவாங்கும் வகையில் இத்தாக்குதல் முன்னெடுக்கப்பட்டதாக ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளது.

ஹிஸ்புல்லாஹ்வின் தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் தெற்கு லெபனான் பிரதேசங்கள் மீது இஸ்ரேல் விமானத் தாக்குதல்களை மேற்கொள்ளவும் தவறவில்லை.

காஸா மீதான யுத்தத்தை நிறுத்தக் கோரி கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 08 ஆம் திகதி முதல் இஸ்ரேல் மீது ரொக்கட், ட்ரோன் தாக்குதல்களை ஹிஸ்புல்லாஹ் ஆரம்பித்தது. அதனைத் தொடர்ந்து இஸ்ரேலும் ஹிஸ்புல்லாஹ்வும் எல்லை தாண்டிய வான்வழித் தாக்குதல்களைத் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது.

ஹிஸ்புல்லாஹ் நேற்றுமுன்தினம் முன்னெடுத்த ரொக்கட் மற்றும் ட்ரோன் தாக்குதல்களைத் தொடர்ந்து இஸ்ரேல் காலை முதல் 48 மணித்தியாலயங்கள் அவசர நிலையைப் பிரகடனப்படுத்தியது. பென்கூரியன் சர்வதேச விமான நிலையத்தின் ஊடான விமான சேவைகளும் மறுஅறிவித்தல் வரை உடனடியாக நிறுத்தப்பட்டதோடு, இஸ்ரேலிய அமைச்சரவையும் அவசர அவசரமாகக் கூடியது.

இந்த யுத்த பரபரப்பு சூழ்நிலை உள்நாட்டிலும், பிராந்திய மற்றும் சர்வதேச ஊடகங்களிலும் நேற்றுமுன்தினம் முக்கிய இடத்தைப் பெற்றது.

இந்தச் சூழலில் இஸ்ரேலில் பணியாளர்களாக தொழில் புரிபவர்களின் குடும்பத்தினரும் உறவினர்களும் நண்பர்களும் அவர்களது நலன்களை அறிந்து கொள்வதில் அதிக சிரத்தை எடுத்துக் கொள்ளும் நிலை ஏற்பட்டிருந்தது. குறிப்பாக இலங்கையைச் சேர்ந்த 11 ஆயிரம் பேர் இஸ்ரேலில் உள்ளனர். அவர்களில் சுமார் 2 ஆயிரம் பேர் ஹிஸ்புல்லாஹ்வின் தாக்குதல்களுக்கு இலக்காகும் வடக்கு இஸ்ரேலின் கலிலி, ஹைபா, கோலன், நாயரன் போன்ற பிரதேசங்களில் உள்ளனர்.

இவ்வாறான நிலையில் இஸ்ரேலில் இரண்டு நாட்கள் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டமை அவர்களது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியது. அதன் காரணத்தினால் பலர் இஸ்ரேலிலுள்ள தம் உறவினருடன் தொலைபேசி ஊடாக அடிக்கடி தொடர்பு கொண்டு நிலைமைகளைக் கேட்டறிந்து கொள்ளக் கூடிய நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

இன்னும் சிலர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடனும் இஸ்ரேலிலுள்ள இலங்கைத் தூதரகத்துடனும் தொடர்பு கொண்டு நிலைமைகளை கேட்டறிந்து கொள்கின்றனர்.

இந்நிலையில் இஸ்ரேலில் கடமையாற்றும் இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார, 'தற்போதைய சூழலில் இஸ்ரேலிலுள்ள இலங்கையர் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். 64 நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டவர்கள் இஸ்ரேலில் இருக்கின்றனர். என்றாலும் இத்தகைய தாக்குதல்களால் எவரும் பாதிப்புக்கு உள்ளாகவில்லை. தற்போதைய யுத்த நிலை முழு அளவிலான போராக உருவெடுக்குமாயின் இலங்கையரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது' என்று கூறியுள்ளார்.

இந்த அறிவிப்பு இஸ்ரேலில் பணியாற்றும் இலங்கைத் தொழிலாளர்களின் குடும்ப உறவினர்கள், நண்பர்களுக்கு ஆறுதலாகவும் நம்பிக்கை அளிப்பதாகவும் அமைந்துள்ளது. இதேவேளை லெபனானிலும் சுமார் 7000 இலங்கையர் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அங்கும் யுத்தப் பதற்றம் நிலவிவருவது தெரிந்ததே.

இந்த யுத்த நிலைமையானது இஸ்ரேல், லெபனான், பலஸ்தீன், காஸா, மேற்குக்கரை மக்களுக்கு மாத்திரமல்லாமல் ஏனைய பிராந்தியங்களையும் நாடுகளையும் சேர்ந்த மக்களையும் பாதிப்பதாகவே அமைந்துள்ளது. இஸ்ரேல், லெபனான், ஜோர்தான் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளில் இலங்கை உட்பட உலகின் பல நாடுகளைச் சேர்ந்த பெருந்தொகையான மக்கள் தொழிலாளர்களாக உள்ளனர். அவர்களையும் இந்த யுத்தம் பாதிக்கவே செய்யும். சில சமயம் தொழில்களைக்கூட இழக்க நேரிடலாம். யுத்தத்திற்கு நாடு, இனம், மதம் மற்றும் மொழி பேதம் கிடையாது. அது எல்லோரையுமே பாதிக்கக் கூடியது. யுத்தம் எங்கு நடந்தாலும் இழப்பாகவும் அழிவாகவுமே இருக்கும். அதனால்தான் மனிதநேயத்தை விரும்பும் எவரும் யுத்தத்திற்கு ஆதரவளிப்பதுமில்லை, ஒத்துழைப்பதுமில்லை.

ஆகவே அழிவுகளையும் சேதங்களையும் பேரழிவுகளையும் ஏற்படுத்தக்கூடிய யுத்தத்தை தவிர்ப்பதற்காக அனைத்து தரப்பினரும் முன்வர வேண்டும் என்று பரவலாக வலியுறுத்தப்படுகிறது. அமைதி சமாதானத்தை விரும்பும் அனைத்து மக்களதும் எதிர்பார்ப்பும் யுத்தமற்ற அமைதியான உலகமேயாகும்.

editor.tkn@lakehouse.lk

# சுவிற்சர்லாந்தில் வசிக்கும் சரளா விமல்ராஜ் எழுதிய நான்கு நூல்கள் அக்கரைப்பற்றில் 31 இல் வெளியீடு

## கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதி

சித்தானைக்குட்டி சுவாமிகளின் ஆசிர்வாதம் பெற்றவரும், அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று, பனங்காட்டில் பிறந்து 30 வருட காலமாக சுவிற்சர்லாந்து நாட்டில் வாழ்ந்துவருபவருமான பாவலர்மணி திருமதி சரளா விமல்ராஜ் அவர்களின் நான்கு மரபுக்கவிதை நூல்கள் எதிர்வரும் 31ஆம் திகதி அக்கரைப்பற்றில் நடைபெறவிருக்கின்றது.

சமூக சேவையாளரும், தமிழ் கலை இலக்கியவாதியுமான திருமதி சரளா விமல்ராஜ் அவர்களின் இந்நூல்களின் வெளியீடானது அக்கரைப்பற்று சுவாமி விபுலாந்தா சிறுவர் இல்லம் மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அக்கரைப்பற்று இந்து இளைஞர் மன்றம் மற்றும் பிரான்ஸ் கம்பன் கழகம் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்நிகழ்வு இறைபணிச் செம்மல் த.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெறும். நூல் வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்து கொள்வதுடன், அருளாளர்களாக மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிசன் தலைவர் ஸ்ரீமத் நீலமாதவானந்தா ஜீ மகராஜ் மற்றும் பனங்காடு பாசுபதேசுவரர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ புண்ணிய கிருஷ்ண குமாரக்குருக்கள் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

விசேட அதிதிகளாக அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரன், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ.ஜெகராஜன் மற்றும் பிரதேச செயலாளர்கள், கல்வி அதிகாரிகள், கவிஞர்கள், சமூக ஆர்வலர்கள் கலந்து கொள்கின்றனர்.

பாவலர்மணி திருமதி சரளா விமல்ராஜ் பல நூல்களை இதுவரையில் வெளியிட்டுள்ளார். நான்கு மரபுக்கவிதை நூல்களைத் தொகுத்து இலங்கையில் அவர் வெளியிடவுள்ளார்.










தமிழர் பண்பாட்டிலக்கியம் கமழும் 'விருத்தமாயிரம்', அவரது மண்ணின் புகழ்பாடும் 'பனங்காட்டு அந்தாதி', குருவுக்கு மரியாதை செய்யும் 'பாட்டரசர் புகழ் கலி விருத்தம்' மற்றும் சிந்தை மகிழும்'சிந்து பாடுவோம்' ஆகிய நான்கு ஆக்கங்களை அவர் வெளியிடுகின்றார்.

அவர் வெளிநாடுகளில் வழங்கப்படும் பல விருதுகளையும் பெற்றுள்ளார்.

கலை இலக்கிய ஆர்வலர் மட்டுமல்லாது தனது சொந்த செலவில் பல சமூகசேவைகளையும் செய்துவரும் இவர், உலகத் தமிழர் கலை மற்றும் பண்பாட்டுப் பேரவையின் சுவிற்சர்லாந்து கிளையின் தலைவராகவும் செயலாற்றி வருகின்றார்.



**வி.சுகிர்தகுமார்...**
*(வாச்சிக்குடா விஷேட நிருபர்)*

# மருத்துவ அலட்சியத்தால் சம்பவிக்கும் மரணங்களும் ஊடகங்கள் கடைப்பிடிக்க வேண்டிய அறநெறியும்

மருத்துவ அலட்சியத்தால் மன்னாரில் மரணமடைந்த இளம் தாயின் கணவர் நீதி தாமதிக்கப்பட்ட நிலையில் தவறான முடிவினை எடுத்த தகவலானது மனதைப் பெரும் வேதனைக்கு உள்ளாகியுள்ளது.

தவறான முடிவுகள் ஒருபோதும் பிரச்சினைகளுக்குத் தீர்வாகாது என்பதுடன் ஊடகங்கள், மருத்துவர் ஒருவர் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகிய தரப்பினர் மேலும் பொறுப்புடன் செயல்பட்டு இருந்தால் இந்த அநாவசிய இறப்புத் தவிர்க்கப்பட்டு இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

2014 இல் முதன் முதலில் தமிழ்மொழியில் வெளியிடப்பட்டு 2017இல் மேம்படுத்தப்பட்ட தற்கொலை தொடர்பான தகவல்களை வெளிப்படுத்துவதில் ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக வலைதளங்களைப் பயன்படுத்துவோரின் பாரிய பொறுப்பை மீண்டும் நினைவுபடுத்துகிறேன்.




குறிப்பாக தற்கொலையை நியாயப்படுத்துவது, தற்கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட முறைகளை வெளிப்படுத்துவது, மற்றும் தற்கொலை செய்தவரின் பெயர் விபரங்களை வெளியிடுவது ஆகியன, சமூகத்தில் தாமும் பாதிக்கப்பட்டுள்ளதாக உணரும் ஏனையவர்களையும் தற்கொலை செய்யத் தூண்டும் என்பதை அனைவரும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

மன்னாரில் இளம் தாயின் மரணத்தைத் தொடர்ந்து ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகர்கள், வலையொளி (Youtube) ஊடகர்கள் எனப் பலரும் ஊடக ஒழுக்கநெறியினைப் பல சந்தர்ப்பங்களில் வெளிப்படையாக மீறியுள்ளனர். முக்கியமாக இறந்தவரின் தனிப்பட்ட வாழ்க்கையை ஆராய்ந்து "யார் குற்றவாளி" என்று கருத்து வெளியிடும் நீதிபதிகளாக ஊடகவியலாளர்கள் குறிப்பாக Youtube பதிவாளர்கள் செயல்படுவது ஏற்கனவே குடும்ப உறுப்பினரின் உயிரிழப்பால் பாதிக்கப்பட்டுள்ள உறவினர்களின் மனவேதனையை அதிகரித்து வெந்த புண்ணில் வேல் பாய்ச்சி அவர்களை மோசமான முடிவுகளை எடுக்க தூண்டுகிறது.

இதனாலேயே பல சந்தர்ப்பங்களில் பொறுப்புடன் செயல்படும் ஒரு சிலரைத்தவிர ஏனைய Youtube பதிவாளர்களையும் சமூக ஊடகர்களையும் பொறுப்பற்ற தமது இலாபத்தையே குறிக்கோளாக கொண்டு செயல்படும் பிணந்தின்னிக் கழுகுகளாக கருத வேண்டியுள்ளது.

இளம் தாயின் இறப்பு தொடர்பான விசாரணையில் பணி இடைநீக்கம் செய்யப்பட்ட சுகாதார ஊழியர்களின் பெயர்களை ஊடகங்கள் எந்தவித சுயகட்டுப்பாடும் இன்றி வெளிப்படுத்தி ஊழியர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் களங்கத்தை ஏற்படுத்தியுள்ளன. பணி இடைநீக்கம் என்பது ஆரம்ப கட்ட விசாரணைகளின் போது சந்தேகத்துக்குரிய ஊழியர்கள் மீது எடுக்கப்படும் தற்காலிக நடவடிக்கை ஆகும். இரண்டு மாதங்களுக்குள் ஆரம்ப கட்ட விசாரணை பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதுடன் அதன்பின் முறையான விசாரணை ஆரம்பிக்கப்பட்டு சம்பவம் நடந்து 6 மாதங்களுக்குள் விசாரணை பூர்த்தி செய்யப்பட்டு குற்றவாளிகளென இனங்காணப்படுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஆரம்ப கட்ட விசாரணைகளில் பணி இடைநீக்கம் செய்யப்பட்ட பலர் பின்னர் முறையான விசாரணையில் குற்றம் அற்றவர்கள் என்று நிரூபிக்கப்பட்டு பணி இடைநீக்கம் செய்யப்பட்ட காலத்துக்கான சம்பளத்துடன் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். எனவே ஆரம்பகட்ட விசாரணைகளில் பணி இடைநீக்கம் செய்யப்பட்டவரின் பெயர் விபரங்களை அவர் இன்னமும் குற்றவாளி என்று நிரூபிக்கப்படாத நிலையில், ஊடகங்கள் வெளிப்படுத்தி சம்பந்தப்பட்டோர் சமூகத்தில் குற்றவாளியாக வெளியே நடமாட முடியாதவாறு செய்வது ஊடகங்களின் ஒழுக்கநெறியை மீறிய அராஜக செயலாகவே கருத வேண்டியுள்ளது.

இவரது மரணத்திற்குப் பொறுப்புச் சொல்லவேண்டிய கடமை இன்னொரு தரப்பினருக்கும் சம அளவில் உண்டு. கர்ப்பகாலத் தாயார் ஒருவரது இழப்பு எவராலும் ஈடுகட்டமுடியாத இழப்பு. அதனால் குறித்த தாயாரது குடும்பத்தவர்கள் நெருங்கியவர்கள் என அனைவரும் சுகாதாரத்துறையினரது உளவள மருத்துவப் பிரிவினர் மற்றும் தாய்சேய் நலப்பிரிவினர் ஆகியோரால் நெருக்கமான அரவணைப்பு மற்றும் ஆற்றுப்படுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட வேண்டும். அவ்வாறு உள ஆற்றுப்படுத்துகைக்குச் சென்ற உளவளத்துணையாளர்கள் சம்பந்தப்பட்ட குடும்பத்தினரால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றும், சுகாதாரதுறையினர் தொடர்பில் வழங்கப்படும் எதிர்மறையான தகவல்களால் சுகாதாரப் பணியாளர்களை எட்ட வைத்திருக்கவே அக்குடும்பத்தினர் விரும்பினர் என்றும் தெரியவருகிறது.

குறித்த செயற்பாட்டால் சுகாதாரப் பணியாளர்கள் மனச்சோர்வடைந்தும், பொறுப்பற்ற ஊடக வசைச் சொற்களால் அச்சமடைந்தும் போனதால் அக்குடும்பத்தைத் தமது அரவணைப்பில் வைத்திருக்காது விலகியிருக்கலாம்.

அதேபோல் ஒரு இணையத் தளத்தில் மன்னார் இறப்பு தொடர்பாக கருத்து வெளியிட்ட வைத்தியர் ஒருவரின் குடும்பப் புகைப்படங்களுடன் பாலியல் ரீதியாகக் கொச்சைப்படுத்தும் கட்டுரைகளை வெளியிடுவது ஊடக தர்மத்துக்கு விரோதமானதாகும். இது போலவேமாபியா குழு உறுப்பினர்களினால் இயக்கப்படும் அநாமதேய முகநூல் பதிவுகளை, கருத்துகளைப் பதில் கருத்துக்களால் எதிர்கொள்ள முடியாத கோழைகள் தனிநபர்களையும் அவர்களது குடும்பங்களையும் தனிப்பட்ட ரீதியாகத் தாக்கும் கேவலமான செயலாகவே எடுத்துக் கொள்ளலாம். இவை ஒருபுறம் இருக்க, மன்னார் இளம் தாயின் மரணத்துக்காக இதுவரை ஒருவர் கூட கைது செய்யப்படாதது அனைவரின் மனதிலும் பெரும் கிலேசத்தினை எழுப்பியுள்ளது. காலம் கடந்த நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு சமமாகும் [Justice delayed is justice denied] என்பது ஒரு சட்ட அறம் என்பதை சம்பந்தப்பட்ட அனைவரும் மனத்தில் இருத்தி விரைவான நீதியைப் பெற முற்படுவதே இழந்த உயிர்களுக்கும் பிஞ்சுக் குழந்தைக்கும் செய்யும் கைமாறாக இருக்கும்.

வட பகுதியில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் நேர்மையான மருத்துவர்கள், கட்சி அரசியல் செய்யாத சட்டத்தரணிகள், சமூக நீதிக்காக குரல் கொடுப்போர் மற்றும் ஊறுபடும் நிலையில் உள்ள பெண்களுக்காக குரல் கொடுக்கும் அமைப்புகள் ஒன்றிணைந்து ஒரு தன்னார்வ சுயாதீனக் கட்டமைப்பினை மாவட்டங்கள் தோறும் ஏற்படுத்தி வைத்தியசாலைகளில் இடம்பெறும் ஒவ்வொரு உயிரிழப்பிலும் மருத்துவ அலட்சியம் இருந்ததா என்பதை ஆராய்ந்து பாதிக்கப்பட்ட நோயாளிகள் மற்றும் உறவினர்களுக்கு உதவ முன்வரவேண்டும்.

மருத்துவ அறநெறியை [medical ethics] கற்பிக்கும் ஆசிரியர் என்ற வகையில் நான் எப்போதும் எனது பக்கச்சார்பற்ற ஆலோசனைகளை வழங்க தயாராக இருக்கிறேன். ஆனால் அதற்கான எழுச்சி பாதிக்கப்படும் பிராந்தியங்களில் இருந்து உருவாக வேண்டும். அதன் மூலமாகவே வவுனியா உட்பட வடபகுதியில் தொடர்ச்சியாக கவனக்குறைவு காரணமாக இடம்பெறும் தாய் மற்றும் சிசு மரணங்கள் தவிர்க்கப்படலாம்.



**Dr. முரளி வல்லிபுரநாதன்...**
சமுதாய மருத்துவ நிபுணர்

# சவுதி அரேபியாவில் 44 ஆவது சர்வதேச அல்-குர்ஆன் மனனப்போட்டி நிறைவு

வருடம் தோறும் புனித அல்குர்ஆன் மனனப்போட்டிகளை சவூதி அரேபியா நடத்தி வருகிறது. அதன் தொடரில் 44 ஆவது தடவையாகவும் புனித மக்கா நகரில் புனித மஸ்ஜிதுல் ஹறாமில் மன்னர் அப்துல் அஸீஸ் சர்வதேச அல்குர்ஆன் மனனப் போட்டி சிறப்பாக நிறைவுற்றது.

'அல்குர்ஆன் மனனம், அதன் விளக்கம் மற்றும் அதனை ஓதுதல் என்பவற்றுக்கான மன்னர் அப்துல் அஸீஸ் சர்வதேசப் போட்டி' என்பதே இப்போட்டியின் உத்தியோகபூர்வ மகுடமாகும். இது 1979 (ஹி 1399) ஆம் வருடம் தொடக்கம் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. இதுவரை இப்போட்டிகளில் 6790 போட்டியாளர்கள் உலகில் நாலாபாகங்களில் இருந்தும் கலந்துகொண்டுள்ளனர். வருடாவருடம் புனித மக்கமா நகரில் புனித மஸ்ஜிதுல் ஹறாமில் நடைபெறும் இப்போட்டியானது 44 ஆவது தடவையாக சென்ற வாரம் மிக வெற்றிகரமாக நடந்தேறியது. அதன் இறுதிக்கட்ட பரிசளிப்பு நிகழ்வுகளும் நிறைவுற்றன.

இப்போட்டி ஐந்து பிரிவுகளைக் கொண்டது. அதில் முதலாம் பிரிவு அல்குர்ஆனை முழுவதுமாக தஜ்வீத் முறைப்படி மனனமாக ஒப்புவிப்பதுடன் அதனை ஓதும் ஏழு முறைக் கிறாஅத்துகளையும் விளக்கத்துடன் ஒப்புவிப்பது.

இரண்டாம் பிரிவு அல்குர்ஆனை முழுவதுமாக தஜ்வீத் முறைப்படி மனனமாக ஒப்புவிப்பதுடன்; அதன் தப்ஸீர் விளக்கங்களையும் தெரிந்திருப்பது. மூன்று அல்குர்ஆனை முழுவதுமாக தஜ்வீத் முறைப்படி மனனமாக ஒப்புவிப்பது.

நான்கு அல்குர்ஆனின் பதினைந்து ஜுஸ்உகளை தொடராக தஜ்வீத் முறைப்படி மனனமாக ஒப்புவிப்பது.

## ரூபா 40 கோடியை தாண்டிய பணப்பரிசில்கள்

ஐந்து அல்குர்ஆனின் ஐந்து ஜுஸ்உகளை தொடராக தஜ்வீத் முறைப்படி மனனமாக ஒப்புவிப்பது. இக்கடைசிப் பிரிவு (OIC) அங்கம் வகிக்காத நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாணவர்களுக்குரியதாகும்.

இம்முறை 123 நாடுகளைச் சேர்ந்த 174 போட்டியாளர்கள் பங்கேற்றனர். இவர்களில் 17 நாடுகளைச் சேர்ந்த 21 வெற்றியாளர்கள் மாபெரும் பணப்பரிசில்களைத் தட்டிக்கொண்டனர்.



முறையே சவூதி அரேபியா, வங்காளதேசம், நைஜீரியா, மாலி குடியரசு, ஆகிய நாடுகள் தலா இரண்டு பரிசில்களை வென்றுள்ளன.

மேலும் ஜோர்தான், அல்ஜீரியா, பிலிப்பைன்ஸ், லிபியா, யமன், பாலஸ்தீனம், இந்தோனேஷியா, அமெரிக்கா, ரீயூனியன் தீவு, ஜெர்மனி, அவுஸ்திரேலியா, மியன்மார் (பர்மா), பொஸ்னியா ஆகிய நாட்டு மாணவர்களும் பரிசில்களை வென்றுள்ளனர்.





முதலாம் பிரிவின் முதல் பரிசாக ஐந்து இலட்சம் சவுதி ரியால்கள் வழங்கப்பட்டன. அதாவது இலங்கை ரூபாவில் சுமார் 40 மில்லியன் ஆகும். அதேபோன்று இரண்டாம் இடம் 4.5 இலட்சம், மூன்றாம் இடம் நாலு இலட்சம் என அந்த பரிசில்களின் பட்டியல் தொடர்கின்றது. முழுவதுமாக வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் மாத்திரம் 4 நான்கு மில்லியன் சவூதி ரியால்களை எட்டியது. மேலும் பங்குபற்றியவர்கள் அனைவருக்குமாக ஒரு மில்லியன் சவூதி ரியால்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. மொத்தம் ஐந்து மில்லியன் சவூதி ரியால்கள் போட்டியாளர்களுக்கு மாத்திரம் பணமாக வழங்கப்பட்டுள்ளன. அதாவது இலங்கை ரூபாயில் சுமார் 400 மில்லயன் (40 கோடி) ஆகும்.

இம்முறை இப்போட்டியில் இலங்கைச் சேர்ந்த ஹாபிழ் அப்துர் ரவுப் முஹம்மத் ஷிபாக் கலந்துகொண்டார். அவரை இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானி தனது உத்தியோகபூர்வ அலுவலகத்தில் வைத்து வாழ்த்தி வழியனுப்பியிருந்தார்.



**கலாநிதி அம்ஜத் ராஸிக்...**
*(சவூதி அரேபிய ஆய்வுகளுக்கான ஆர்வலர்)*

# பணி வாழ்வில் இறைவனின் குரலாகசெயற்பட்ட புனித திருமுழுக்கு யோவான்

ஆகஸ்ட் 29ஆம் திகதி புனிதரின் சிரசு துண்டிக்கப்பட்ட நாள் நினைவு கூறப்படுகின்றது



கத்தோலிக்கத் திருச்சபையில் அன்னை மரியாளுக்கு அடுத்தபடியாக இரண்டு திருவிழாக்கள் புனித திருமுழுக்கு யோவான் பெயரால் கொண்டாடப்படுகின்றன.

அதற்கிணங்க அவருடைய பிறந்தநாள் ஜூன் 24ஆம் திகதி திருவிழாவாக கொண்டாடப் படுவதுடன் ஆகஸ்ட் 29ஆம் திகதி புனிதரின் சிரசு துண்டிக் கப்பட்ட நாள் நினைவு கூறப்ப டுகின்றது.

செக்கரியாவுக்கும் ஆரோன் குலத்து எலிசபெத்துக்கும் அவர்கள் முதிர் வயதாக இருந்தபொழுது திருமுழுக்கு யோவான் பிறந்ததாக புனித லூக்கா முதலாம் அதிகாரம் தெரிவிக்கின்றது.

அவர் பிறக்கும் முன்பே அவரது பிறப்பு தொடர்பாக முன்னறிவிக்கப்பட்டதுடன் இயேசு கிறிஸ்துவின் தாயார் மரியாள் மூலம் வாழ்த்தப் பெற்றவராகவும் அவர் புகழ் பெறுகிறார்.

அவரது தூதுப் பணிகளில் தமது சீடர்களுக்கு இறை வேண்டல் செய்வதற்கு கற்பித்துக் கொடுத்ததை விசேடமாக குறிப்பிட முடியும். ஏனென்றால் அவர்கள் இறைவேண்டல் செய்ததை பார்த்த இயேசுவின் சீடர்கள் கூட யோவான் தம் சீடர்களுக்கு இறைவேண்டல் செய்யக் கற்று கொடுத்தது போல எங்களுக்கும் நீங்கள் கற்றுக் கொடுக்க வேண்டும் என கேட்கின்றனர் என்பதையும் புனித லூக்கா நற்செய்தி முதலாம் அதிகாரம் நமக்கு கூறுகின்றது.

புனித திருமுழுக்கு யோவான் தமது பணி வாழ்வில் இறைவனின் குரலாக செயற்பட்டு மக்களுக்கு நீதியை எடுத்துரைத்து அநீதியை கண்டிப்பவராகவும் காணப்படுகின்றார்.

அவர் புதிய ஏற்பாட்டின் தொடக்கமாகவும் பழைய ஏற்பாட்டின் நிறைவாகவும் இரண்டையும் இணைக்கும் இணையற்ற இறைவாக்கினராவார்.

அத்தகைய புகழ்பெற்ற இறைவாக்கினர்; ஏரோது அரசன் ஒரு பெண்ணுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முற்பட்டு திருமுழுக்கு யோவான் தலை துண்டிக்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டார் என்பது கசப்பான உண்மை.

அந்த திருவிழாவையே ஆகஸ்ட் 29ஆம் திகதி புனித திருமுழுக்கு யோவான் சிரசு துண்டிக்கப்பட்ட நினைவாக கத்தோலிக்கத் திருச்சபை அனுஷ்டிக்கிறது.

பரிசுத்த வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர்கள் பலரும் தமது உயிரை தியாகம் செய்கின்றமை பாலைவனத்தில் ஒலித்த குரலான திருமுழுக்கு யோவான் தாவீது அரசனின் தவறை சுட்டிக் காட்ட தன் தலையை அடகு வைத்ததாக வேதாகமம் மூலம்அறிய முடிகிறது. அந்தவகையில் திருமுழுக்கு யோவானின் மரணத்துக்கு காரணமான மூன்று விடயங்களை நாம் பார்க்கலாம். முதலாவது குடிபோதையில் தாம் செய்வது இன்னதென்று தெரியாத நிலையில் அரசனால் கொடுக்கப்பட்ட வாக்குறுதி.

இரண்டாவது இச்சையை தூண்டும் ஒரு கேவலமான நடனம். மூன்றாவது பழிவாங்கத் துடித்த அரசின் கொடூரமான நாடகம்.புனித திருமுழுக்கு யோவானின் நடந்து வந்த பாதையை யும் அவர் ஏற்றுக்கொண்ட மரணத்தையும் நம் வாழ்வின் படிப்பினையாக கொள்ளவேண்டும்.

**எல்.எஸ்**

# "உன் முழு இதயத்தோடும் உன் முழு உள்ளத்தோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக!"

## ஆண்டின் பொதுக்கால 21ஆம் வார இறைவாக்கு வழிபாடு

"உன் முழுஇதயத்தோடும், உன் முழுஉள்ளத்தோடும், உன் முழு ஆற்றலோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக!" என்ற பரிசுத்த வேதாகம வார்த்தைக் கேற்ப நாம் கடவுளை முழுதாய் அன்பு செய்ய வேண்டும்.

ஆண்டின் பொதுக்காலம் 21ஆம் கிழமையில் அடியெடுத்து வைக்கும் நாம் கிறிஸ்தவர்களாய் எப்படிப்பட்ட வாழ்வு வாழ வேண்டுமென்று பறைசாற்றுகிறது. கடந்த ஞாயிறு இறைவாக்கு வழிபாடு. கத்தோலிக்க கிறிஸ்தவர்களாய் வாழும் நாம் அத்தகைய நம்பிக்கையை எவ்வாறு அணுக வேண்டும் என்பதை உறுதியாய் சொல்கிறது.. கடவுள் ஒரு நாளும் நம்மைவிட்டு அகல்வதில்லை. ஒரு நாளும் நம்மை விட்டு விலகுவதில்லை. ஒரு பொழுதும் நம்மைவிட்டு அகன்று போவதில்லை. இதைத்தான் இறைவார்த்தைகளின் பின்னணியில் சிந்திக்கின்றோம்:

(எரே 30:22 ) "நீங்கள் என் மக்களாய் இருப்பீர்கள். நான் உங்கள் கடவுளாய் இருப்பேன்" (விப 20:23 ) "நானே உன் கடவுளாகிய ஆண்டவர் அடிமை வீடாகிய எகிப்து நாட்டினின்று உன்னை வெளியேறச் செய்தவர். என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கு இருத்தலாகாது"(திபா 121:450 "இதோ, இஸ்ரயேலைக் காக்கின்றவர் கண்ணயர்வதுமில்லை. உறங்குவதும் இல்லை. ஆண்டவரே உம்மைக் காக்கின்றார். அவர் உம் வலப்பக்கத்தில் உள்ளார். அவரே உமக்கு நிழல் ஆவார்!"

(கலாத் 3:26) "கிறிஸ்து இயேசுவின் மீது கொணடுள்ள நம்பிக்கையால் நீங்கள் அனைவரும் கடவுளின் மக்களாய் இருக்கிறீர்கள்"

இவ்வாறாயக இறைவன் தன்னை தன் மக்களுக்காய் வழங்கினார். தன்னை நம்பி வந்த மக்களை இறைவன் எந்நாளும் பாதுகாத்தார் என்று விவிலியம் பறைசாற்றுகிறது. இதைத்தான் விப 2:25 இல் 'கடவுள் தன் மக்கள் படும் துன்பத்தைக் கண்டார்' என்றும் அதன்பின்னர் அவர்களுக்கு மோசே வழியாய் வாழ்வு தந்தார் என்றும் பார்க்கின்றோம். இத்தகைய இறைவன் எவ்வாறெல்லாம் நம் வாழ்வில் நம்மோடு இருக்கிறார் என்பதை சிந்திக்க அழைப்பு விடுகிறது இந்த ஞாயிறு வழிபாடு

யோசுவா செக்கேமில் இஸ்ரயேலின் எல்லாக் குலங்களையும் ஒன்று சேர்த்து, நானும் என் வீட்டாரும் கடவுளுக்கே ஊழியம் புரிவோம் என்று கடவுளைவிட்டு அகன்று போகாத, அழைத்த இறைவனை நம்பியே வாழும் குடும்பமாய் தன்னையும் தன் குடும்பத்தையும் இறைவனிடத்தில் ஒப்படைக்கிறார்.

யோவான் நற்செய்தியின் 6ஆம் அதிகாரத்தில் நாம் வாசிப்பதுபோல இயேசு தன்னையே உணவாகவும், இரத்தமாகவும் கொடுக்கிறார். இதைச் சொல்கின்றபொழுது, 'இதை ஏற்றுக்கொள்வது மிகக் கடினம்: இப் பேச்சை இன்னும் கேட்டுக் கொண்டிருக்க முடியுமா?' என்று இயேசுவின் வார்த்தைக்கு எதிராகப் பேசிச் சிலர் அகன்று போக நினைக்கிறார்கள்.

மத் 12:30இல் 'என்னோடு இல்லாதவன் எனக்கு எதிராக இருக்கிறான்' என்ற இயேசுவின் வார்த்தைக்கேற்ப அந்நாளில் இயேசுவின் போதனைகளுக்கு எதிராகப் பேசினார்கள். அவரை



விட்டு விலகிப் போனார்கள். அப்போது இயேசு தன் திருத்தூதர்களைப் பார்த்து, "நீங்களும் போய் விட நினைக்கிறீர்களா?" (யோவா 6:67) என்று கேட்கிறார்.

அதற்கு, புனித பேதுரு "ஆண்டவரே நாங்கள் யாரிடம் போவோம்? நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன" என்று மறுமொழி தருகிறார். நாங்கள் உம்மை விட்டு எங்கு போவது என்று தங்கள் நம்பிக்கையை அறிக்கையிட்டு, உம்மைவிட்டு எங்களால் எதுவும் செய்ய இயலாது என்பதை எடுத்துரைக்கிறார்கள். இதைத்தான் யோவா 15:5இல் "என்னைவிட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது" என்று இயேசு கூறுவதைப் பார்க்கின்றோம்.

**அருட்பணி சூசை மாணிக்கம்**

லேவி 26:11 இல் "என் உறைவிடத்தை உங்கள் நடுவில் நிறுவுவேன். நான் உங்களை வெறுப்பதில்லை. உங்கள் நடுவே நான் உலவுவேன். நானே உங்கள் கடவுள்! நீங்கள் என் மக்கள்!" என்று சொன்னதை இயேசுவின் வழியாய் யாவே இறைவன் நிறைவேற்றினார். இதனை இன்னும் ஆழமாய் வலுப்படுத்தவே புனித பவுல் எபேசு நகர மக்களுக்கு இரண்டாம் வாசகத்தில் எழுதுகிறார்.

புனித பவுல் எபே 5: 2132ல் நாம் இறைவனோடு கொண்டிருக்கின்ற உறவு வாழ்வை கணவன் மனைவியிடையே உள்ள அன்புறவின் அடிப்படையிலும், இயேசுவுக்கும் திருஅவைக்கும் உள்ள உறவு ஒன்றிப்பின் அடிப்படையிலும் விளக்குகின்றார். அன்பு, பணிவு, கீழ்ப்படிதல், நம்பிக்கை இந்த நான்கின் பின்னணியில்தான் கணவன் மனைவி ஒன்றித்து வாழ முடியும். ஒற்றுமையின் விளைநிலமாய் விளைச்சல் அளிக்க முடியும் என்று உரைக்கின்றார். இதுதான் இயேசு விரும்பியது. அவரை விட்டு அகன்று போகாமல் இருக்க புனித பவுல் காட்டுகிற பாதை மேற்சொன்ன நான்கும்தான் ஆழமான அன்பு, பரந்துபட்ட பணிவு, உச்சக்கட்ட கீழ்ப்படிதல், அசையா நம்பிக்கை. இவை யாரிடத்தில் உள்ளதோ அவர்கள் ஆண்டவரை விட்டு அகன்று போகமாட்டார்கள். அப்படியென்றால் நமக்கான வாழ்க்கைப் பாடம் என்ன? ஆண்டவரை விட்டு அகன்று போகாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?

ஆண்டவரைஅன்பு செய்ய வேண்டும்

ஆண்டவருக்கு அடிமையாக வேண்டும்

ஆண்டவரை ஆழமாய் புரிந்துகொள்ள வேண்டும்

ஆண்டவர் மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொள்ள வேண்டும்

இச 6:5இல் "உன் முழுஇதயத்தோடும், உன் முழுஉள்ளத்தோடும், உன் முழு ஆற்றலோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக!" என்ற வார்த்தைக்கேற்ப நாம் கடவுளை முழுதாய் அன்பு செய்ய வேண்டும். யார் கடவுளை முழுமையாய் அன்புச் செய்கிறோமோ அவர்கள் கடவுளை விட்டு அகன்று போவதில்லை. ஏனென்றால் கடவுளின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கக் கூடியது எது? என்று உரோ 8:35இல் பவுல் கேள்வி கேட்கிறார்: "கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கக் கூடியது எது? வேதனையா? நெருக்கடியா? இன்னலா? பட்டினியா? ஆடையின்மையா? இடரா? சாவா? எதுதான் நம்மைப் பிரிக்க முடியும்? இவ்வாறாக இறைவன் மீது என் அன்பு ஆழமாய் இருந்தால் எதுவும் நம்மைக் கடவுளிடமிருந்து அகற்ற முடியாது என்பது தெளிவு.




# தல்கஸ்வெல புனித அன்னை தெரேசா ஆலய திருவிழா

## கொடியேற்றத்துடன் கடந்த சனிக்கிழமை ஆரம்பம்





காலி மறை மாவட்டத்தின் தல்கஸ்வெல புனித அன்னை தெரசாவின் ஆலய திருவிழா விமரிசையாக இடம்பெற்று வருகிறது. கடந்த 25ஆம் திகதி கொடியேற்றப்பட்டு திருவிழா நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டது டன் எதிர்வரும் செப்டம்பர் முதலாம் திகதி திருவிழா சிறப்பு கூட்டுத் திருப்பலி நிறைவேற்றப்படவுள்ளது.

அன்னை தெரேசா 26.08.1910 இல் அல்பேனியாவில் பிறந்தார். அன்னை தெரேசாவின் இயற்பெயர் எக்னஸ் கோன் ஜா.அல்பேனியா நாட்டை பூர்வீகமாகக் கொண்டிருந்தாலும் பின்னர் இந்திய குடியுரிமைப் பெற்று வாழ்ந்து வந்தார்.

1950 ஆம் ஆண்டு இந்திய கல்கத்தாவில், 'பிறர் அன்பின் பணியாளர்' என்ற கத்தோலிக்க துறவற சபையினை நிறுவினார். 50 வருடங்களுககு மேலாக ஏழை எளியவர்களுக்கும், நோய்வாய்ப்பட்டவர்களுக்கும், அனாதைகளுக்கும் இறக்கும் தருவாயில் கைவிடப்பட்டவர்களுக்கும் சாதி, மத பேதமின்றி மனிதாபிமான அடிப்படையில் தொண்டாற்றினார்.

இவர் முதலில் இந்தியாவிலும் பின்னர் வெளிநாடுகளிலும் 'பிறரன்பு பணியாளர்' சபையை நிறுவினார். இவர் 1979 இல் அமைதிக்கான நோபல் பரிசையும், 1980 இல் இந்தியாவின் சிறந்த குடிமக்கள் விருதான பாரத ரத்னா விருதையும் பெற்றார்.

இவர் 1997 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5ஆம் திகதி தனது 87 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார். இவர் இறக்கும் தருவாயில் 123 நாடுகளில் 610 தொண்டு நிறுவனங்கள் இயங்கிக் கொண்டிருந்தன. இதில் எயிட்ஸ், தொழு நோய், காச நோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நல்வாழ்வு மையங்கள், இலவச உணவு வழங்குமிடங்கள். குழந்தைகள், கைவிடப்பட்ட யுவதிகள் பராமரிப்பு குடும்பத்திற்கான ஆலோசனைத் திட்டங்கள், அனாதை இல்லங்கள், பள்ளிக் கூடங்கள் ஆகியவை அடங்கும்.

அன்னை தெரேசா இறந்த பின், அவரிடம் மன்றாடிய பலருக்கு அற்புதங்கள் நடந்தன. புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் கூட இவரது கல்லறையைத் தொட்டதால் குணமானதை உணர்ந்தார்கள். இப்புதுமைகள் அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டன. எனவேதான் அவருக்கு 2003 ஆம் ஆண்டு முத்திப் பேறு பெற்ற அருளாளர் பட்டமும், 2016 ஆம் ஆண்டு புனிதர் பட்டமும் வழங்கப்பட்டது. எமது இலங்கை திருநாட்டில் புனித தெரேசாவுக்கென்று காலி மறை மாவட்டத்தில் உள்ள தல்கஸ்வல என்ற இடத்தில் இப் புனிதைக்காகக் கட்டப்பட்ட முதலாவது ஆலயம் உள்ளது. 2010 ஆம் ஆண்டுவரை இப்பகுதில் வாழ்ந்த கத்தோலிக்க பக்தர்களுக்கு வழிபட ஓர் ஆலயம் இப்பகுதியில் இருக்கவில்லை. 25 – 30 கிலோ மீற்றருக்கு அப்பால்தான் ஆலயங்கள் இருந்தன.

மர நிழல்களிலும், வீட்டு முற்றங்களிலும் ஜெப வழிபாடுகளில் ஈடுபட்ட இம் மக்களுக்கு வழிபட நிலையான ஆலயம் ஒன்றை கட்ட 2010 ஆம் ஆண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போது, ஆலயத்துக்காக எந்த புனிதரைத் தெரிவு செய்வது என்ற விவாதம் எழுந்தது. தல்கஸ்வல தேயிலைத் தோட்ட மக்கள் ஒட்டு மொத்தமாக, ஏழை தொழிலாளிகளான எங்களுக்கு, ஏழைகளின் நேச தாயான அன்னை தெரேசா தான் எங்களுக்குப் பாதுகாவலியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

முத்திப் பேறு பெற்ற ஒருவரை பாதுகாவலியாக வைப்பதைவிட புனிதர் ஒருவரை நியமிப்பது தான் சிறந்தது என்று பல விமர்சனங்கள் கிளம்பிய போதும், தோட்டத் தொழிலாளிகள் தங்கள் கோரிக்கையில் உறுதியாக இருந்தார்கள்.

வேறு வழியின்றி அனைவரும் ஏற்றுக் கொள்ளவே, தேயிலைத் தோட்ட நிர்வாகத்தினரால், ஆலயம் கட்ட ஓர் இடம் ஒதுக்கித் தரப்பட்டது. கருநாகம், மலைப்பாம்பு போன்ற விஷ ஜந்துகளின் புகலிடமாக இருந்த அந்த இடத்தைச் சுத்தம் செய்து, தல்கஸ்வலயில் வாழ்ந்து வந்த 43 கத்தோலிக்க குடும்பங்களுடன் சேர்ந்து இந்து சமய மக்களும் ஒன்றிணைந்து இப்பணிக்கு ஒத்துழைப்பு வழங்கினர்.

அவ்விடத்தில் 500 க்கும் மேற்பட்டோர் அமர்ந்து வழிபடும் வகையில் ஓர் அழகிய ஆலயம் உருவானது. 21012 ஆம் ஆண்டு தை மாதம் 24ஆம் நாள் காலி மறைமாவட்ட ஆயர் கலாநிதி ரேமண்ட் விக்ரமசிங்க ஆண்டகையால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

நீரோடைக்கு அருகில் தேயிலை தோட்டத்திற்கு மத்தியில் இயற்கை எழில் கொஞ்சும் இதமான ஒரு இடத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

கல்கத்தாவில் உள்ள புனித தெரேசாவின் கல்லறையில் மட்டுமல்ல, இந்த ஆலயத்திலும் பல புதுமைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

குறிப்பாக குடும்பம் சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வு தரும் புனித பூமியாக இவ்வாலயம் திகழகிறது. காலி மறைமாவட்டத்;தைச் சேர்ந்த அருட்பணி கிரேஷியன் அடிகளார் 2010 ஆம் ஆண்டிலிருந்து மக்களோடு மக்களாக இருந்து பாடுபட்டு இவ்வாலயம் உருவாக பெரும் பங்காற்றியுள்ளார்.

2016 ஆம் ஆண்டு வரை இவரே இவ்வாலய பரிபாலகராக இருந்துள்ளார்.

அவரைத் தொடர்ந்து பொறுப்பேற்றுக் கொண்ட கார்மேல் சபையைச் சார்ந்த அருட்பணி அருண் ரெக்ஸ் அடிகளார் 2023 வரை பணியாற்றினார். இவரது பணிக் காலத்தில் இவ்வாலயம் ஒரு பங்கு கோவிலாக பிரகடனம் செய்யப்பட்டு, இவரே அவ்வாலயத்தின் முதல் பங்கு பணியாளராக செயலாற்றினார்.

இவரது சேவை காலத்தில், ஆலயம் மேலும் விஸ்தரிக்கப்பட்டு, மெருகூட்டப்பட்டது.

அவரைத் தொடர்ந்து 2023ஆம் ஆண்டிலிருந்து கார்மேல் சபையை சார்ந்த அருட்பணி இயேசு ராஜன் அவர்கள் பொறுப்பேற்று ஆலயத்தின் 2ஆவது பங்கி பணியாளராக செயலாற்றி வருகிறார். ஆலயத்தின் 12ஆவது வருடாந்த திருவிழா இம்மாதம் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

26 முதல் 30ம் திகதி வரை தினசரி மாலை 4.30 மணிக்கு நவநாள் திருப்பலி இடம்பெறும். 31 சனிக்கிழமை மாலை வெஸ்பர்ஸ் ஆராதனை இடம்பெறும். செப்டம்பர் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருவிழா கூட்டுத் திருப்பலி காலை 9.00 மணிக்கு காலி மறைமாவட்ட ஆயர் கலாநிதி ரேமண்ட் விக்ரமசிங்க ஆண்கையின் தலைமையில் இடம்பெற்று, திருச்சுரூப பவனியைத் தொடர்ந்து அன்னையின் திருச்சுரூப ஆசீர்வாதமும் வழங்கப்படும். நம்பிக்கையோடு ஜெபிக்கும் அனைவருக்கும், இறைவனின் ஆசீர்வாதம் கிடைக்கும். நலம் கிட்டும்.

**ஜெயக்குமார் பெர்னாண்டோ**

# தேர்தல் விதி மீறல் குறித்த முறைப்பாடுகள் அதிகரிப்பு

தேர்தல் விதிமுறை மீறல்கள் குறித்த முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுவரை,925 முறைப்பாடுகள்கிடைத்துள்ளதாக தேர்தல் ஆணைக் குழு தெரிவித்துள்ளது. மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையம் மற்றும் தேசிய தேர்தல் முகாமைத்துவ நிலையம் என்பன வற்றுக்கே இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.சொத்துக்கள் துஸ்பிரயோகம் உள்ளிட்ட பல்வேறு முறைப்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

# ஜனாதிபதி தேர்தல்; கருத்து கணிப்புகளுக்கு தடை வரலாம்

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் சமூக ஊடகங்கள் கருத்துக் கணிப்புக்கள் வெளியிடுவதைத் தடுப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

இந்த விவகாரம் தொடர்பில் தேசிய தேர்தல் ஆணைக்குழு கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வாரம் நடைபெறவுள்ள தேர்தல் ஆணைக்குழுக் கூட்டத்திலும் இதுபற்றி கலந்துரையாடப்பட உள்ளது. இவ்வாறான கருத்துக் கணிப்புக்களால், சில வேட்பாளர்களுக்கு பாதக நிலைமை ஏற்படுவதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த கருத்தக் கணிப்புக்களை மேற்கொள்ளும் தரப்புக்கள் யார் என்பது குறித்து கண்டறியும் நோக்கில், தேர்தல் ஆணைக்குழு ஆய்வு நடத்தியும் வருகிறது.

இந்த ஆய்வின் அடிப்படையில் கருத்துக் கணிப்புக்களை தடை செய்வதற்கான வழிமுறைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது.

இலத்திரனியல் அல்லது அச்சு ஊடகங்களில் நடத்டதப்படும் கருத்துக் கணிப்புக்களை ரத்து செய்வது இலகுவானது என்ற போதிலும், சமூக ஊடகங்களில் மேற்கொள்ளப்படும் கருத்துக் கணிப்புக்களை கட்டுப்படுத்துவது சவால் மிக்கது என்றும், தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தபால் மூல வாக்கு...

தெரிவித்துள்ளார். எதிர்வரும் செப்டம்பர் 4, 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் தபால் மூல வாக்களிப்பு இடம்பெறவுள்ளன. இந்நிலையில் தபால் மூல வாக்குச் சீட்டுகளை தபால் நிலையங்களுக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். அத்துடன் வாக்காளர் அட்டைகள் அச்சிடும் பணிகள் தற்போது நிறைவு பெற்று வருவதால்,அடுத்த மாதம் (03) முதல் அவற்றை விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் ஜனாதிபதித் தேர்தலை கண்காணிப்பு செய்வதற்காக, வருகை தந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கும் தேர்தல்கள் ஆணைக் குழுவின் அதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று நேற்று இடம்பெற்றுள்ளதறாகவும் அவர் தெரிவித்தார். தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் குறைந்த அளவிலேயே இடம்பெறுகின்றன என்பதைக் குறிப்பிட்ட அவர், இதே சூழ்நிலையை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு அனைத்து வேட்பாளர்களையும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். அதேவேளை, தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பான முறைப்பாடுகள் ஆயிரத்தைக் கடந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பொதுத் தேர்தலில் பிரதமர்...

என்பதை உறுதியாக குறிப்பிட முடியும் என்றும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (26) திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களை உள்ளடக்கிய வகையில், பரந்துபட்ட அரசியல் கூட்டணியை உருவாக்குவதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன. கூட்டணியின் பெயர் மற்றும் சின்னம் தொடர்பான விபரங்களை வெகுவிரைவில் அறிவிப்போம். மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரும், பிரதமருமான தினேஷ் குணவர்தன தலைமையில் பரந்துபட்ட அரசியல் கூட்டணி அங்குரார்ப்பணம் செய்யப்படும்.இந்த கூட்டணி ஊடாகவே பொதுத்தேர்தலில் போட்டியிடுவோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் தீர்மானத்திலேயே, பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ இருந்தார்.இதை,எம்மிடம் பலமுறை அவர் குறிப்பிட்டார். ஆனால் கட்சியின் நலன் விரும்பிகள் என்று குறிப்பிட்டுக் கொள்பவர்கள், இறுதி தருணத்தில் அவரை தவறாக வழிநடத்தினர்.

ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தேர்தலில் படுதோல்வியடைவார். கட்சியிலிருந்து விலகிச் சென்ற சிரேஷ்ட உறுப்பினர்களை மீண்டும் கட்சிக்குள் இணைத்துக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பலமுறை வலியுறுத்தினோம். இருப்பினும் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

## திருக்கயிலாய சூரியனார் கோயில் ஆதீனம் தினகரனில்




திருக்கயிலாய பரம்பரை கந்தப் பரம்பரை சூரியனார் கோயில் ஆதீனம் ஸ்ரீ கார்யம் அருட்குருநாதர் தவத்திரு ஸ்ரீ மத் சிவாக்ர தேசிக சுவாமிகள் நேற்று தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் ஆசிரியர் பீடத்திற்கு வருகை தந்து தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தெ. செந்தில்வேலவருக்கு ஆசி வழங்கினார். ஓராண்டு பூர்த்தியை விழாவை அண்மையில் ஹட்டனில் நடத்திய பிரணவம் அறக்கட்டளையின் ஸ்தாபகத் தலைவர் சித்ரவேல் ரமேஸ்பாபுவும் அருகில் காணப்படுகின்றார்.

# ஆறு மாதங்களில் 5000 பேருக்கு எலிக்காய்ச்சல்

## சுகாதாரப்பிரிவு மக்களுக்கு எச்சரிக்கை

நாட்டில் இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் சுமார் 5,000 எலிக் காய்ச்சல் நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழையுடனான காலநிலை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக வாந்தி, வயிற்றுப்போக்கு, காய்ச்சல் போன்ற நோய்கள் பரவும் அபாயம் உள்ளதாகவும் கூறப்படுகிறது.

இரத்தினபுரி, காலி, கேகாலை, மாத்தறை, களுத்துறை, மொனராகலை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் இந்நோயால் அதிக ஆபத்துக்கள் உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் ஏற்பட்ட பகுதிகளில் வாழும் மக்கள் உரிய சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிப்பது அவசியமென சுகாதார பிரிவினர் சுட்டிக் காட்டுகின்றனர்.இந்த நாட்களில் தசை வலி, தலைவலி, காய்ச்சல் மற்றும் வாந்தி போன்ற அறிகுறிகள் இருந்தால், முறையான மருத்துவ ஆலோசனையைப் பெறுவது கட்டாயமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நீர்க்கட்டணத்தை ஏழு வீதம்...

இதேபோன்று அரச வைத்தியசாலைகளுக்கான நீர்க்கட்டணத்தை 4.5 வீதமாகவும், பாடசாலை மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கான நீர் கட்டணங்களை 6.3 வீதமாகவும் குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்தின் பிரகாரம், 2024 ஆகஸ்ட் 21 முதல் நீர் கட்டணத்தை திருத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2024.07.16 திகதியிலிருந்து மின் கட்டணங்களை குறைப்பதற்கு இலங்கை மின்சார சபை தீர்மானம் எடுத்தது. இத்தீர்மானத்துக்கு அமைவாக நீர்கட்டணம் சம்பந்தமான நடைமுறை சூத்திரத்துக்கு அமைவாக இரசாயன திரவங்கள் உட்பட ஏனைய செலவினங்களை கருத்தில் கொண்டு நீர் கட்டணத்தை குறைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது. நீர்க் கட்டணம் குறைக்கப்படும் போது, ஒவ்வொரு வாடிக்கையாளரதும் நுகர்வின் அளவைப் பொறுத்து, மாதாந்த நீர் கட்டணம் கணிசமான அளவு குறைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கண்டி மாவட்ட எம்பிக்கள்...

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளனர்.

தற்போது சிறைத் தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தமது ஆதரவை யாருக்கு வழங்குவார் என்ற முடிவை இதுவரை அறிவிக்கவில்லை.

அந்த வகையில் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி வசந்த யாப்பா சஜித் பிரேமதாசவுக்கும் தேசியப்பட்டியல் எம்.பி.யான பேராசிரியர் ரஞ்சித் பண்டார நாமல் ராஜபக்சவுக்கும் ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி கண்டி மாவட்டத்தில் பாராளுமன்றத்திற்கு தெரிவான லக்ஷ்மன் கிரியெல்ல' ரவூப் ஹக்கீம் மற்றும் எம்.எச்.எம்.ஹலீம் ஆகியோர் சஜித் பிரேமதாசவுக்கு தமது ஆதரவை வழங்கவுள்ளனர்.

# இன்றைய பலன்கள்

## (27.08.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
அவசரமாக முடிக்க வேண்டிய பணிகள் அலைச்சல்களை தரலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்கு இடமாற்றம், பதவி உயர்வு உண்டு.

**ரிஷபம் :**
உங்களது சில வேலைகளை மற்றவர்களிடம் கொடுத்து முடித்துக் கொள்வீர்கள். எதிர்பாராத வகையில் பெரியவர் ஒருவர் உங்களுக்கு உதவுவர்.

**மிதுனம்:**
மற்றவர் விவகாரத்தில் தலையிடாதீர்கள். அதிக செலவாகும் என்று நினைத்த காரியம் ஒன்று குறைந்த செலவிலேயே முடிவுக்கு வரலாம்.

**கடகம்:**
உறவினர்களிடமும் நண்பர்களிடமும் சுமூகமாக நடந்து கொள்வீர்கள். வெளியூரிலிருந்து மகிழ்ச்சியான தகவல் வந்து சேரும்.

**சிம்மம்:**
முக்கிய வேலைகளில் கவனமாக செயல்படுவீர்கள். உத்தியோகத்தர்கள் விடுமுறையில் உள்ள சக பணியாளர்களின் வேலையும் சேர்த்து செய்ய வேண்டியது இருக்கும்.

**கன்னி:**
சில காரியங்கள் சிறிது தொய்வடைந்தாலும் மீண்டும் முயற்சித்து வெற்றி அடையலாம். உத்தியோகத்தில் உள்ளவர்கள் தங்கள் பணிகளில் கவனமாக செயற்படுங்கள் .

**துலாம்:**
பண வரவுகளில் தடை தாமதங்களை தவிர்க்க முடியாது. உத்தியோகத்தர்கள் தங்கள் எதிர்பார்ப்புகளை அடைவதில் சிக்கல் வரலாம்.

**விருச்சிகம்:**
ஒரு சில காரியங்களில் வெற்றி பெற நண்பர்களின் உதவி தேவைப்படும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் சிலருக்கு பதவி உயர்வு சம்பள உயர்வும் கிடைக்கலாம்.

**தனுசு:**
நண்பர்கள் உறவினர்களும் தக்க சமயத்தில் உதவி செய்வார். இடமாற்ற முயற்சிகளில் முன்னேற்றம் உண்டாகும்.

**மகரம்:**
எதிர்பார்க்கும் பண வரவு குறித்த காலத்தில் வந்து சேரும். ஒரு காரியத்தில் வர வேண்டிய வருமானத்தை இழந்தாலும் மற்றும் ஒரு காரியத்தில் ஆதாயத்தை பெறுவீர்கள்.

**கும்பம்:**
வளமான எதிர்கால வாழ்வுக்கு தேவையான முயற்சிகளை திட்டமிடுவீர்கள். நண்பர்களுடன் சில முக்கிய நிகழ்ச்சிகளுக்கு சென்று வருவீர்கள்.

**மீனம்:**
தளர்வான காரியங்களை வெற்றி பெற தக்க நண்பர்களின் உதவியை நாடுவீர்கள். பணவரவு இருந்தாலுமே எதிர்பாராத செலவுகளும் வந்து சேரும்.

## கட்சி முடிவெடுத்தால்...

இதுபற்றித் தெரிவித்த அவர்;

கிழக்கு மாகாணத்துக்கு முஸ்லிம் ஆளுநர் வேண்டும் என்று எந்த ஒரு உடன்படிக்கையும் சஜித் பிரேமதாசவுடன் செய்யப்படவில்லை. தமிழ் முஸ்லிம் உறவுகளை சீரழிப்பதற்காகச் செய்யப்படும் பிரச்சாரம் இது. எனது பல்கலைக்கழகத்தை மீட்டுத் தந்ததுடன்,அதைத் திறந்து வைக்கவும் ஜனாதிபதி முன்வந்தார். இதற்கும் அரசியலுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை. எனது மகனின் திருமண வைபவத்தின்போது ஜனாதிபதியும், சஜித்தும் வந்திருந்தனர். தனிப்பட்ட வாழ்க்கையில் இவ்வாறான அரசியல் உறவுகளை தவிர்க்க முடியாது.

எனது கட்சி முடிவெடுத்தால் நான் உங்களை ஆதரிப்பேன் என்று ஜனாதிபதியிடம் சொன்னேன்.

எனக்கும் அவருக்கும் எதுவித பிரச்சினையும் இல்லை.

## பட்டாசு உற்பத்தி...

சில தேர்தல்கள் நடைபெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

நத்தார் பண்டிகை மற்றும் புத்தாண்டு நிகழ்வுகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளை முன்னிட்டு பொதுவாக ஆகஸ்ட் மாதம் பட்டாசு உற்பத்தி ஆரம்பிக்கப்படும்.

எனினும், தேர்தல்களை முன்னிட்டு இம்முறை முன்கூட்டியே பட்டாசு உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். கம்பஹா, காலி, கண்டி மற்றும் குருநாகல் மாவட்டங்களிலும் பட்டாசு உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தேசிய மக்கள் சக்தியின்...

மாளிகாவத்தையில் நேற்று இடம் பெற்ற பெண்களுக்கான நிகழ்ச்சியில், விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டது.

வறுமைக்கு, பெண்களே பிரதான பலியாக மாறியுள்ளதாக தேசிய மக்கள் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

## 4 கோடி ரூபா ... (3 ஆம் பக்க தொடர்ச்சி)

இவ்வாறு சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட பொருட்களில் வெளிநாட்டு மதுபானங்கள், பல்வேறு வகை வெளிநாட்டு உற்பத்தியான சிகரெட்டுகள், கிரீம்கள், வாகன உதிரிப் பாகங்கள் மற்றும் அறுவைச் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் கத்தரிக்கோல் ஆகியவை காணப்பட்டதாக அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்டுள்ள மேற்படி சந்தேக நபர்கள் கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில் வசிப்பவர்களாவர்.

மேலதிக விசாரணைகளுக்காக சுங்கத் திணைக்கள அதிகாரிகளிடம் இவர்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## நாட்டைக் கட்டி... (3 ஆம் பக்க தொடர்ச்சி)

இதற்கான பொருத்தமான நிறுவனத்தைத் தெரிவு செய்வதற்காக அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டது. அதன் பரிந்துரையின்படி, பிரான்சின் லாசார்ட் நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு, சட்ட ஆலோசனை வழங்க கிளிப்பர்ட் ஹான்ஸ் நிறுவனம் தெரிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்ல தயாராகும் போது அமைச்சரவை இரண்டாக பிளவுபட்டது. பலர் இதனை ஏற்றுக்கொண்ட போதிலும், இந்த விடயம் தொடர்பில் சர்வதேச புரிதல் இல்லாத ஒரு குழு இதனை எதிர்த்தது. அந்த நிலைமையின் அடிப்படையில், சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி இந்த தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண முடியவில்லை.

இந்நிலைமை காரணமாக நாட்டில் எரிபொருள், எரிவாயு மற்றும் மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது.

மின்வெட்டு ஏற்பட்டது. நாட்டில் நிலுவைத் தொகை நெருக்கடியின் போது சர்வதேச இருப்புக்களின்றி வீழ்ச்சிக்கண்டதால் , எரிபொருள் மற்றும் எரிவாயு வரிசைகள் உருவாகின. மருந்து தட்டுப்பாடு ஏற்பட்டது. அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. மக்கள் வரிசையில் நின்று மோதினர். சிலர் இறந்தனர்.

குறுகிய அரசியல் குறிக்கோளைக் கொண்டவர்கள், மக்களின் துக்கத்தையும், வேதனையையும், வெறுப்பையும் மறைத்து மக்களை வன்முறைக்குத் தூண்டினர்.

இப்படிப்பட்ட சூழலை எதிர்கொண்டு நாட்டைக் காப்பாற்ற ஒரு தலைவர் மட்டுமே துணிச்சலுடன் முன்வந்தார். நாட்டில் ஜனநாயகத்தை மீண்டும் நிலைநாட்டும் பொறுப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டுமே நிறைவேற்றியதாகவும் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவரதன மேலும் தெரிவித்தார்.

## நாட்டின் பொருளாதாரத்தை...

ஒரு கட்சியாகவன்றி சகல கட்சிகளிலுமுள்ள திறமையான அணியை ஒன்றிணைத்து, கடந்த இரண்டு வருடங்களில் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைக்கு கொண்டு வர முடிந்ததாகவும், தன்னிடமுள்ள பொருளாதாரக் குழுவை மிஞ்சுவதற்கு, வேறு எந்தக் கட்சியிலும் குழுக்கள் இல்லை எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் (24) நடைபெற்ற சட்ட வல்லுநர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார். இங்கு உரையாற்றிய ஜனாதிபதி: ஜனாதிபதி யார்,என்பதிலன்றி, மக்களை வாழ வைப்பது தொடர்பிலே போட்டியுள்ளது.கேஸ் சிலிண்டரை தேடிச் சென்ற யுகத்திற்கு முடிவு கட்டுவதற்கே இம்முறை வாக்களிக்க வேண்டும். நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ், திருடர்களைப் பிடிக்கும் பொறுப்பை ஜே.வி.பி ஏற்றுக் கொண்டது.

பொலிஸ் உத்தியோகத்தரோ, சட்டத்தரணியோ அல்லாத ஆனந்த விஜேபால நியமிக்கப்பட்டதோடு 400 கோப்புகள் தொடர்பில் அவர் செயற்பட்டார். பிரதமர் என்ற ரீதியில் தேவையான ஏற்பாடுகளை மாத்திரம் வழங்கினேன்.எலிகளை பிடிக்க பற்கள் உள்ள பூனையே தேவை. பூனைக்கு பற்கள் இல்லையென்றால் அதனை ஏசிப் பயனில்லை.

ஆட்சியில் இடைவெளி வைக்கக் கூடாது என்று ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன என்னிடம் கூறினார். அதனால்தான், பிரதமர் பதவியை நான் ஏற்றேன். அக்காலகட்டத்தில் நாட்டில் நிலவிய நிலைமையை சொல்லத் தேவையில்லை. பங்களாதேஷில் அந்த இடைவெளி ஏற்பட்டது. திருமதி ஷேக் ஹசீனா பதவி விலகிய போது, அரசாங்கத்தை எப்படி முன்னெடுத்துச் செல்வது என்று அவர்களுக்குத் தெரியவில்லை. அந்த இடைவெளியின் காரணமாக அவர்களுக்கு பெரும் இழப்பை சந்திக்க நேரிட்டது . நாட்டின் பிரதமர் பதவியை ஏற்க எவரும் முன்வரவில்லை. ஆனால் நான் தனியொரு ஆசனம் பெற்ற பாராளுமன்ற உறுப்பினர். என்னைப் பிரதமராகப் பொறுப்பை ஏற்கச் சொன்னார்கள். அந்தப் பொறுப்பை ஏற்காமல் நான் ஓடியிருந்தால் பாரிய விபரீதம் ஏற்பட்டிருக்கும். அது ஒரு கோழைத்தனமான செயல்.

எதிர்க்கட்சித் தலைவரேதான் நாட்டின் மாற்றுப் பிரதமர். எதிர்க்கட்சித் தலைவரே ஆட்சி அமைக்க வேண்டும். இதை, அச்சமயம் நான் கூறினேன். நெருக்கடி ஏற்படும் போது எதிர்க்கட்சியில் இருந்து ஒத்துழைக்கத் தயார் என்று கூறினோம். சஜித் பிரேமதாசவுடன் எனக்கு எந்த பிரச்சினையும் இருக்க வில்லை. ஆனால் கடைசியில் பிரதமர் பதவியை ஒப்படைத்தபோது வேண்டாம் என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டார். அவரைப் போல நானும் ஓடுவது கோழைத்தனமான செயல். எனது அனுபவத்தின் அடிப்படையில் இந்தப் பிரச்சினையை என்னால் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கை இருந்ததால், பொறுப்பை ஏற்றுக்கொண்டேன்.

மேலும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறிய போது, அந்தப் பொறுப்பை ஏற்று பணிகளை தொடர்ந்து முன்னெடுத்தேன். எனது வீடு எரிக்கப்பட்ட போதும் திங்கட்கிழமை அமைச்சரவை கூடியது. அன்றிலிருந்து ஆட்சியைப் பாதுகாத்து தொடர்ந்து செயற்பட்டோம். இவ்வாறான நிலையில் மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட நிலையில், அனுபவமற்றவர்களே கட்சி வேறுபாடுகள் பற்றி சிந்தித்துக் கொண்டிருப்பர். இந்தப் பணியை முன்னெடுத்துச் செல்ல எனக்கு ஒரு நல்ல குழுவொன்று தேவைப்பட்டது. நல்லாட்சி அரசாங்கத்தின் போது என்னுடன் இணைந்து செயற்பட்ட அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவை, எனது இராஜாங்க அமைச்சர்களில் ஒருவராக நியமித்தேன். ஷெஹான் சேமசிங்க எம்.பி.யைப் பற்றியும் அறிந்து வைத்திருந்தேன். அவரையும் தெரிவு செய்தேன். இவர்கள் இருவரும் அமைச்சர்களாக பெரும் சேவை ஆற்றினர். இறுதியில், இருவரும் சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சுவார்த்தைகளுக்கு கூடச் சென்று பணியாற்றியிருந்தனர். அத்துடன் அமைச்சர் அலி சப்ரியிடம் வெளிவிவகார அமைச்சு ஒப்படைக்கப்பட்டது. அந்தப் பணிகளை அவர் செய்தார். எங்களுக்கு வலுசக்தி துறையில் மிகப்பெரிய பிரச்சினைஇருந்தது. அதற்காகவே அமைச்சர் கஞ்சன விஜேசேகரவை நியமித்தேன். அந்த குழுவே இந்த வேலையை செய்தது.

அத்துடன் இந்த விடயங்கள் அனைத்தையும் ஊடகங்களுக்கு வெளியிடுவதற்காக அமைச்சர் பந்துல குணவர்தன நியமிக்கப்பட்டார். மேலும் உகந்த அதிகாரிகளையும் தேடியெடுத்தேன். நல்லாட்சி அரசாங்கத்தின் போது நிதி அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய கலாநிதி ஆர்.எச். எஸ். சமரதுங்க எனது ஆலோசகராக நியமிக்கப்பட்டார். மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆகியோருக்கு பணியைத் தொடர்ந்து முன்னெடுக்க வாய்ப்பளிக்கப்பட்டது. நான்காவதாக எனது தலைமை அதிகாரியாக சாகல ரத்நாயக்கவை நியமித்தேன். மேலும், இந்திரஜித் குமாரசுவாமி, சாந்த தேவராஜ், ஷாமினி குரே ஆகியோரும் தேவையான அறிவுரைகளை வழங்கினர். இக் குழுவினரே, இந்த திட்டத்தை முன்னோக்கிக் கொண்டு வந்தனர் . அந்தக் குழு தான் வெற்றிகரமான குழு.

## தேசிய மக்கள் சக்தியின்...

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர்,அரசியல் கட்சிகளின் நாட்டை முன்னோக்கி செல்லும் கொள்கையை பார்ப்பதற்கு மக்கள் காத்திருக்கின்றனர். அந்த வகையில் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரகடனம் யதார்த்தமற்ற வாழ்த்துப் பொதி மட்டுமே. அதனைத் தெரிவிப்பதற்கும் கவலையாக உள்ளது. அவர்கள் பல்வேறு மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

அதில் தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தில் நடைமுறைப்படுத்தப்படாத விடயங்கள் உள்ளனவா என நான் பார்த்தேன். அவ்வாறு எதுவும் கிடையாது. அந்தளவு அதனை அவர்கள் பிரதிபண்ணியுள்ளார்கள். ஏனையவர்களுடையதை, தம்முடையதைப் போல காட்ட முற்படும் அளவுக்கு ஜேவிபி வங்குரோத்து நிலைக்கு ஆளாகியது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை.அவர்களின் மறுசீரமைப்பு வேலைத் திட்டத்தில் தற்போது நாம் நடைமுறைப்படுத்தும் அனைத்தும் குறிப்பிடப்பட்டுள்ளன . உலகில் அனைத்து நாடுகளும் எதிர்பார்ப்பது பொருளாதாரத்தில் பலமடைந்து சிறந்த வாழ்வாதாரத்தை ஏற்படுத்தக்கூடிய சூழலை ஏற்படுத்துவதையே . அந்த வகையில் தற்போது சிறந்த வாழ்க்கையை, சிறந்த நாட்டை உருவாக்குவதற்கு முயற்சிப்பது இந்த நாட்டை முழுமையாக பொருளாதாரத்தில் அழிவை ஏற்படுத்திய குழுவினரே. 1971 ஆம் ஆண்டு முதல் மக்கள் முன்னேறுவதற்கோ அல்லது சிறந்த பொருளாதாரத்துடனான நாட்டைக் கட்டி யெழுப்புவதற்கோ ஜே. வி. பி. இடம ளிக்கவில்லை. வீழ்ச்சியடைந்த பொருளாதார நிலையை உருவாக்குவதற்கே அவர்கள் பங்களிப்பு செய்துள்ளனர். 2022 ஆம் ஆண்டு நாடு முழுமையாக பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்த பின்னர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தின் கீழ், நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் மறுசீரமைப்பு வேலைத் திட்டத்தை ஆரம்பித்து கடன் வழங்குநர்களுடன் கடனை வழங்கக் கூடிய விதத்தில் நிபந்தனைகளுடன் இணைக் கப் பாட்டுக்கு வந்துள்ளோம். அந்த வகையில் 1971, 1988, 1989 யுகம் போன்றே 2022 ஆம் ஆண்டில் போராட்டக் காலத்தில் பொருளாதாரத்தை அழிவுறச் செய்வதற்கு உச்சளவில் செயல்பட்டவர்கள் இவர்களே என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மனித உரிமைகள் ஆணையாளரின்...

ஜனாதிபதி தேர்தல் நெருங்கியுள்ள நிலையிலேயே , ஐநா மனித உரிமைகள் பேரவையின் இந்த அறிக்கை வெளியாகியிருந்தது.

மனித உரிமைகள் பாதுகாப்பு முறையை சீர்திருத்துவதாக உறுதியளித்த போதிலும், இலங்கை அரசாங்கம் அதனை இன்னும் செய்யாமல் இருப்பதாக அந்த அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

2023 முதல் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டங்கள் மற்றும் மசோதாக்கள் மூலம் பாதுகாப்புப் படைகளுக்கு பரந்த அதிகாரங்களை வழங்கியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கருத்து சுதந்திரம் மற்றும் கருத்து வெளிப்படுத்தல் மீதான கட்டுப்பாடுகளையும் இலங்கை அரசாங்கம் விரிவுபடுத்தியுள்ளதாக ஐநா அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஊடகவியலாளர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளதாகவும், கைதிகளுக்கு எதிரான சித்திரவதைகள், அதனால் ஏற்பட்ட மரணங்கள் தொடர்பிலும் ஐ.நா.அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

இந்நிலையில்,ஜெனிவாவை தளமாகக் கொண்ட உலக அமைப்பின் உறுப்பு நாடுகளின் வெளிநாட்டு தூதர்களுக்கு அரசாங்கம் தனது நிலைப்பாட்டை விளக்கியுள்ளது.

ஆணையர் வோல்கர் டர்க் எழுப்பிய பிரச்சினைகள் தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து கொழும்பை தளமாகக் கொண்ட இராஜதந்திரிகளுக்கு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, விளக்கினார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் 17 பக்க அறிக்கையில் பட்டியலிடப்பட்டுள்ள விடயங்களை, எதிர்கொள்வதற்கான விரிவான அறிக்கையையும் அமைச்சு தனது இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளது.

அங்கத்துவ நாடுகளுக்கும் ஏனைய நாடுகளுக்கும் வழங்கப்பட்ட ஒன்பது பக்க சுருக்கக் குறிப்பில், “சமூக மற்றும் அரசியல் முன்னணியில் ஜனநாயக ரீதியாக சவால்களை வெற்றிகொள்வதில் மட்டுமன்றி, அண்மைய வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து அதன் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதிலும் இலங்கை வெற்றியடைந்துள்ளது” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.






பதுளை லெஜர்வத்த, நாரங்கலை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா நேற்று (26) நடைபெற்றபோது கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கலந்து கொண்டார்.

# இந்தியன் கேலரி நூலகத்தை திறந்து வைத்த இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா

## மாணவர்களுக்கான உபகரணங்களும் வழங்கி வைப்பு

**மாத்தளை சுழற்சி நிருபர்**





இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிய காரியாலயத்தின் ஏற்பாட்டில், பெருந்தோட்ட மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் வழங்குதல் மற்றும் இந்தியன் கேலரி நூலக திறப்பு விழா, அண்மையில் மாத்தளை மகாத்மா காந்தி சர்வதேச நிலையத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இந்தியன் கேலரி நூலகத்தை வைபவ ரீதியாக திறந்து வைத்ததுடன், மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களையும் வழங்கி வைத்தார்.

இலங்கை இந்தியா 100 வருட நட்புறவின் பூர்த்தியை முன்னிட்டு இந்திய அரசினால், ஊவா, மத்திய, சப்ரகமுவ, வடமேல் ஆகிய மாகாணங்களிலுள்ள பெருந்தோட்டங்களைச் சேர்ந்த சுமார் பத்தாயிரம் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்துக்கமைவாக இந் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன்போது, பாடசாலைகளுக்கான முதலுதவிப் பொருட்கள், விளையாட்டு உபகரணங்கள், ஆயுர்வேத மருந்து வகைகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் கண்டி உதவி இந்திய உயர்ஸ்தானிகர் கலாநிதி எஸ்.ஆதிரா உட்பட மாத்தளை மகாத்மா காந்தி சபை உறுப்பினர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# பிரணவம் அறக்கட்டளையின் ஓராண்டு விழா



**நுவரெலியா தினகரன் நிருபர்**



பிரணவம் அறக்கட்டளையின் ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட ஆன்மீக சொற்பொழிவு கடந்த 24 ஆம் திகதி ஹட்டன் என்பீல்ட் தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் விசேட அதிதியாக, இந்தியாவின் தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்திருந்த திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீ கந்த பரம்பரை சூரியனார் கோவில் ஆதீனம் ஸ்ரீ கார்யம் அருட்குருநாதர் தவத்திரு ஸ்ரீமத் சிவாக்கர தேசிகர் சுவாமிகள் கலந்து கொண்டார். இதன்போது, அறநெறி பாடசாலை மாணவர்களுக்கான ஆன்மீக சொற்பொழிவையும் அவர் ஆற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சமாதான நீதவானாக நியமனம்



இராகலை அலெக்சாண்டர் என்றூ, வலப்பனை நீதிமன்ற நீதவான் எஸ்.எஸ்.விக்கிரமரட்ன முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்துக் கொண்டார்.

இவர், இந்திய (Aiims) நிறுவனத்தில் வியாபார முகாமைத்துவ டிப்ளோமா மற்றும் பிரித்தானிய அரச பல்கலைக்கழகமான சோலண்ட் பல்கலைகழகத்தில் வணிக நிர்வாகத்திற்கான முதுநிலை பட்டம் பெற்றுள்ளார்.

சிறந்த சமூக சேவையாளரான அலெக்சாண்டர் என்றூ, இராகலை புனித ஜெபமாலை ஆலய நிர்வாக சபை உறுப்பினராகவும், இலங்கை உட்பட பல தொண்டு நிறுவனங்களில் தன்னார்வ தொண்டராகவும் நுவரெலியாவில் இயங்கும் பிரபல ஆடை தொழிற்சாலையில நிர்வாக நிறைவேற்று அதிகாரியாகவும் கடமையாற்றி வருகின்றார்.

**ஆ.ரமேஸ்.**

# அரச ஊழியர்களின் சம்பள விவகாரம் குறித்து ஆராயப்படும்

## கண்டியில் சஜித் தெரிவிப்பு

**அக்குறணை குறூப் நிருபர்**



அரச ஊழியர்களின் வாழ்க்கைச் செலவுக்கேற்ப சம்பளம் வழங்குவது தொடர்பாக ஆராய்வதற்கு பூரண அதிகாரத்துடன் கூடிய ஆணைக்குழு ஒன்று நிறுவப்படும் எனவும் அரச ஊழியர்களின் சம்பளம் 24 சதவீதமாக அதிகரிக்கப்படும் எனவும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கண்டி, திகனையில் கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போது இதனை தெரிவித்த அவர்,

தான் பதவிக்கு வந்ததும், அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு, ஓய்வூதியக்காரர்களுக்கு மறுக்கப்பட்ட சில உரிமைகள், கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள சம்பள முரண்பாடுகள், சிரேஷ்ட பிரஜைகளுக்கான அதிகரித்த கொடுப்பனவு, இராணுவத்தினருக்கான புதிய வேலைத்திட்டம் போன்ற பல அம்சங்களை வழங்கவுள்ளதாக கூறினார்.

இவை வெறும் தேர்தல் வாக்குறுதிகள் அல்ல என தெரிவித்த அவர், சிரேஷ்ட பிரஜைகளின் சேமிப்பு கணக்குகளுக்கு மறுக்கப்பட்டுள்ள 15 சதவீத வட்டியை மீண்டும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறினார்.

ஓய்வு பெற்றவர்களின் சலுகைகளை உயர்ந்த தரத்தில் பேணும் பொருட்டு, 1999 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க சட்டத்தை திருத்துவதன் மூலம் புதியதொரு சட்டமூலமொன்று கொண்டுவரப்படும். சிரேஷ்ட பிரஜைகளுக்காக வழங்கப்படுகின்ற 3000 ரூபா கொடுப்பனவை 5000 ரூபாவாக அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

# இலஞ்சம் பெற்ற அதிகாரி கைது

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

பஸ் ஒன்றை அதிகமான தடவைகள் பயணிக்க வைப்பதற்கு உதவி செய்வதாகக் கூறி இலஞ்சம் பெற்ற சப்ரகமுவ மாகாண போக்குவரத்து அதிகார சபை ஊழியர் ஒருவர் இலஞ்ச ஊழல் திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பலாங்கொடை பின்னவலை பிரதேச தனியார் பஸ் உரிமையாளர் ஒருவர் இலஞ்ச ஊழல் மோசடிப் பிரிவில் செய்த முறைப்பாட்டுக்கமைய அவர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# விஷ்வ இந்து பரிஷத் நிறுவனத்தினால் கொட்டகலை நகரில் விநாயகர் ஊர்வலம்

**கினிகத்தேனை தினகரன், மஸ்கெலியா விஷேட நிருபர்கள்**

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, இந்தியாவை தளமாக கொண்டு இயங்கும் விஷ்வ இந்து பரிஷத் நிறுவனத்தின் இலங்கை கிளையினால் எதிர்வரும் மாதம் 8ஆம் திகதி கொட்டகலை நகரில் விநாயகர் ஊர்வலம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இலங்கை வரலாற்றில் முதன் முறையாக விநாயகர் சிலை கரைக்கும் நிகழ்வு, கொட்டகலை கிளையின் தலைவர் இராமசாமி விஜயபாலனின் தலைமையில், கொமர்ஸல் நீர் தடாகத்தில் இடம்பெறவுள்ளது.

அதன்படி முதல் விநாயகர் சிலை கொட்டகலை ஹரிங்டன் தோட்டத்திலிருந்து கொண்டு வரப்படவுள்ளதுடன், சுற்றுப்புற 10 தோட்டங்களின் ஆலயத்திலிருந்தும் அடியார்களின் பங்கேற்புடன் விநாயகர் சிலைகள் எடுத்துவரப்பட்டு, பிரதேச சபையின் முற்றத்தில் வீதி உலா ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து கொட்டகலை நகர் ஊடாக வீதி உலா வந்து பக்த அடியார்களின் தரிசிப்புடன் கிறிஸ்லஸ்பாம் ஊடாக கொமர்ஸல் நீர் தடாகம் வந்தடையும். பின்னர் அங்கு இடம்பெறும் பூஜையினையடுத்து விநாயகர் சிலைகள் கரைக்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாத்தளை மாவட்டத்தில்

# 13 பொலிஸ் நிலையங்களினூடாக 377 குற்றவியல் வழக்குகள் பதிவு

**தம்புள்ள தினகரன் நிருபர்**

மாத்தளை மாவட்டத்திலுள்ள 13 பொலிஸ் நிலையங்களில் இவ் வருடம் ஜூலை மாதம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மாத்திரம் 377 குற்றவியல் வழக்குகள் பதிவாகியுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லலித் ரோஹண கமகே தெரிவித்தார். இவற்றுள் சொத்துக்கள் அழிப்பு தொடர்பாக 237 வழக்குகளும், உடல் ரீதியாக இழைக்கப்பட்ட 140 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மாத்தளை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்ற, மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்கு மாவட்ட பாதுகாப்பு நிலைமை தொடர்பாக விளக்கமளிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டு சிறு சிறு குற்றங்கள் தொடர்பாக 23,566 முறைப்பாடுகளும், இவ் வருடம் ஜூலை மாதம் வரையில் 14,229 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளதாகவும் தெரிவித்தார். கடந்தாண்டு (2023) டிசம்பர் 17 ஆம் திகதி முதல் இவ்வாண்டு (2024) ஜூலை 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட 'யுக்திய' விஷேட அதிரடி நடவடிக்கைகளின் கீழ் போதைப்பொருள் வர்த்தகர்கள் 285 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இவர்களிடமிருந்து ஹெரொயின், ஐஸ், கஞ்சா மற்றும் ஏஷ் போதைப்பொருள் போன்றவை மீட்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கழிவுநீர் செல்லும் வடிகான்

# சுகாதார சீர்கேடு நிலவுவதால் தூய்மைப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை



**மஸ்கெலியா நிருபர்**

கொட்டகலையில் சுகாதார சீர்கேட்டுடன் இருக்கும் வடிகானை தூய்மைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளுமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொட்டகலை நகரம் ஆரம்பிக்கும் பகுதியிலிருந்து பிரதான வீதியூடாக சீ.எல்.எஃப் செல்லும் வழியிலுள்ள கழிவுநீர் செல்லும் வடிகானே இவ்வாறு சுகாதார சீர்கேட்டுடன் இருப்பதாக அப்பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இந்த வடிகானில் கழிவுநீர் தேங்கி நிற்பதாலும், அங்கு கொட்டப்பட்டுள்ள குப்பைகள் மற்றும் பிளாஸ்டிக் வெற்று போத்தல்களினால் அவ் வழியாகச் செல்லும் மக்களும் பாடசாலை மாணவர்களும் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக, கொட்டகலை பிரதேச சபை, உடன் நடவடிக்கைகளை எடுத்து வடிகானிலுள்ள அனைத்து குப்பைகளையும் அகற்றி ஆழப்படுத்துமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## 1480 குடும்பங்களைக் கொண்ட

# குயில்வத்தை பிரதேசத்துக்கு மேலும் மதுபானசாலைகள் வேண்டாம்!

## மக்கள் போராட்டம்








**ஹட்டன் விசேட நிருபர்**

ஹட்டன் குயில்வத்தை பகுதியில் மூன்று மதுபானசாலைகள் காணப்படுகின்ற நிலையில், மேலும் ஒரு மதுபானசாலை அவசியமில்லை என தெரிவித்து அப் பிரதேச மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்பிரதேசத்தில், சுமார் 1480 குடும்பங்கள் வசித்து வருவதாகவும், தற்போதுள்ள மூன்று மதுபானசாலைகளினால் ஏற்படும் பிரச்சினைகளையே தீர்த்துக்கொள்ள முடியாதுள்ள நிலையில் மேலும் ஒரு மதுபானசாலை வேண்டாம் என அம் மக்கள் வலியுறுத்தியுள்ளனர். இந்த ஆர்ப்பாட்டம் ஹட்டன் – கொழும்பு பிரதான வீதியில் குயில்வத்தை எண்ணை நிரப்பு நிலையத்துக்கருகாமையில் நேற்று முன்தினம் (25) இடம்பெற்றது. இதன்போது, பல் வேறுப்பட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை காட்சிப்படுத்தியவாறு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# குடும்பப் பெண் கொலை; அண்ணன், தம்பி கைது

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

சிரில்டன்வத்த மீவலபலான பிரதேசத்தில் 36 வயதுடைய குடும்பப் பெண்ணொருவரை கொலை செய்த குற்றச்சாட்டில் அண்ணன், தம்பி என இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இக் கொலைச் சம்பவம் கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது .

மீவலபலான கிராமத்தைச் சேர்ந்த நபரொவருக்கும் கொலை செய்யப்பட்ட பெண்ணுக்கும் இடையில் நிலவிவந்த தனிப்பட்ட தகராறே இக்கொலைக்கான காரணமாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் 40 மற்றும் 44 வயதான ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சகோதரர்களை கைது செய்துள்ள பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# கிழக்கின் குரல்



## தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் மாணவர் விடுதி கழிவு முகாமைத்துவ கட்டமைப்பில் பாதிப்பு



(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

தென்கிழக்கு பல்கலைக்கழக சம்மாந்துறை வளாக மாணவர் விடுதியின் கழிவு நீர் முகாமைத்துவ கட்டமைப்பில் பாதிப்பு காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து இதுதொடர்பில் ஆராய்வதற்காக சம்மாந்துறை வைத்திய சுகாதார அதிகாரிகள் அண்மையில் களவிஜயம் மேற்கொண்டிருந்தனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் சகீலா இஸ்ஸதீனிடம் இதுதொடர்பில் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து அவர் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டிருந்தார்.

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் கபீர் தலைமையிலான குழுவினர் அப்பகுதிக்கு கள விஜயம் மேற்கொண்டதுடன் சம்பவ இடத்தையும் பார்வையிட்டனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழக சம்மாந்துறை வளாக உதவி பதிவாளர், வேலைத்தள பிரதானி, விடுதி பொறுப்பாளர், பொது சுகாதார பரிசோதகர்கள் அப்பகுதிக்கு சென்று அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்தனர்.

## குச்சவெளி பள்ளவக்குளம் விவசாயக் காணிப் பிரச்சினை

### தௌபீக் எம்.பி - அரசாங்க அதிபர் சந்திப்பு

(கிண்ணியா மத்திய நிருபர்)



குச்சவெளி பள்ளவக்குளம் விவசாயக் காணிப் பிரச்சினை சம்மந்தமாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் மற்றும் திருகோணமலை அரசாங்க அதிபர் சமிந்த ஹெட்டியாராச்சி ஆகியோருக்கு இடையில் சந்திப்பொன்று மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது காணிப்பிரச்சினையை தீர்ப்பது தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இச்சந்திப்பில் பலநோக்குக் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜஹான், ஜாயா நகர் விவசாய சம்மேளனத் தலைவர் சமீம், உப தலைவர் நிபார், மற்றும் செயலாளர் இஸ்ஸதீன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## யானைத் தாக்குதலில் பிரதேசசபை சாரதி உயிரிழப்பு

(காரைதீவு குறூப் நிருபர்)

பொத்துவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊறணிப் பகுதியில் யானைத் தாக்குதலுக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

திருக்கோவில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட தம்பிலுவில் பகுதியைச் சேர்ந்த அ.மனமோகன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவமானது நேற்றுமுன்தினம் நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர் திருக்கோவில் பிரதேச சபையில் வாகன சாரதியாக பணிபுரிபவர் என தெரியவருகின்றது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அரகல போராட்டம் கறைபடிந்த சம்பவம்

### வாழைச்சேனை கடதாசி ஆலையின் முன்னாள் தவிசாளர் மங்கள செனரத்

(கல்குடா தினகரன் நிருபர்)



அரகல போராட்டம் நாட்டுக்கு ஏற்பட்ட கறைபடிந்த நிகழ்வாகும் என வாழைச்சேனை கடதாசி ஆலையின் முன்னாள் தவிசாளர் மங்கள செனரத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கான ஸ்மார்ட் தேர்தல் அலுவலகம் மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

அரகலையின் பின்னர் நாட்டை பொறுப்பெடுக்குமாறு பலரிடமும் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டபோது அவர்கள் பயத்தில் ஒதுங்கினர். துணிந்து அதை பொறுப்பெடுத்தவர் தற்போதைய ஜனாதிபதி. இதை எவரும் மறந்து விடக்கூடாது.

மக்களின் அதிக வாக்குகளைப் பெறுவதுடன் மாத்திரம் இல்லாமல் அதிகமான கட்சிகளின் ஆதரவை பெற்று ரணில் விக்கிரமசிங்க வெற்றிவாகை சூடுவார் என்பதில் மாற்று கருத்திற்கு இடமில்லை. ஜனாதிபதி சுயாதீன வேட்பாளர் அவர் எந்த கட்சி சின்னத்திலும் போட்டியிடவில்லையென அவர் தெரிவித்தார். இங்கு உரையாற்றிய ஈழமக்கள் ஜனநாயக முன்னனி (ஈரோஸ்) செயலாளர் நாய ராஜநாதன் பிரபாகரன் கருத்து தெரிவிக்கையில்,

இன்று வடக்கு, கிழக்கு, மலையகம் என அகில இலங்கை ரீதியாக உள்ள ஆதரவாளர்களை வைத்துக் கொண்டு முழு மனதுடன் களத்தில் இறங்கி வேலை செய்துக் கொண்டு இருக்கின்றோம். கொரோனாவால் நாடு பாதிக்கப்பட்டது அதேபோன்று அரகல என்று ஒரு கீழ்த்தரமான செயற்பாட்டால் நாடு பின்நோக்கிப்போனது இச்சந்தர்ப்பத்தில் கோட்டாபய நாட்டை பொறுப்பெடுக்குமாறு ஒப்பாரி வைத்த தருணம். எனினும் யாரும் வரவில்லை.

மேற்கத்தேய நாடுகளுடனான தொடர்பாடல் ரணில் விக்கிரமசிங்கவை தவிர வேறு யாருக்கும் கிடையாது எனவும் அவர் தெரிவித்தார்.

## முஷாரப் எம்.பிக்கு எதிராக போலி குற்றச்சாட்டுகளை சில முஸ்லிம் அரசியல் கட்சிகள் சுமத்துகின்றனர்

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்))



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கிவரும் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப்புக்கு எதிராக சில முஸ்லிம் அரசியல் கட்சிகள் போலியான குற்றச்சாட்டுக்களை சுமத்தி களங்கம் ஏற்படுத்தி வருவதாக கிழக்கு மாகாண வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தவிசாளர் எம்.ஐ.றனூஸ் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தவிசாளர் எம்.ஐ.றனூஸ் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணம் மட்டுமல்ல நாடு முழுவதும் பேசப்படுகின்ற பாராளுமன்ற உறுபினர் எஸ்.எம்.எம்.முஷரப் மக்களுக்கான தீர்வை பெற்றுக் கொடுப்பதற்காக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கி வருகின்றார். இதனை பொறுத்துக் கொள்ள முடியாத காழ்ப்புணர்ச்சி கொண்ட சில முஸ்லிம் அரசியல்வாதிகள் அவர் மீது அபாண்டமான குற்றச்சாட்டுகளை சுமத்தி வருவது அவர்களுக்கு ஏற்பட்டுள்ள அரசியல் பின்னடைவைக் காட்டுகின்றது.

எந்த முஸ்லிம் அரசியல்வாதிகளாலும் அம்பாறை மாவட்டத்தில் நீண்டகாலமாக தீர்க்கப்படாமலிருந்த மக்களின் பிரச்சினைகளுக்கு இரண்டு வருட காலத்திற்குள் பாராளுமன்ற உறுபினர் எஸ்.எம்.எம்.முஷரப் மக்களுக்கான தீர்வை பெற்றுக் கொடுத்துள்ளார்.

பல சவால்களுக்கு மத்தியில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷரப் ஊழலற்ற அரசியலை மக்கள் முன் கொண்டு செல்கின்றார்.

சாய்தமருதில் நடைபெற்ற அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் இளைஞர் மாநாட்டில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் மீது கொண்ட காழ்ப்புணர்ச்சியினால் வீண்பழி சுமத்தியுள்ளதை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் குறுகிய ஆட்சிக் காலத்தில் நல்ல சூழ்நிலையை உருவாக்கி நாட்டுக்காக அரும் பணியாற்றி வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாம் நன்றி விசுவாசமாக இருக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் அவருக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளோம். நாடு பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்து இருளில் மூழ்கி இருந்த நாட்டை மீட்டெடுப்பதற்கு முன்வரவில்லை. நாடும், சர்வதேசமும் ஏற்றுக் கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டை மீட்டெடுத்து நாட்டை அபிவிருத்தி பாதைக்கு மீள கட்டியெழுப்பியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## திகாமடுல்ல மாவட்டத்தில் 26778 பேர் வாக்களிக்க தகுதி

(ஒலுவில் விசேட நிருபர்)

ஜனாதிபதி தேர்தலில் இம்முறை திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்திலிருந்து தபால் மூலம் வாக்களிக்க 26 ஆயிரத்தி 778 பேர் தகுதி பெற்றுள்ளனர். ஜனாதிபதி தேர்தலில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்திலிருந்து 05 இலட்சத்து 55 ஆயிரத்து 432 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

அம்பாறை தொகுதியில் 01 இலட்சத்து 88 ஆயிரத்து 222 வாக்காளர்களும், சம்மாந்துறை தொகுதியிலிருந்து 99 ஆயிரத்து 727 வாக்காளர்களும், கல்முனை தொகுதியிலிருந்து 82 ஆயிரத்து 830 வாக்காளர்களும், பொத்துவில் தொகுதியிலிருந்து 01 இலட்சத்து 84 ஆயிரத்து 653 வாக்காளர்களும், வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

வாக்களிப்புக்காக 528 நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதோடு, தேர்தல் கடமைகளில் சுமார் 05 ஆயிரம் உத்தியோகத்தர்களும், பாதுகாப்பு கடமைகளுக்காக 02 ஆயிரத்து 500 உத்தியோகத்தர்களும் ஈடுபடுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் ஆண் வாக்காளர்களை விட பெண் வாக்காளர்களே அதிகமாக உள்ளனர்.

இதன்படி 02 இலட்சத்து 80 ஆயிரத்து 190 பெண் வாக்காளர்களும், 02 இலட்சத்து 72 ஆயிரத்து 13 ஆண் வாக்காளர்களும் பதிவாகியுள்ளனர்.

## தொழுநோய் விழிப்புணர்வு நிகழ்வு

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

மட்டக்களப்பில் ஐந்து வலயக் கல்வி அலுவலகம் மற்றும் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு தொழுநோய் தொடர்பான தெளிவூட்டல் நிகழ்வு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் காவேரி கலாமன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆர்.முரளீஸ்வரனின் வழிகாட்டுதலின் கீழ் பிராந்திய தொற்று நோய் வைத்திய அதிகாரி திருமதி ஏ. கார்த்திகா தலைமையில் வைத்தியர் சதுர்முகம் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழுநோய் தாக்கத்தின் தற்போதைய நிலைமை தொடர்பாகவும் இந்நோயை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் தொடர்பாகவும் இதன்போது விளக்கமளிக்கப்பட்டன.

தொழுநோயை பூரணமாக குணப்படுத்துவதற்கான மருத்துவம் தற்போது காணப்படுகின்ற போதும் மக்கள் மத்தியில் தொழுநோய் தொடர்பான விழிப்புணர்வின்மையே இந்நோய் பரவுவதற்கான பிரதான காரணமாகவுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் காவேரி கலாமன்றத்தினால் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மதத் தலைவர்கள், காவேரி கலாமன்றத்தின் இணைப்பாளர் அருட்தந்தை ஏ.எஸ். ரூபன், பிரதி பிராந்திய சேவைகள் பணிப்பாளர் ஆர்.சரவணபவன், பிராந்திய தொற்றாநோய் பொறுப்பதிகாரி இ.உதயகுமார், கல்வி பணிப்பாளர்கள், அதிபர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## கல்முனை மாநகர ஆணையாளர் ஜப்பான் பயணம்

(சாய்ந்தமருது விசேட, கல்முனை விசேட நிருபர்கள்)

கிழக்கு மாகாண சபையின் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சிப் பிரிவு பணிப்பாளரும் கல்முனை மாநகர ஆணையாளருமான என். எம். நௌபீஸ் விசேட புலமைப்பரிசில் பெற்று நேற்று (26) ஜப்பான் பயணமானார்.

ஜப்பானில் ஒரு மாத காலம் நடைபெறவுள்ள உள்ளூர் தொழில்துறை மேம்பாடு குறித்த அறிவுப் பகிர்வு பயிற்சித் திட்டத்தில் பங்குபற்றுவதற்காகவே அவர் அங்கு செல்கிறார்.

ஜப்பானிய அரசாங்கத்தினால் நடாத்தப்படுகின்ற இப்பயிற்சித் திட்டத்தில் பங்குபற்றுவதற்கான புலமைப்பரிசில் அனுசரணையை JICA எனும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் வழங்கியுள்ளது.

இப்பயிற்சியில் பங்குபற்றுவதற்காக ஜப்பான் நாட்டு அதிகாரிகளுக்கு மேலதிகமாக 06 நாடுகளில் இருந்து தலா ஒருவர் வீதம் 06 அதிகாரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதன் பிரகாரம் இலங்கை அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி கிழக்கு மாகாண சபையின் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சிப் பிரிவு பணிப்பாளரும் கல்முனை மாநகர ஆணையாளருமான என். எம். நௌபீஸ் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தமது மாநகர ஆணையாளரான என்.எம். நௌபீஸ் இத்தகைய உயர்தரமான உன்னத வாய்ப்பைப் பெற்று ஜப்பான் செல்வதை முன்னிட்டு கல்முனை மாநகர சபை உத்தியோகத்தர்கள் கடந்த வெள்ளிக்கிழமை ஆணையாளரை வாழ்த்தி வழியனுப்பி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## திருப்பழுகாமம் ஸ்ரீ கௌரி அம்பிகா சமேத கேதீஸ்வரநாதர் ஆலய மஹாகும்பாபிஷேகம்

மணல்சேனை நிருபர்

மட்டக்களப்பு திருப்பழுகாமம் ஸ்ரீ கௌரி அம்பிகா சமேத கேதீஸ்வர நாதர் (சிவன்) ஆலய மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறும்.

ஸ்ரீ கௌரி அம்பிகா சமேத கேதீஸ்வரநாதர் ஆலயத்தில் நாளை புதன்கிழமை கர்மாரம்பத்துடன் மஹாகும்பாபிஷேக நிகழ்வுகள் ஆரம்பமாகி எண்ணெய்க்காப்பு வைக்கும் நிகழ்வு நாளைமறுதினம் 29ஆம் திகதி நடைபெறுவதுடன் மஹாகும்பாபிஷேகமானது எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறும்.

பிரதிஷ்ட்டா பிரதம குரு சிவஸ்ரீ கேதீஸ்வர பவித்திர குருக்கள் தலைமையில் இந்நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

தொடர்ந்து 11 நாட்கள் மண்டலாபிஷேக பூஜைகள் அடுத்து 12 செப்டெம்பர் மாதம் 1008 சங்குகளால் சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

அன்று கும்பாபிஷேக மலர் வெளியிடும் அன்னதானமும் வழங்கப்படும் என்று ஆலய பிரமுகர் எஸ். செல்வநாயகம் தெரிவித்தார்.

## சுவாமி விவேகானந்தர் பூங்கா திறந்துவைப்பு

(பெரியபோரதீவு தினகரன், காரைதீவு குறூப் நிருபர்கள்)



புதுக்குடியிருப்பில் அழகாக அமைக்கப்பட்டுள்ள சுவாமி விவேகானந்த பூங்கா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது.

இராமகிருஷ்ண மிஷனை ஸ்தாபித்த வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின் 70 அடி உயர சிலை முதலில் திறந்து வைக்கப்பட்டது.

பின்னர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகள் சேவையின் சின்னம் சுவாமி நடராஜானந்தர் கர்மயோகி சுவாமி ஜீவனானந்த ஜீ மற்றும் சகோதரி நிவேதிதை ஆகியோரின் திருவுருவச் சிலைகள் சுவாமிகளால் திறந்து வைக்கப்பட்டன.

திறப்பு விழாவில் பிரதம அதிதியாக தஞ்சாவூர் இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி விமூர்தானந்தஜி மஹராஜ் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வு ஸ்தாபக தலைவர் க. சற்குணேஸ்வரன் தலைமையில், இலங்கைக்கான இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்த ஜீ மகராஜ் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஸ்ரீமத் சுவாமி விமூர்தானந்தஜி மஹராஜ் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே.முரளிதரன் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.

## சுகாதாரத்துறையில் 31 வருடங்கள் சேவையாற்றிய டொக்டர் உவைசுல் சேவைநலன் பாராட்டு

(பாலமுனை விசேட நிருபர்)



மருதமுனை பிரதேச வைத்தியசாலையில் 24 வருடங்கள் கடமையாற்றிய மருதமுனையைச் சேர்ந்த டொக்டர் உவைசுல் பாரி தனது 31 வருடகால அரசசேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

அவருடைய அர்ப்பணிப்புமிக்க சேவையை பாராட்டி மருதமுனை பிரதேச வைத்தியசாலை நிர்வாகத்தின் ஏற்பாட்டில் சேவை நலன் பாராட்டும், பிரியாவிடை நிகழ்வும் அண்மையில் வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எல்.எம். மிஹ்லார் தலைமையில் நடைபெற்றது.

மருதமுனை பிரதேச வைத்தியசாலையில் சுமார் 24 வருடங்கள் கடமையாற்றிய அவர் பிரதேச மக்களுக்கு மாபெரும் மக்களுக்கும் வைத்தியசாலை அபிவிருத்திக்கும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டமைக்காக வைத்தியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் அபிவிருத்தி குழுவினரால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் பிரதம அதிதியாகவும், பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சி.எம். மாஹிர் கௌரவ அதிதியாகவும், வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் உப தலைவரும் பேராசிரியருமான, எஸ்.எம்.ஜூனைடீன், செயலாளர் பி.எம்.யாசிர் அறபாத், சரோ பாம் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.எச். தாஜுடீன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

# நகர்வலம்



# ரணிலைத் தவிர வேறு எவர் வென்றாலும் நாட்டை கட்டியெழுப்ப முடியாது போகும்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவைத் தவிர வேறு எவர் வென்றாலும் நாட்டை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலையே மீண்டும் ஏற்படுமென, வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார்.

அக்கரைப்பற்றில் நடந்த கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் கடந்த இரு வருடங்களுக்குள் மாற்றம் இடம்பெற்றுள்ளது. இந்த தேர்தலில் எவரும் இன, மத பேதங்கள் பற்றி பேசவில்லை. ஒற்றுமையாக நாட்டை முன்னோக்கி கொண்டுச் செல்வது பற்றியே சிந்திக்கின்றனர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸூம், ரிஷாட் பதியூதீனின் கட்சியும் அரசாங்கத்தில் இல்லாதிருப்பதே இதற்குக் காரணம். நாட்டில் தற்போது அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக வாழ்வதற்கான வழியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உருவாக்கியிருக்கின்றார்.

இதனை மாற்ற வேண்டுமா? அல்லது தொடர வேண்டுமா என்ற கேள்வியே தற்போது உள்ளது. ரணிலைத் தவிர வேறு எவர் வென்றாலும், நாட்டை கட்டியெழுப்புவது யார் என்ற பிரச்சினை மீண்டும் எழும்.

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 69 இலட்சம் வாக்குகள் கிடைத்தன. நானும், அதாவுல்லாவும் மட்டுமே சமூகத்தின் பாதுகாப்பு கருதி கோட்டாவின் அரசாங்கத்துடன் இணைந்து செய்யப்பட்டோம்.எங்களை சிலர் குறை சொன்னார்கள். நாம் அந்த அரசாங்கத்தில் இல்லாதிருந்தால் என்ன நடந்திருக்கும் என்று அவர்கள் யோசிக்கவில்லை. பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காணலாம் என்றும் எவரும் அப்போது தெரிவிக்கவில்லை.

ஜனாஸாக்கள் எரிக்கப்பட்ட போது எட்டுப் பேர் ஒன்று சேர்ந்து அப்போதைய ஜனாதிபதி, பிரதமர், சுகாதார அமைச்சர் என சம்பந்தப்பட்ட அனைவருடனும் கலந்துரையாடினோம். இலங்கைக்கு அப்போது வருகை தந்த இம்ரான் கானுடனும் கலந்துரையாடினோம்.

மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் அவர்களின் சமூகத்தைக் கட்டியெழுப்ப கல்வியமைச்சைக் கோருகிறார்கள்.

அந்த வகையில் அதாவுல்லா மக்களுக்கான பல சேவைகளை செய்திருக்கின்றார். அவருக்கு முஸ்லிம் மக்களின் மரியாதை உரித்தாக வேண்டும்.

அரபு நாடுகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு பெரும் வரவேற்புள்ளது. பலஸ்தீனுக்காக குரல்கொடுக்கும் முஸ்லிம் அல்லாத நாடுகளில் இலங்கைக்கு இன்று உயர்வான இடமுள்ளது. ஐ.நாவிலும் பலஸ்தீனுக்காக நாம் குரல் கொடுத்திருக்கிறோம். இலங்கை அரசாங்கம் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை காசாவிற்கு வழங்கியது. காசாவில் பிரச்சினைகள் தீர்ந்த பின்னர், அங்கு பாடசாலை ஒன்றை அமைத்துக்கொடுக்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## ரயில் பயணச்சீட்டு முன்பதிவு செய்வதற்கான 'பிரவேச' இணையத்தளத்தின் அங்குரார்ப்பணம்



இணையத்தின் ஊடாக ரயில் பயணச்சீட்டுகளை முன்பதிவு செய்வதற்கான 'பிரவேச' என்ற இணையத்தளத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த 22 ஆம் திகதி நெலும் பொக்குன கோபுர வளாகத்தில் பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க தலைமையில் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் கங்கநாத் ரூபசிங்கவின் பங்களிப்புடன் இடம்பெற்றது.

பயணிகள் வரிசையில் நிற்காமல் www.pravesha.lk என்ற இணையதளத்தில் டிஜிட்டல் ரயில் பயணச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ள முடியும்.

சேவை இடம்பெறும் இரண்டு நிலையங்களுக்கு இடையே பயணிக்க தேவையான 2 மற்றும் 3ம் வகுப்புக்கான பயணச் சீட்டுக்களை வங்கிகள் வழங்கும் டெபிட் அல்லது கிரெடிட் கார்டைப் பயன்படுத்தி பெற்றுக்கொள்ள முடியும். பணம் செலுத்திய பிறகு, பயணச்சீட்டுக்கான QR குறியீடு பணம் செலுத்துபவரின் கையடக்க தொலைபேசிக்கு SMS அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும். சம்பந்தப்பட்ட ரயில் நிலையத்தில் QR குறியீட்டை சரிபார்த்து, பயணச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பயண நாளில் மட்டுமே ரயிலில் பயணம் செய்வதற்கான வாய்ப்பு உண்டு.

## மின்சாரம் தாக்கி மாணவன் உயிரிழப்பு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

கலென்பிந்துனுவெவ பகுதியில் மின்சாரம் தாக்கி பாடசாலை மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்த மாணவர் கலென்பிந்துனுவெவ பகுதியைச் சேர்ந்த 15 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர். மாணவனின் வீட்டின் பின்புறம் உள்ள குளியலறையில் குளித்துக் கொண்டிருந்த போது தண்ணீர் எடுப்பதற்காக மின் பிறப்பாக்கி இயக்கப்பட்டுள்ளது.

மின் பிறப்பாக்கியில் பொருத்தப்பட்டிருந்த கம்பியில் அவரது ஆடைகள் வைக்கப்பட்டிருந்த நிலையில் குளித்து விட்டு ஆடைகளை எடுக்க முற்பட்ட போது மின்கம்பி அவரது உடலில் வீழ்ந்ததில் மின்சாரம் தாக்கி மாணவன் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.




உலகத் தமிழ் கலை பண்பாட்டு கலைக்கூடத்தின் சார்பாக சங்கநாத இணைய வானொலியின் மூன்றாவது ஆண்டு துவக்க விழா சென்னையில் சர்பிடி தியாகராஜா அரங்கில் (23) நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பல்வேறு துறையைச் சார்ந்த சாதனையாளர்களுக்கு விருது வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார் கலந்து கொண்டு சாதனையாளர்களுக்கு விருதுகளை வழங்கினார்.

## அறநெறி பாடசாலை ஆசிரியருக்கு வருடாந்த கொடுப்பனவு ரூ. 25,000 ஆக அதிகரிக்குமாறு வேண்டுகோள்

### சர்வதேச இந்து மத பீடம் ஜனாதிபதியிடம் கோரிக்கை



இலங்கை முழுவதும் உள்ள அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கு சமய நூல் பெறும் பொருட்டு வருடாந்தம் 5000 ரூபாய் மட்டும் வழங்கப்படுகின்றது. இதனை பத்தாயிரம் ரூபாவாக அதிகரிப்பதற்கு முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பிரேரணையாக கொண்டு வந்தவேளை அரசாங்கம் மாறியதன் காரணமாக அது கைகூடவில்லை.

எனவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனை கருத்தில் எடுத்து, பல அறநெறி ஆசிரியர்கள் இது சம்பந்தமாக கலந்துரையாடி இருபத்தைந்தாயிரம் ரூபாவாக அதிகரிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை தெரிவித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, கொரோனா காலத்தில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கொடுத்திருந்த சீருடைகளும் வழங்கப்படவில்லை.

எனவே மீண்டும் அறநெறி பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சீருடை வழங்குவதுடன் இந்த வருடாந்த கொடுப்பனவை 25,000 ரூபாவாக அதிகரிக்க வேண்டுமென முன்னாள் ஜனாதிபதியின் இந்து மத விவகார இணைப்பாளரும் சர்வதேச இந்து மத பீடச் செயலாளருமான கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா அறநெறி பாடசாலைகள் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் சார்பாக இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

எனவே ஜனாதிபதி இவ்விடயத்தை கருத்தில் கொள்வார் என்பதில் ஐயமில்லை என சர்வதேச இந்து மத பீட செயலாளர் கலாநிதி சிவ ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்துள்ளார்.

### பழைய மாணவர் சங்க ஏற்பாட்டில்

## பாடசாலைக்கு முதலுதவி பெட்டிகள் அன்பளிப்பு

கலாவெவ முஸ்லிம் மத்திய கல்லூரியின் நலன் கருதி பழைய மாணவர் சங்கத்தின் வேண்டுகோளின் பேரில், ஒருதொகை முதலுதவிப்பெட்டிகள் பாடசாலைக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. இதனை இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் எப்.எம். சஜீர் பெற்றுக்கொடுத்துள்ளார். முதற்கட்டமாக வகுப்பறைகளுக்கு தேவையான முதலுதவிப் பெட்டிகள் பாடசாலையின் பழைய மாணவர் சங்க செயலாளர் எஸ்.ஏ. இல்ஹாமிடம் கையளிக்கப்பட்டுள்ளது.





எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் தேர்தல் பிரசாரக் கூட்டம் (25) தம்புத்தேகம பஸ் நிலையத்திற்கு அருகில் நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படம்.
(படம்: அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

## மாவனல்லையில் போதைப் பொருள் விழிப்பூட்டல் திட்டம் அங்குரார்ப்பணம்





இலங்கை ஜமாஅதே இஸ்லாமியின் 70 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, மாவனல்லை பிரதேச பிரமுகர்களுடனான சந்திப்பு மாவனல்லை ஜமாஅதே இஸ்லாமி கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. மாவனல்லை பிராந்திய ஜமாஅதே இஸ்லாமி தலைவர் ஆர்.எம். ரியாஸ் தலைமையில் "விழுமிய வாழ்வு நலம் நாமும் சமூகம் "எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஜமாஅத்தின் தலைவர் உஸ்தாத் எம். எச். எம். உஸைர் (இஸ்லாஹி) சிறப்பு அதிதியாகவும் முன்னாள் தலைவர் உஸ்தாத் ஹஜ்ஜுல் அக்பர், ரம்ய லங்கா கிளை பிரதிநிதி டாக்டர் அக்பர் அலி, ஹெல்த்தி லங்கா இயக்குனர் சமிக ஜயசிங்க, ஜமாஅத்தின் கேகாலை பிராந்திய ஒருங்கிணைப்பாளர் இஸட். ஏ.எம். பவாஸ் மற்றும் நலன் விரும்பிகள் என பலரும் கலந்து சிறப்பித்ததோடு , போதைப்பொருள் ஒழிப்பு சம்பந்தமான விழிப்புணர்வு திட்டத்தில் ஹெல்த்தி லங்கா நிறுவனத்தோடு சேர்ந்து ரம்ய லங்கா நிறுவனத்தினரும் இணைந்து செயற்பட முன்வந்து கைகோர்த்தனர்.

(தகவல்: பாரா தாஹீர்)





எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு மாத்தறை மாவட்ட வெலிகம தேர்தல் தொகுதிக்கான அலுவலகம் (18) திறந்து வைக்கப்பட்டது. இதில் மின் சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, வெலிகம நகரசபை முன்னாள் தலைவர் எச்.எச்.முகம்மது உட்பட பலரும் கலந்து கொண்டுள்ளதை படத்தில் காணலாம். (படம்: வெலிகம தினகரன் நிருபர்)

## சட்டவிரோத மருத்துவ நிலையம் முற்றுகை; போலி வைத்தியர் கைது

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்



சட்டவிரோதமாக மேற்கத்திய மருத்துவ நிலையம் ஒன்றை நடாத்திச் சென்ற ஆயுர்வேத வைத்தியர் ஒருவரை அநுராதபுரம் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும் ஒயாமடுவ பொலிஸாரும் இணைந்து கைது செய்துள்ளனர்.

அநுராதபுரம் ரம்பாவ பகுதியைச் சேர்ந்த ஆயுர்வேத வைத்தியர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த ஆயுர்வேத வைத்தியர் மகாவிலச்சிய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட மானின்கமுவ பகுதியில் மேற்கத்திய சட்டவிரோத மருத்துவ மத்திய நிலையம் ஒன்றை நடத்திச்செல்வதாக பிரதேசவாசிகள் மூலம் கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய வைத்திய நிலையம் சுற்றி வளைக்கப்பட்டு அங்கு நோயாளர்களுக்கு வழங்கப்படும் மாத்திரைகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் வைத்திய நிலையம் சீல் வைக்கப்பட்டு வைத்தியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மகாவிலச்சிய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய வடமத்திய மாகாண ஆயுர்வேத ஆணையாளரின் அனுமதியின்பேரில் குறித்த கைது இடம்பெற்றுள்ளது.

## மின் வேலியில் சிக்கி இரு யானைகள் உயிரிழப்பு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

புத்தளம் ஆனமடுவ, வேம்புவெவ மற்றும் வன்னாத்தவில்லு பழைய எலுவன்குளம் ஆகிய பகுதிகளில் இரண்டு காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக புத்தளம் மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தின் உதவி பணிப்பாளர் எரந்த கமகே தெரிவித்தார்.

வன்னாத்தவில்லு பழைய எலுவன்குளம் பகுதியில் உயிரிழந்த சுமார் 28 வயது மதிக்கத்தக்க காட்டு யானை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அத்தோடு, ஆனமடுவ வேம்புவெவ பகுதியில் உள்ள வீடொன்றின் பின்பக்கமாக யானைக்காக பொருத்தப்பட்ட மின் வேலியில் சிக்கி 30 வயது மதிக்கத்தக்க காட்டு யானையொன்று உயிரிழந்துள்ளதாகவும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த இரண்டு யானைகளும் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும், ஆனமடுவ பொலிஸாரும் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இந்தியன் வங்கி

356, காலி வீதி, கொழும்பு 03.

## 2024 ஜுன் 30 ஆம் திகதி முடிவடைந்த காலத்திற்கான நிதி அறிக்கை

### 30.06.2024 முடிவடைந்த காலத்திற்கான வருமானக்கூற்றின் சுருக்கம்

| ரூபாய் ஆயிரங்களில் | வங்கி (இலங்கை ரூபா) | | குழு (இந்திய ரூபா) | |
|---|---|---|---|---|
| | நடைமுறைக் காலம் | முன்னைய காலம் | நடைமுறைக் காலம் | முன்னைய காலம் |
| | 01.04.2024 முதல் 30.06.2024 வரை (கணக்காய்வுக்குட்படாதது) | 01.04.2023 முதல் 30.06.2023 வரை (கணக்காய்வுக்குட்படாதது) | 01.04.2024 முதல் 30.06.2024 வரை (கணக்காய்வுக்குட்படாதது) | 01.04.2023 முதல் 30.06.2023 வரை (கணக்காய்வுக்குட்படாதது) |
| வட்டி வருமானம் | 651,595 | 807,795 | 150,392,287 | 130,494,084 |
| வட்டிச் செலவினங்கள் | 160,730 | 143,736 | 88,611,389 | 73,459,037 |
| **தேறிய வட்டி வருமானம்** | **490,865** | **664,059** | **61,780,898** | **57,035,047** |
| கட்டணம் மற்றும் தரகு வருமாணம் | 31,229 | 21,908 | 18,912,490 | 15,227,451 |
| கட்டணம் மற்றும் தரகுச் செலவினங்கள் | - | | | |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமாணம்** | **31,229** | **21,908** | **18,912,490** | **15,227,451** |
| வியாபாரம் மூலமான தேறிய இலாபம்/(நட்டம்) | - | - | - | - |
| இலாபம்/(நட்டம்) ஊடாக நியாய மதிப்பீட்டில் | - | - | - | - |
| நியமிக்கப்பட்ட நிதியியல் சாதனங்கள் மூலமான தேறிய இலாபம்/(நட்டம்) | - | - | - | - |
| நியமிக்கப்பட்ட நிதிப் பொறுப்புகளின் மூலமான தேறிய இலாபம்/(நட்டம்) | - | - | - | - |
| அங்கீகரிக்கப்படாத நிதிச் சொத்துக்களின் மூலமான தேறிய இலாபம்/(நட்டம்) | - | - | - | - |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய மதிப்பீட்டில் | - | - | - | - |
| நிலைமாறக்கூடிய செலவீனம் | - | - | - | - |
| நியாய மதிப்பீட்டின் ஊடாக ஏனைய விரிவான வருமானம் | - | - | - | - |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் (தேறிய) | (68,810) | (2,675) | 598,362 | 1,977,965 |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | **453,284** | **683,292** | **81,291,750** | **74,240,463** |
| பெறுமதி குறைப்பு | (40,800) | 32,591 | 12,583,865 | 17,406,536 |
5. வழங்குநர் இயைபுயை உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து சகல சட்டபூர்வமான ஒப்புதல்களைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் சட்டபூர்வமான அனுமதிக்கு ஏற்புடைய வரிகள் மற்றும் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும்.
6. சகல விலைமனுக்களுடனும் 01ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் விலைக்கோரல் பிணை முறி அற்ற விலைமனுக்கள் பதிலளிக்காதவை எனக் கருதப்படும் என்பதுடன் எவ்வித விசாரணையுமின்றி நிராகரிக்கப்படும்.
7. விலைமனு ஆவணத்தின் சகல பக்கங்களிலும் விலைமனுதாரர் சிற்றொப்பமிட்டு அவரது முத்திரை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்களை 2024 செப்டெம்பர் 17ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னராகக் கிடைக்கும் வகையில், ஒன்றில் கொழும்பு-05, 1514, ஜாவத்த வீதி, கொழும்பு பிராந்திய நீர்ப்பாசன அலுவலகத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில், மேற்கூறிய முகவரியில் உள்ள பிராந்திய பெறுகைக் குழுத் தலைவருக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2024 செப்டெம்பர் 17ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
8. கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் வேலை மற்றும் ஒப்பந்த இலக்கத்தைத் தயவு செய்து எழுதவும்.
9. சுய விருப்பத்தின் பேரில் சமுகமளிக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கு தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**பொறி. எஸ். விதானபத்திரன,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்,**
**கொழும்பு பிராந்திய அலுவலகம்,**
**1514, ஜாவத்த வீதி, கொழும்பு - 05**

**2024 ஆகஸ்ட் 27ஆம் திகதி.**

---

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### மெததும்பர பிரதேச சபை – தெல்தெனிய

பின்வரும் ஒப்பந்தங்களைச் செய்வதற்காக 2024 ஆகஸ்ட் 27ஆம் திகதி முதல் 2024 செப்டெம்பர் 19ஆம் திகதி வரையில் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு செய்து கொண்டுள்ள தகைமை வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மெததும்பர பிரதேச சபையின் பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார். விலைமனுக்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையில் மேற்கொள்ளப்படும் என்பதுடன் விலைமனுக்களை மதிப்பிடுகையில் ஒப்பந்தக்காரர்களின் பிராந்திய முன்னுரிமை கவனத்திற்கொள்ளப்படும். (P.F.C. 2016/III பிரகாரம்)

| ஒப்பந்தத்தின் பெயர் | ஒப்பந்த இலக்கம் | பொறியியலாளர்களின் மதிப்பீடு மில்லியன் ரூபாவில் (வெட் மற்றும் அவசரச் செலவுகள் இன்றி) | தேவையான CIDA தரம் மற்றும் துறை (கட்டிட வேலைகள்) | நிர்மாணக் காலம் (நாட்கள்) | விலைக் கோரல் பிணை முறித் தொகை | | விலைமனு ஆவணக் கட்டணம் (மீளளிக்கப் படாதது) ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | வங்கி உத்தரவாதமானால் | ரொக்கப் பணமானால் | |
| மெதமஹநுவரயில் முன்மொழியப்பட்ட வாரச் சந்தையை நிர்மாணித்தல் (கட்டம் 1 - முதலாம் மாடி ஸ்லப் வரை) | CPC/MDPS/2024/NCB/01 | 9.0 | C6/C7 | 120 | 90,000.00 | 45,000.00 | 5,000.00 |
| அம்பலயில் 100m³ நீர்க் களஞ்சிய தாங்கியொன்றை நிர்மாணித்தல் | CPC/MDPS/2024/NCB/02 | 9.8 | C6/C7 | 120 | 100,000.00 | 50,000.00 | 5,000.00 |

1. CIDA நிறுவனத்தின் குறைந்தபட்ச பதிவைக் கொண்டுள்ள வளமுள்ள விலைமனுதாரர்கள் மேற்கூறிய ஆவணங்களைக் கொள்வனவு செய்வதற்கு அபகீர்த்தியாளர் பட்டியலப்படுத்தப்படாதவர்களாக இருத்தல் வேண்டும்.
2. விலைமனுதாரர்கள் 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியுடைய சிவில் ஒப்பந்தங்களுக்கு 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தக்காரர்கள் பதிவின் கீழ் பதிவு செய்துகொண்டிருத்தல் வேண்டும். (இல. 400, டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு-10) மற்றும் விலைமனுவுடன் பதிவுச் சான்றிதழை இணைத்தல் வேண்டும்.
3. மெததும்பர பிரதேச சபை செயலாளருக்கு மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 5,000.00 ரூபாவைச் செலுத்துவதன் பேரில் 2024 ஆகஸ்ட் 27ஆம் திகதி முதல் 2024 செப்டெம்பர் 19ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான அலுவலக நேரங்களில் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். 2024 ஆகஸ்ட் 27ஆம் திகதி முதல் 2024 செப்டெம்பர் 19ஆம் திகதி வரையில் அலுவலக நேரங்களில் விலைமனுக்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024 செப்டெம்பர் 20ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் ஒன்றில் தலைவர், பெறுகைக் குழு, மெததும்பர பிரதேச சபை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது மெததும்பர பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
5. விலைமனுதாரர்கள் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என தனித்தனியான இரு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறைகளில் இட்டு, அவ்வுறைகளில் ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' என முறையாகக் குறிப்பிடுதல் வேண்டும். இந்த மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளைத் தாங்கிய உறைகளை வேறொரு உறையில் இட்டு அந்த உறையின் இடதுபக்க மேல் மூலையில் இயைபுடைய ஒப்பந்தத்தின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். மேலதிக விபரங்களை 081-2374067 எனும் தொலைபேசி இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
6. விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 77 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாகும் என்பதுடன் விலைக்கோரல் பிணை முறியானது 2025 ஜனவரி 03ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
7. விலைமனுக்கள் 2024 செப்டெம்பர் 20ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு தெல்தெனியவிலுள்ள மெததும்பர பிரதேச சபையில் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.
8. இந்த விலைக்கோரல் அழைப்பின் ஒப்பந்தத்தைக் கையளிப்பதற்கு, ஒரு பகுதியைக் கையளிப்பதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கான இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளும் உரிமையை மெததும்பர பிரதேச சபை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மெததும்பர பிரதேச சபை,**
**தெல்தெனிய.**
**தொ.பே. இல. 081-2374067**

---

## சுகாதார சேவைகள் திணைக்களம்

**தென் மாகாணம்**

### தென் மாகாண சுகாதாரத் திணைக்களத்திற்குச் சொந்தமான நிறுவனங்களுக்காக ஒட்சிசன் உட்பட ஏனைய வாயுக்களைப் பெற்றுக் கொள்ளல். 2024 – 2025ம் ஆண்டு

## கேள்வி அறிவித்தல்

2024 - 2025ம் ஆண்டிற்காக கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் நிறுவனங்களுக்காக ஒட்சிசன் உட்பட ஏனைய வாயுக்களை வழங்கும் முகமாக வழங்குநர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கீழ்க்காணும் தகைமைகளுடனான நிறுவனங்களுக்கு இதற்காக விண்ணப்பிக்கலாம்.

1. இலங்கையில் வியாபார பெயர் பதிவுசெய்யும் சட்டவாக்கத்தின் கீழ் பதிவு செய்து 05 வருட கால சேவையை வழங்கியுள்ள நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
2. கேள்விப் பத்திரங்கள் 2024.08.28 முதல் 2024.09.13 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை இல. 15ஏ, கீழ் டிக்சன் வீதி, காலி என்ற முகவரியில் உள்ள தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

   விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளும் போது ஒரு விண்ணப்பத்திற்கு மீளளிக்கப்படாத ரூ.10,000/- மீளளிக்கப்படும் ரூ.100,000/- கட்டணத்தை விண்ணப்பங்களை ஒப்படைக்கும் போது இத் திணைக்களத்தின் பிரதம கணக்காளரிடம் காசு செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டு மற்றும் கீழ்க்காணும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

   i. வியாபார பெயர் பதிவு செய்யும் சான்றிதழ்
   ii. 05 வருட அனுபவம் பற்றி சேவைச் சான்றிதழ்
3. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை 2024.09.18 மு.ப.10.00 இற்கு முன்பு தலைவர், மாகாண சுகாதார சேவைத் திணைக்கள பெறுகைக் குழு, தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களம், இல. 15ஏ, கீழ் டிக்சன் வீதி, காலி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்விகள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் “2024 - 2025ம் ஆண்டிற்கான ஒட்சிசன் உட்பட ஏனைய வாயுக்களை வழங்குதல்” என்று குறிப்பிடுதல் வேண்டும் அத்துடன் தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
4. கேள்வி ஆவணங்கள் 02 பிரதிகளுடன் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு கோவையாகத் தயாரித்து வேறுவேறு உறைகளில் இட்டு அவ் உறைகள் இரண்டையும் தனி உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
5. 2024.09.18 மு.ப. 10.00 இற்கு கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் அவை திறக்கப்படுவதுடன் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு கேள்விகள் திறக்கப்படும் வேளையில் சமுகமளிக்கலாம்.
6. குறித்த கேள்விப் பத்திரங்களை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரியது.
7. மேலதிக விபரங்களுக்கு தென் மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்/ பிரதம கணக்காளரை அழையுங்கள்.

   (தொ.பே.இல : 091 - 2231620/ 091 - 2234980/ 091 - 2224609)

**தலைவர்,**
**மாகாண பெறுகைக் குழு,**
**தென் மாகாண சுகாதார சேவைத் திணைக்களம்,**
**இல. 15ஏ, கீழ் டிக்சன் வீதி, காலி**

**அட்டவணை**

| நிறுவனம் |
|---|
| மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை - காலி |
| மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை - மாத்தறை |
| மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை - ஹம்பாந்தோட்டை |
| ஆதார வைத்தியசாலை - எல்பிட்டிய |
| ஆதார வைத்தியசாலை - பலப்பிட்டிய |
| ஆதார வைத்தியசாலை - உடுகம |
| ஆதார வைத்தியசாலை - தங்கல்ல |
| ஆதார வைத்தியசாலை - கம்புறுப்பிட்டிய |
| ஆதார வைத்தியசாலை - வலஸ்முல்ல |
| ஆதார வைத்தியசாலை - திஸ்ஸ |
| ஆதார வைத்தியசாலை - தெனியாய |

CDU/TS/2024/15& 16

# இலங்கை சுங்கம்

## கையகப்படுத்தப்பட்ட பண்டங்களின் கேள்வி விற்பனை

கையகப்படுத்தப்பட்ட வாகனங்கள்/ தங்கம்/தங்க ஆபரணங்கள்/ மின்னியல்/ இலத்திரனியல் சாதனங்கள் மற்றும் சில நானாவித பண்டங்கள் ஆகியனவற்றின் கேள்வி விற்பனையானது இலங்கை சுங்க மத்திய அகற்றல் பணியகத்தில் 2024 ஓகஸ்ட் 30 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு நடைபெறும்.

விற்பனை செய்யப்படவுள்ள பண்டங்களின் பட்டியலை 27 ஆம், 28 ஆம் மற்றும் 29 ஆம் திகதிகளில் மு.ப. 10 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் மீளளிக்கப்படாத தொகையாகிய 25 ரூபாவைச் செலுத்திய பின்னர் இலங்கை சுங்க 3 ஆம் மாடியின் மத்திய அகற்றல் பணியகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மேலும், விற்பனையாகவுள்ள பண்டங்களின் பட்டியலானது 2024 ஓகஸ்ட் 27 ஆம் திகதியிலிருந்து www.customs.gov.lk என்ற சுங்க உத்தியோகபூர்வ இணையதளத்தில் காட்சிப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்கட்கு பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**011-2430795**
**011-2143434 நீடிப்பு 7300**

**சுங்க பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை சுங்கம்,**
**'சுங்க இல்லம்',**
**இல.: 40, பிரதான வீதி,**
**கொழும்பு-11.**

# ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை பொறியியல் திணைக்களம்

## கேள்விமனுக்கோரல் (IFB)

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மகாநகர சபையின் நகராட்சி ஆணையாளரினால் பின்வரும் பணிகளுக்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

| மனு இலக்கம் | மனுக் கோரலுக்கான விபரம் | மனு முடிவடையும் திகதி |
|---|---|---|
| SJKMC/ENG/W3/01/2024/07 | இராஜகரிய மக்கள் வங்கி (சமுத்ராதேவி நிலம்) அருகில் பல்நோக்கு மற்றும் சுயவேலை வாய்ப்பு நிலையத்தின் கட்டுமானம் IV ஆம் கட்டம் | 2024.09.19 |
| CIDA Required Category C4 in the field of Building Construction | மனுப்பிணைத் தொகை ரூ.1,000,000.00 (பணவடிவிலாயின் ரூ.500,000.00 | |

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையின் மாநகரப் பொறியியலாளர்கள் திணைக்களத்தில் **2024.08.27** ஆம் திகதி முதல் **2024.09.18 வரை** வேலை நாட்களில் **மு.ப.9.00 மணி முதல் பி.ப.15.00** மணி வரை மனு ஆவணங்கள் வழங்கப்படும். ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையின் கொள்முதல் குழுவின் தலைவரிடம் எழுத்துப்பூர்வமாக கோரிக்கையொன்றினை சமர்ப்பித்து மற்றும் ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையின் காசாளரிடம் ஒவ்வொரு ஆவணத்திற்கும் **ரூ.25,000.00 + வரி திரும்பப்பெற முடியாத கட்டணத்தினைச் செலுத்தி** ஆங்கில மொழியிலான மனு ஆவணத்தின் முழுமையான தொகுப்பை பெற்றுக்கொள்ள முடியும். முன் சந்திப்பின் போது ஏல ஆவணங்களை வரவேற்பு கூடத்தில் பரிசீலனை செய்யலாம். மனுக்கள் முடிவடையும் நேரம் **2024.09.19** ஆம் திகதி **14.00** மணியாகும். மேலதிக விவரங்களுக்கு **www.kotte.mc.gov.lk** ஐப் பார்வையிடவும்.

நகராட்சி ஆணையாளர்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை,
த.பெ.இல 06,
ஸ்ரீ ஜயவர்தனபுர.
தொ.பே - **011-2862173** / தொ.நகல் - 011-2874703

SELACINE

Applicable Rates for Obituary Notices of Daily News
For 15 Words - Rs. 300
* Each additional word Rs. 20/-
N. B. - Death Certificate is essential
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk
frontoffice@lakehouse.lk

Wherever you are..,
The best way to Fulfil your Future Dreams...
Gather with,

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Green Light for Online Transfer
Lake House Branch
Acc. No. 000000377
WE ACCEPT
E-mail - classified@lakehouse.lk
077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347
011 2 429 383 I 011 2 429 342/ 343

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## உள்ளூராட்சித் திணைக்களம் - வடமத்திய மாகாணம் இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்டது.

1. பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களுக்காக தகுதியான மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஆணையாளர் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.
2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையில் செயற்படுத்தப்படும். இந்த பெறுகையின் கீழ் மேற்கொள்ளப்படும் வேலைகளின் மதிப்பீட்டுப் பெறுமதி (வெட் மற்றும் ஏனைய வரிகள் இன்றி) 50 மில்லியன் ரூபாவிற்குக் குறைவதனால் 04/2016(iii) அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் CIDA தரத்திற்கான பிராந்திய முன்னுரிமை பிரயோகிக்கப்படும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்க தகுதி பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்கு இயைபுடைய துறையில் CIDA பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தைக் கையளிக்க தகுதி பெறுவதற்கான தகுதித் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை அநுராதபுரம், தர்மபால மாவத்தை, மாகாண சபைக் கட்டிடத் தொகுதி, உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஆணையாளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 025-2234728, தொலைநகல்: 025-2222127 மின்னஞ்சல்: ncplg2020@gmail.com).
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024-08-27ஆம் திகதி முதல் 2024-09-18ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி மற்றும் அநுராதபுரம், தர்மபால மாவத்தை, மாகாண சபைக் கட்டிடத் தொகுதி, உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஆணையாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் கடிதமொன்றையும் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கட்டணங்களை ரொக்கப் பணமாகவே செலுத்துதல் வேண்டும்.
7. விலைமனுக்களை 2024-09-19ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்பதாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் / ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், மாகாண சபைக் கட்டிடத் தொகுதி, தர்மபால மாவத்தை, அநுராதபுரம் எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
9. சகல விலைமனுக்களுடனும் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள இயைபுடைய திட்டங்களின் தொகைக்கான இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட விலைமனுப் பிணை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது வடமத்திய மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

| இல. | செயற்றிட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுக் கிரயச் செலவு மற்றும் ஒப்பந்தக் காலம் | CIDA தரம் மற்றும் விசேடத்துவம் | விலைக் கோரல் பிணைத் தொகை மற்றும் செல்லுபடிக் காலம் (வரையில்) | விலை மனுக்களின் செல்லுபடிக் காலம் | மீளளிக்கப் படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | திரப்பனே பிரதேச சபையின் தயாகம மினி சந்தைக் கட்டிடத்தொகுதியின் மிகுதி வேலைகள் | 5.714 மில். 90 நாட்கள் | C7 மற்றும் C6 கட்டிட நிர்மாணம் | 2025-01-02 60,000.00 | 77 நாட்கள் 2024-12-05 | 3,000.00 |
| 2 | எலஹர பிரதேச சபையில் அத்தனகடவல வாரச் சந்தையை நிர்மாணித்தல் | 11.19 மில். 90 நாட்கள் | C6 மற்றும் C5 கட்டிட நிர்மாணம் | 2025-01-02 125,000.00 | 77 நாட்கள் 2024-12-05 | 6,000.00 |
| 3 | தலாவ பிரதேச சபை, கடியாவ முன்பள்ளியை நிர்மாணித்தல் | 6.13 மில். 90 நாட்கள் | C7 மற்றும் C6 கட்டிட நிர்மாணம் | 2025-01-02 65,000.00 | 77 நாட்கள் 2024-12-05 | 3,000.00 |
| 4 | பொலன்னறுவை மாநகர சபை, முனியாண்டி வாவியின் துப்புரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்துதல் | 5.58 மில். 90 நாட்கள் | C7 மற்றும் C6 கட்டிட நிர்மாணம் | 2025-01-02 60,000.00 | 77 நாட்கள் 2024-12-05 | 3,000.00 |
| 5 | கல்நேவ பிரதேச சபை, அவுக்கன சொபா உயனயில் வீதி விளக்குகள் மற்றும் வாகன நிறுத்துமிட வசதிகளை மேம்படுத்துதல் | 7.78 மில். 90 நாட்கள் | C7 மற்றும் C6 கட்டிட நிர்மாணம் | 2025-01-02 80,000.00 | 77 நாட்கள் 2024-12-05 | 3,000.00 |
| 6 | எலஹர பிரதேச சபை, பகமுன சிறுவர் பூங்காவில் மண்டபம் மற்றும் உத்தேச சந்தைக் கட்டிடத்தொகுதி | 6.96 மில். 90 நாட்கள் | C7 மற்றும் C6 கட்டிட நிர்மாணம் | 2025-01-02 70,000.00 | 77 நாட்கள் 2024-12-05 | 3,000.00 |
| 7 | லங்காபுர பிரதேச சபை, சுங்காவிலயில் வாரச் சந்தையை நிர்மாணித்தல் (கட்டம் 02) | 19.60 மில். 90 நாட்கள் | C6 மற்றும் C5 கட்டிட நிர்மாணம் | 2025-01-16 60,000.00 | 91 நாட்கள் 2024-12-19 | 6,000.00 |
| 8 | பலகல பிரதேச சபை, வரலாற்று தேசிய நாமல் உயன பூங்காவை உல்லாசப் பயணிகளை கவரும் இடமாக மேம்படுத்துதல் | 7.3 மில். 90 நாட்கள் | C7 மற்றும் C6 கட்டிட நிர்மாணம் | 2025-01-02 75,000.00 | 77 நாட்கள் 2024-12-05 | 3,000.00 |

**திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர்/ ஆணையாளர்,**
**உள்ளூராட்சித் திணைக்களம்,**
**வடமத்திய மாகாணம்,**
**அநுராதபுரம்.**
**2024-08-27.**

# கேள்வி அறிவித்தல்

# இலங்கை இராணுவம்

## 2024ஆம் வருடத்தில் இலங்கை இராணுவத்திற்கு பொருட்களை கொள்வனவு செய்வதற்காக உற்பத்தியாளர்கள் / வழங்குநர்கள் / இறக்குமதியாளர்கள் / ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரல்

2024ஆம் வருடத்தினுள் இலங்கை இராணுவத்தின் தேவைப்பாடுகளுக்காக பின்வரும் பொருட்களை தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் மூலம் வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை இராணுவத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் கோரப்படுகின்றன.

அ) UPS பெற்றரி
ஆ) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள்
இ) துப்புரவேற்பாட்டு உருப்படிகள் / சுத்திகரிப்புப் பொருட்கள்
ஈ) தீயணைப்புக் கருவிகளை மீள் நிரப்புதல்
உ) முடமானவர்களுக்கான செயற்கைப் பொருட்கள்
ஊ) ஏனைய பொருட்கள்

2. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பின்வரும் இணைய தளத்தின் ஊடாக அல்லது 0112-987534, 0112-987537 எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
**அ. www.promise.lk**
**ஆ. www.army.lk**

**இராணுவத் தளபதி,**
**இராணுவத் தலைமையகம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர,**
**கொழும்பு.**

# பெறுகை அறிவித்தல்

## தெரணியகலை பிரதேச சபை, சப்ரகமுவ மாகாணம்

கீழ்க்காணும் வேலை விடயங்களுக்காக தெரணியகலை பிரதேச சபையின் பெறுகைக் குழுவின் தலைவரால் 2024.09.10 மு.ப. 11.00 வரை கேள்விதாரர்களிடம் இருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.

| தொ. இல | வேலை விடயங்கள் | பொது மதிப்பீட்டு வேலை பெறுமதி (ரூ.மி) | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரூ) | மீளளிக்கப்படாத கேள்விப் பிணை முறி (ரூ) | ஒப்பந்தப் பதிவுப் பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 01 | Development of the access road of Deraniyagala Alihata Ella எலிஹர்த்த பிரதேச வழியை நிர்மாணித்தல் | 8.0 | 5,000.00 | 97,000.00 | C5/ C6/C7 |
| 02 | Improvement of tourist facilities at rakkanawa waterfall tourist aria ரக்கனாவ எல்ல பிரவேச வழி நிர்மாணித்தல் | 4.7 | 5,000.00 | 57,000.00 | C5/ C6/C7 |
| 03 | Improvement of sanitary and tourist facilities at kirihena watawala ரக்கனாவ எல்ல தியபஹச சுற்றுலா இல்லம் மற்றும் மலசல கூட அமைப்பு | 4.9 | 5,000.00 | 60,000.00 | C5/ C6/C7 |

02. இக் கேள்வி கோரல் திறந்த போட்டி பெறுகை செயற்பாட்டின் கீழ் இடம்பெறுவதுடன், இக் கைத்தொழில் ரூ.மி. 50 ற்கு குறைவானபடியால் அரச நிதி சுற்றுநிருப இல. 04/2016 (ii) மற்றும் 04/2016 (iii) இன் பிரகாரம் பிரதேச முன்னுரிமை மற்றும் குறித்த CIDA தரப்படுத்தல் முன்னுரிமையை அடிப்படையாகக் கொண்டு நிர்மாணத்திற்காக கேள்விதாரர் தேர்ந்தெடுக்கப்படுவர். அச் சுற்று நிருபத்தின் பிரகாரம் விநியோகிக்கப்படும் அரச நிதி சுற்று நிருபம் 2020/03, 2020/031 மற்றும் 04/2016 (iv) என்ற சுற்று நிருபம் பெறுகை விடயங்களுடன் பொருந்தும்.
03. கேள்வி விண்ணப்பங்கள் 2024.08.27 முதல் 2024.09.09 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 09.00 முதல் பி.ப. 03.00 வரை மேற்கண்டவாறு கட்டணத்தை செலுத்தி தெரணியகலை பிரதேச அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
04. சகல கேள்விதாரர்களும் இக் கைத்தொழிலுக்காக மேற்படி கேள்வி பிணைமுறி பெறுமதிக்குப் பொருந்தும் கேள்விப்பிணைமுறியாக அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட கேள்விப் பிணையொன்றை 2024.08.27 முதல் 2025.01.31 வரை செல்லுபடியாகுமாறு "செயலாளர், தெரணியகலை பிரதேச சபை" சலுகை பெறுபவராக பெயர் குறிப்பிடப்பட்டு பெற்றுக் கொண்ட கேள்விப் பிணைமுறியின் மூலம் அல்லது குறித்த கைத்தொழிலின் பெயரில் கேள்விப் பிணைத்தொகையாக பிரதேச சபையின் குறித்த தொகையை வைப்புச் செய்து பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை கேள்வி ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. இக் கைத்தொழில் பற்றிய விபரங்களை தெரணியகலை பிரதேச சபைக்கு வருகைதந்து அல்லது தொ.பே.இல. 036 2249275 மூலம் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். தேவைப்படுபவருக்கு வாரத்தின் வேலை நாட்களில் இலவசமாக கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
06. பொறியிடப்பட்ட கேள்விகள் 2024.09.10 மு.ப. 11.00 இற்கு அல்லது அதற்கு முன்பு தெரணியகலை பிரதேச சபை அலுவலகத்தில் பொறியிடப்பட்ட பெட்டியில் கொண்டுவந்து உள்ளிட முடியும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன், விலைமனுக்கள் உள்ளிடும் உறையின் இடது மேல் மூலையில் கைத்தொழிலின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். மேலும் கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட நகல்பிரதியை வேறு உறைகளில் இட்டு உறையின் இடது மேல் மூலையில் கைத்தொழிலின் பெயர் மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
07. 2024.09.10 மு.ப. 11.00 இற்கு தெரணியகலை பிரதேச சபை அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும். கேள்வி திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
08. கேள்விப் பத்திரங்களை முழுமையாக அல்லது அரைவாசியை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை தெரணியகலை பிரதேச சபை பெறுகைக் குழுவிற்கு உரியது.

2024.08.27

**ஆர்.டி.நளின் புஷ்பகுமார**
**தலைவர், பெறுகைக் குழு,**
**தெரணியகலை பிரதேச சபை**

# இலங்கை முதலீட்டு சபை (BOI)

**விலைமனு மூடப்படும் திகதியை நீடிப்பதற்கான அறிவித்தல் அநுராதபுரம் மற்றும் நுவரெலியா சேர்க்கியூட் பங்களாக்களை ஸ்தாபிப்பதற்காக குத்தகை அடிப்படையில் வீடுகளைப் பெற்றுக்கொள்ளல்**

மேற்படி விலைமனு பற்றிய 2024 ஓகஸ்ட் 04ம் திகதிய சன்டே ஒப்சர்வர், சிலுமின, வாரமஞ்சரியில் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரத்துடன் சம்பந்தப்பட்டது. விலைமனு மூடப்படும் திகதிகள் கீழ்க்காணுமாறு திருத்தப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது.

- **விலைமனுக்கள் மூடப்படும் திகதி - 2024 செப்டெம்பர் 09ம் திகதி 14.00 மணிக்கு**

2024 ஓகஸ்ட் 04ம் திகதியிடப்பட்ட மேற்படி பத்திரிகை அறிவித்தலில் தரப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மாற்றமின்றி காணப்படும்.

விலைமனுதாரர்கள், சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) இடமிருந்து 0112543041 / 0741531432 மூலம் சிரேஷ்ட பிரதி பணிப்பாளர் (நிர்வாகம்) இடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்**
**இலங்கை முதலீட்டுச் சபை**

# காணி எடுத்தற் சட்டம் 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது குறிப்பு இல -** තිප්‍රාලේ/1/8/3/80 අත්

காணி எடுத்தற் சட்டத்தின் கீழ் அரசு எடுத்துக் கொண்டுள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளின் விபரங்கள் சம்பந்தமாக அச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் உரிமை மற்றும் நஷ்ட ஈட்டு விசாரணைகள் 2024 செப்டெம்பர் 20 ஆம் திகதி திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என்னால் நடைபெறவுள்ளது என்பதை பொதுமக்கள் அறிந்து கொள்வதற்கு இவ்வாறு அறிவிக்கப்படுகின்றது. இக் காணிகளுக்கான உரித்துடையவர்கள் அன்றைய தினம் சமுகமளிக்கவும். மேலதிக விபரங்களுக்கு 2393/46 மற்றும் 2024.07.19 இலக்க அதிவிசேட வர்த்தமானியை பார்க்கவும்.

| | |
|---|---|
| பிரதேச செயலகம் | - திம்பிரிகஸ்யாய |
| ஆரம்ப வரைபட இல. | - கொ 9992 |
| துண்டு இல. | - 01 - 75 |
| முழு காணியின் விஸ்தீரணம் | - 0.0588 ஹெக்டயார் |
| கிராமத்தின் பெயர் | - பொரளை (பிரிவு இலக்கம் 33) |

**பிரியந்தா திசாநாயக,**
**பிரதேச செயலாளர்,**
**திம்பிரிகஸ்யாய.**

**2024/08/21**
**திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்திலிருந்து.**

Pay online & Save your precious time
BOC Acc. No. 000000377 Corporate Branch
WE ACCEPT
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
E-mail - classified@lakehouse.lk
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)

**கம்பஹா ஆதார வைத்தியசாலையின் OPD பிரிவிற்கு வளிச்சீராக்கி இயந்திரங்களை வழங்கி பொருத்துதல்**
**விலைமனு இல. PRDA/WP/PRO/2024/56**

**இந்த அதிகார சபையினால் பின்வருவனவற்றைக் கொள்வனவு செய்வதற்காக திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.**

| S/N | Machine Type | Quantity | Bid Bond | |
|---|---|---|---|---|
| | | | Cash (Rs) | Bank/ Insurance Bond (Rs) |
| 1 | Supply and Fixing 9000 BTU Inverter Air Conditioner With Dual cool in "Singer", "Abans" Brand or Approved Equipment with as per the Engineer instructions. | 03 | 6,000.00 | 12,000.00 |
| 2 | Supply and Fixing 12000 BTU Inverter Air Conditioner With Dual cool in "Singer", "Abans" Brand or Approved Equipment with as per the Engineer instructions. | 03 | | |

02. இதன் பொருட்டான கேள்வி ஆவணத் தொகுதியினை 2024.08.27ஆம் திகதியிலிருந்து 2024.09.10ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை இவ்வதிகார சபையின் கேள்விப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை பணமாக அல்லது வங்கிப் பிணை முறி மூலம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு கேள்வி ஆவணத்தில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. 1,209.50 ரூபா கேள்விப்படிவக் கட்டணத்தைச் செலுத்தி (அதிகார சபையில் பதிவு செய்துள்ளவர்கள் தவிர்ந்தவர்கள்) கேள்வி ஆவணத் தொகுதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. இந்தக் கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறக்கப்படுதல் 2024-09-11ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு இந்த அலுவலகத்தில் இடம்பெறும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி. அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**
**தொ. இலக்கம் 011-4849825, 011-4849845**

# பெறுகை அறிவித்தல்

**(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில், மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)**

**திவுலப்பிட்டிய, ஹொரண முடிவுறுத்தப்பட்ட கொங்கிறீட் முற்றவெளி மற்றும் கிரிந்திவெல நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தினால் செயற்படுத்தப்படும் தொம்பே, மல்வான செயற்றிட்டங்களுக்குத் தேவையான சீமெந்து, 3/4 கருங்கல், 12 மி.மீ. உருக்கு முறுக்குக் கம்பி, பைண்டிங் கம்பி மற்றும் ஆற்று மணலை வழங்கப் பெறுதல்**

மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திவுலப்பிட்டிய, ஹொரண முடிவுறுத்தப்பட்ட கொங்கிறீட் முற்றவெளி மற்றும் கிரிந்திவெல நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தினால் செயற்படுத்தப்படும் தொம்பே மற்றும் மல்வான செயற்றிடங்களுக்குத் தேவையான பின்வரும் பொருட்களை வழங்கப் பெற்றுக்கொள்வதற்காக வழங்குநர்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விச் சுருக்கம்**

| கேள்வி இலக்கம் | விபரங்கள் | வகை (SLS Standard) | எண்ணிக்கை | கேள்விப் படிவக் கட்டணம் | கேள்விப் பிணையின் பெறுமதி ரூபா | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பணமாக | வங்கிப் பிணை மூலம் |
| PRDA/WP/ PRO/2024/57 | திவுலப்பிட்டிய, ஹொரண முடிவுறுத்தப்பட்ட கொங்கிறீட் முற்றவெளி மற்றும் கிரிந்திவெல நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தினால் செயற்படுத்தப்படும் தொம்பே, மல்வான செயற்றிட்டங்களுக்குத் தேவையான சீமெந்து, 3/4 கருங்கல், 12 மி.மீ. உருக்கு முறுக்குக் கம்பி, பைண்டிங் கம்பி மற்றும் ஆற்று மணலை வழங்கப் பெறுதல் | சீமெந்து (50kg மூட்டைகள்) | 3301 | 2000.00 + வெட் வரி | ரூபா 38,000.00 | ரூபா 76,000.00 |
| | | 3/4 கருங்கல் (கி.மீ) | 107.5 | | | |
| | | 12 மி.மீ. உருக்குக் கம்பி | 300 | | | |
| | | பைண்டிங் கம்பி (Kg) | 100 | | | |
| | | ஆற்று மணல் (கி. மீ) | 75 | | | |

02. இதன் பொருட்டான கேள்வி ஆவணத் தொகுதியினை 2024-08-27ஆம் திகதியிலிருந்து 2024-09-09ஆம் திகதி மு.ப. 09.00 முதல் பி.ப. 2.30 மணி வரை மேற்படி கேள்விப்படிவக் கட்டணத்தைச் செலுத்தி (பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் தவிர) இவ்வதிகார சபையின் கேள்விப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை பணமாக அல்லது வங்கிப் பிணை முறி மூலம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு கேள்வி ஆவணத்தில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் 2024-09-10ஆம் திகதி பி.ப. 2.30 மணியாகும் என்பதுடன் அவ்வேளையிலேயே இவ்வலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும். இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

04. இந்தப் பெறுகைக்குத் தகைமை பெறுவதற்கு 5.0 மில்லியன் ரூபாவை விஞ்சும் கேள்வித் தொகைக்கு கேள்விதாரரினால் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்படும் பொது ஒப்பந்தங்கள் பதிவுச் சான்றிதழை கேள்விப் படிவங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி, அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**
**தொ. இலக்கம் - 011-4849825/45**
**011-2321980**

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

# பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்காக Cloud lass நிர்மாணித்தல், முன்மொழிதல், ஈடுபடுத்தல் மற்றும் பராமரித்தல்

**IFB இலக்கம் : 2024/08**

1. பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் கீழ் இயங்குகின்ற பதிவாளர் நாயகம் திணைக்களம் (RGD) 1864 ஆம் ஆண்டு முதன் முதலில் நிறுவப்பட்டதுடன் இலங்கை சனத்தொகையில் பிறப்புகள், விவாகங்கள் மற்றும் இறப்புகள் (BMD) பதிவு செய்தல் 1867 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. பொருளாதாரத்தை டிஜிட்டல் மயப்படுத்தல் தேசிய கொள்கைக்கமைய அரசாங்க நடவடிக்கைகளில் வினைத்திறனை மேன்மைப்படுத்தும் ஊடகமொன்றாக டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்தல் மற்றும் அரசாங்க சேவைகளை பயனுள்ளதாக மற்றும் வினைத்திறனாக வழங்குவதற்கான பல முயற்சிகளை நடைமுறைப்படுத்துவதற்கு பதிவாளர் நாயகம் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.
2. பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்காக திணைக்கள கொள்முதல் குழுவின் தலைவரால், **பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்காக Cloud lass நிர்மாணித்தல், முன்மொழிதல், ஈடுபடுத்தல் மற்றும் பராமரித்தலுக்காக** பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடத்தில் முத்திரை இடப்பட்டு விலைமனு கோரப்படும்.
3. விலைமனு வைத்தலானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் **(GOSL)** கொள்முதல் வழிகாட்டல்களில் வரையறை செய்துள்ளதன் பிரகாரம் தேசிய போட்டித்தன்மையினாலான விலைமனு வைத்தல் முறை (இரு கடிதவுறை முறைமை) பயன்படுத்தி நடத்தப்படுவதுடன் விலைமனுப் பத்திரங்களில் காட்டப்பட்டுள்ள தகுதிகள் தேவைகளை பூரணப்படுத்துகின்ற சகல தகுதிகளையும் கொண்டுள்ள விலைமனுதாரர்களுக்கும் ஏற்புடையது.
4. விலைமனுதாரர் ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகுதிகளை பெறுவதற்கு பின்வரும் குறைந்தபட்ச மூலப்பிரமாணங்களை பூரணப்படுத்தல் வேண்டும். மேலதிக தகவல்கள் விலைமனு ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளது.
   a. விலைமனுதாரர், உள்நாட்டு தனி விலைமனுதாரரொருவரெனின், **5 வருடங்களுக்கு மேலான காலத்திற்கு இலங்கையில் பதிவு செய்யப்பட்ட கம்பனியாக** இருத்தல் வேண்டும். பல்நோக்கு கம்பனியொன்றினது ஓர் பங்குடைமை வியாபாரமொன்றினது/ கூட்டு நிறுவனமொன்றின் பங்காளர் ஒருவராக (இதிலிருந்து "JV" என அடையாளப்படுத்தப்படும்) விலைமனுக்களை சமர்ப்பிக்க கூடியதுடன், இதன்போது "விலைமனுதாரர்" ஒட்டுமொத்தமாக "JV" ஆக இருப்பினும் விலைமனுவானது 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் இலங்கையில் வியாபார பதிவு மேற்கொண்டுள்ள **பிரதான பங்காளரால் (முதன்மை விலைமனுதாரர்) கையொப்பமிடுதல் வேண்டும்.** இக்கொள்முதலுக்காக **அற்றோணித்தத்துவப் பத்திரமொன்று (POA) ஒத்துழைப்பு வழங்கிய பணிப்பாளர் குழுவினால் முன்வைக்கப்பட்ட பிரேரணையொன்றிற்கமைய விலைமனு பத்திரத்திற்கும்** மற்றும் ஏனைய கடிதாவணங்களிலும் **கையொப்பமிடும் நபருக்கு,** விலைமனுதாரர் தனி தேசிய கம்பனியாகவோ "JV" இன் முதன்மை விலைமனுதாரர் என்பதை கருத்திற்கொள்ளாது அதிகாரம் வழங்கப்படும். **அற்றோணித்தத்துவப் பத்திரம் மற்றும் சபை பிரேரணை இலங்கை நீதிமன்ற அதிகார பிரதேசத்தினுள் சட்டரீதியாக பிணைக்கப்பட்டு இருக்க வேண்டியதுடன் இலங்கையில் ஏற்றுக்கொள்ளக்கூடிய சட்டரீதியான பயன்பாடுகள் மற்றும் தரங்களுக்கமைய** உரிய முறையில் கையொப்பமிட்டு பதிவு செய்தல் வேண்டும்.
   b. இந்த கொள்முதலுக்கு விலைமனு சமர்ப்பிப்பவர் அல்லது "JV" என்ற முதன்மை விலைமனுதாரர் **ISO 9001:2015 (தர முகாமைத்துவம்)** பெற்றிருத்தல் வேண்டும். (மூல சான்றிதழ்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.)
   c. இந்த கொள்முதலுக்கு விலைமனு சமர்ப்பிப்பவர் அல்லது "JV" என்ற சகல அங்கத்தவர்களும் **ISO ISO 27001:2022 (தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ தொகுதி)** பெற்றிருத்தல் வேண்டும். (மூல சான்றிதழ்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.)
   d. விலைமனு சமர்ப்பிப்பவர் அல்லது "JV" என்ற முதன்மை விலைமனுதாரர், உற்பத்தியாளர் அல்லாதபட்சத்தில் இந்த கொள்முதலுக்கு விலைமனு வைத்தல், விலைமனுக்களை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்திற்கமைய பதிவு செய்யப்படல் வேண்டுமென்பதோடு மூல சான்றிதழினை விலைமனு ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
   e. இந்த கொள்முதலுக்கு விலைமனு சமர்ப்பிப்பவர் அல்லது "JV" என்ற முதன்மை விலைமனுதாரர், **இந்த ஒப்பந்தத்தின் தன்மையின் பொருள் மற்றும் சேவை விநியோகிப்பதில் கடந்த ஐந்து (5) வருடங்களில் (2019-2023**) ஈடுபட்டிருத்தல் வேண்டும். இதற்காக ஆவணப்படுத்தப்பட்ட சாட்சிகளை முன்வைத்தல் வேண்டும்.
   f. விலைமனு சமர்ப்பிப்பவர் அல்லது "JV" என்ற முதன்மை விலைமனுதாரர், அளிக்கின்ற ஆரம்ப உபகரணங்கள் அல்லது சேவைகளுக்காக **அங்கீகாரம் பெற்ற உற்பத்தியாளர்/ விநியோகத்தராக இருத்தல் வேண்டும்.** குறித்த சாட்சிகளை உபகரணங்கள் அல்லது சேவை ஆரம்ப உற்பத்தியாளர்/ விநியோகிப்பவரது மற்றும் அவர்களது தேசிய - உள்நாட்டு முகவர்/ விநியோகிப்பவர்களது தொடர் தகவல்கள் இருப்பின் அவைகளோடு விலைமனுவில் முத்திரை வைத்தல் வேண்டும். விலைமனு சமர்ப்பிப்பவர் அல்லது "JV" சந்தர்ப்பத்தின் போது முதன்மை விலைமனுதாரராலேயே உற்பத்தி/ விநியோகிக்காத உபகரணங்கள், இந்த விலைமனு ஆவணத்துடன் வழங்கப்பட்டுள்ள மாதிரிப்படிவம்/ சட்டகத்தை பயன்படுத்தி ஆரம்ப **உற்பத்தியாளரது உற்பத்தி அதிகாரத்தை கையளிக்கும் கடிதங்களுடனேயே** இருத்தல் வேண்டியதுடன், **அது இணைத்து இருக்காவிடின், விலைமனு அளிப்பானது பதிலளிக்காத விலைமனுவாக கருதப்படும்.**
   g. விலைமனுதாரர் அல்லது JV பங்குதாரர் கடந்த ஒரு வருட காலப்பகுதியினுள் Cloud laas திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல் கருத்திட்ட ஒப்படைகள் நான்கினை (4) காட்சிப்படுத்தல் வேண்டும். (2023)
   h. விலைமனுதாரர் அல்லது JV பங்குதாரருடன் சமமான அல்லது கூட்டிணைக்கப்பட்ட கருத்திட்டங்கள் தொடர்பாக பூரணப்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் சேவைபெறுநர் தொடர் கடிதங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
   i. விலைமனுதாரர் அல்லது JV பங்குதாரர் இலங்கையின் அரச நிறுவனங்களுக்கான தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய மென்பொருள் அல்லது சேவை வழங்குதலுடன் தொடர்புபட்டு இருத்தல் வேண்டுமென்பதோடு, கடந்த 3 வருட காலத்தினுள் இலங்கை பணத்தில் நூறு மில்லியன் ரூபா (100 மில்லியன்) ஒவ்வொரு பெறுமதியைக் கொண்ட சேவை ஒப்பந்தங்கள் மூன்று (3) வைத்திருத்தல் வேண்டும். (2021-2024)
   j. இந்த கொள்முதலுக்கு விலைமனுக்களை சமர்ப்பிக்கும் போது விலைமனுதாரர் அல்லது JV என்ற முதன்மை விலைமனுதாரருக்கு **கடந்த மூன்று வருடங்களில் (2020-2022) காலத்திற்காக குறைந்தபட்சம் 300 மில்லியன் ரூபா அல்லது அதற்கு மேலதிகமான வருடாந்த விற்பனை புரள்வு** இருக்க வேண்டும். (ஆவண ரீதியான சாட்சிகளை முன்வைத்தல் வேண்டும்)
   k. இந்த கொள்முதலுக்கு விலைமனுக்களை சமர்ப்பிக்கும் விலைமனுதாரர் அல்லது JV என்ற முதன்மை விலைமனுதாரருக்கு குறைந்தபட்சம் **150 மில்லியன் ரூபா நிகர பொருட் சொத்துக்கள்** (அசையும் சொத்து - இன்வென்டரி - அசையும் பொறுப்புக்கள்) மற்றும்/ அல்லது இந்த கருத்திட்டத்திற்காக **கடன் வசதிகளைக்** கொண்டதாக இருத்தல் வேண்டும். (ஆவண ரீதியான சாட்சிகளை முன்வைத்தல் வேண்டும்)
   l. இந்த கொள்முதலுக்கு விலைமனுக்களை சமர்ப்பிக்கும் போது விலைமனுதாரர் அல்லது JV என்ற முதன்மை விலைமனுதாரருக்கு **கடந்த ஐந்து வருடங்களில் (2018/19-2022/23) காலத்திற்காக** கம்பனியில் கணக்காய்வு செய்யப்பட்ட **நிதி அறிக்கைகளின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகளை** சமர்ப்பித்தல் வேண்டும்.
   m. இந்த கொள்முதலுக்கு விலைமனுக்களை சமர்ப்பிக்கும் விலைமனுதாரர் அல்லது JV என்ற முதன்மை விலைமனுதாரருக்கு நிறுவுதல், பராமரித்தல் மற்றும் உதவிச் சேவைகளுக்கான **திறமையான தொழில்சார் தொழில்நுட்ப பணிக்குழுவொன்று** இருத்தல் வேண்டும். (பணிக்குழுவினது விபரங்களை சமர்ப்பித்தல் வேண்டும்)
   n. விலைமனுதாரர் தொடர்பான தற்போதைய அல்லது **கடந்த ஐந்து வருடங்களுக்கான** (2018-2023) வழக்குகள் பற்றிய தகவல்கள், சம்பந்தப்பட்ட தரப்பினர் மற்றும் கருத்து வேறுபாட்டிற்கு உள்ளாகியுள்ள பெறுமதியுடன் வழங்குதல் வேண்டும்.
   o. விலைமனுதாரர் அல்லது அதன் உப கிளைகள் அல்லது அதனுடன் தொடர்புடைய கம்பனிகள் கடந்த ஐந்து வருடங்களினுள் (2018-2023) எந்தவொரு அரசாங்க நிறுவனத்தினாலும் கரை நிறட் பட்டியற் படுத்தப்பட்டிருக்கக் கூடாது.
5. அக்கறையுடன் கூடிய தகுதியுடைய விலைமனுதாரர்கள் விநியோகப் பிரிவு, கீழ்மாடி, பதிவாளர் நாயகம் திணைக்களம், இலக்கம் 234 A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை என்ற விலாசத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும். அத்தோடு **2024 ஆகஸ்ட் 27 ஆம் திகதி முதல் வேலை நாட்களில்** அலுவலக நேரங்களில் (காலை 09.00 - பி.ப 04.00) **மேலே விலாசத்திலுள்ள பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் அலுவலகத்தில்** விலைமனு ஆவணங்களை இலவசமாக பரிசோதனை செய்து பார்க்க முடியும். தொலைபேசி இலக்கம் 011-2889488/ 99 நீடிப்பு 217, **தொலைநகல் 011-2889519, 011-2889518 மின்னஞ்சல் முகவரி supplyrgd@gmail.com இவ்விடயம் குறித்து அக்கறை செலுத்தும் தகுதியுடைய விலைமனுதாரர்களுக்கு கீழே (6) பந்தியில் விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் விலைமனு பத்திரங்களை கொள்வனவு செய்ய முடியும்.**
6. அக்கறையுடைய விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் முழுமையான விலைமனு ஆவண தொகுப்பொன்றினை 2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் 19 ஆம் திகதி மு.ப. 11.00 மணி வரை எழுத்து மூல விண்ணப்பப்படிவமொன்றினை சமர்ப்பிப்பதன் மூலம்

   எழுத்து மற்றும் மீளளிக்கப்படாத இலங்கை ரூபா 20,000 (20,000.00 ரூபா) கட்டணத்தை செலுத்தியதன் பின்னர் மேலே (5) ஆவது பந்தியில் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் விநியோகப் பிரிவில் வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் (5) கொள்வனவு செய்ய முடியும். கொடுப்பனவு முறை பணம் மூலம் இடம்பெறும்
7. தனியே முத்திரையிடப்பட்ட கடித உறைகளில் உரிய முறையில் நிரப்பப்பட்ட விலைமனுப் பத்திர ஆவண தொகுப்பை (கடித உறை 1 - தகுதிகள் மற்றும் அனுபவம் மற்றும் கடித உறை 2- நிதி விலைமனு, கடித உறைகள், கடித உறை 1 மற்றும் கடித உறை 2 என்ற வகையில் சரியாக அடையாளமிடப்படல் வேண்டும்) ஒரு கடித உறையில் இட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்காக Cloud las நிர்மாணித்தல், முன்மொழிதல், ஈடுபடுத்தல் மற்றும் பராமரித்தல்"** என்று குறிப்பிட்டு **2024 ஆம் ஆண்டின் செப்டெம்பர் 19 ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு முன்னர்** தலைவர், திணைக்கள கொள்முதல் குழு, விநியோகக் குழு, பதிவாளர் நாயகம் திணைக்களம், 234/ A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை என்ற விலாசத்திற்கு பதிவு தபால் மூலம் அனுப்பி வைத்தல் அல்லது பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் விநியோகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். தாமதமாக கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் பொறுப்பேற்றல் நிறைவு பெற்றவுடனேயே விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். செல்லுபடியாகும் விலைமனுவாக கருதுவதற்கு விலைமனு செலுத்துதல் பற்றுச்சீட்டுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
8. சாத்தியமான விலைமனுதாரர்களுடன் முன் விலைமனுக் கூட்டமொன்று **2024ஆம் ஆண்டு செப்டெம்பர் 03ஆம் திகதியன்று மு.ப.10.00 மணிக்கு** மேலே (5) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் அலுவலகத்தில் இடம்பெறும்.

09. சகல விலைமனுக்களும் **2025ஆம் ஆண்டு ஜனவரி 17ஆம்** திகதி வரை செல்லுபடியாகும் இலங்கை மத்திய வங்கியின் பதிவு செய்யப்பட்டுள்ள வணிக வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட வங்கி உத்தரவாதமொன்றாக அல்லது சிறாப்பருக்கு பணமாக செலுத்தப்பட்ட 1,500,000.00 ரூபா விலைமனு பாதுகாப்புடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

10. விலைமனுக்கள் **2024ஆம் ஆண்டு டிசெம்பர் 20ஆம்** திகதி வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

11. விலைமனுக்களை தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பாக விலைமனுதாரர்களால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் செலவுகள் தொடர்பாக பதிவாளர் நாயகம் திணைக்களம் பொறுப்புக் கூறாது.

**பதிவாளர் நாயகம்**
**பதிவாளர் நாயகம் திணைக்களம்**
**இலக்கம் 234/A3,**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்லை**



# திக்வெல்ல மீதான தண்டனை விபரம் இந்த வாரத்தில் அறிவிக்க வாய்ப்பு

கோக்கைன் போதைப் பொருளை பயன்படுத்தியதாக குற்றம்சாட்டப்பட்டிருக்கும் இலங்கை கிரிக்கெட் வீரர் நிரோஷன் திக்வெல்லவுக்கு எதிரான தண்டனை தொடர்பில் இந்த வார இறுதியில் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்படி அவர் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டு தொடர்பில் தமது பக்க நியாயங்களை முன்வைப்பதற்கு கடந்த வெள்ளிக்கிழமை (23) அவர் வாய்மொழி மூலம் விளக்கம் அளித்தபோதும் அந்த விளக்கத்தை எழுத்துமூலம் வழங்குவதற்கு ஜனாதிபதி சட்டத்தரணி உதித எகலஹேவா தலைமையிலான மூன்று பேர் கொண்டு குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி எதிர்வரும் நாட்களில் அந்த எழுத்துமூல விளக்கம் அளிக்கப்படவுள்ளது.

தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தில் இடம்பெற்ற சோதனையில் இலங்கை தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து முகவர் நிறுவனம் சார்பில் சட்டத்தரணி பண்டித்த கீர்த்தினந்த பங்கேற்றிருந்தார். கடந்த ஜூன் 1 தொடக்கம் 21 ஆம் திகதி வரை இடம்பெற்ற லங்கா பிரீமியர் லீக் தொடரில் பங்கேற்ற திக்வெல்லவிடம் கடந்த ஜூலை 12 ஆம் திகதி எடுகோளாக மேற்கொண்ட சோதனையிலேயே அவர் கோக்கைன் போதைப்பொருளை பெற்றிருப்பது தெரியவந்துள்ளது.

இந்நிலையில் தம்மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டை திக்வெல்ல ஒப்புக்கொண்டிருப்பதோடு 'பி' மாதிரி சோதனை தேவையற்றது என கூறப்படுகிறது. உலக உக்க மருந்து தடுப்பு நிறுவனத்தின் விதிகளின்படி போட்டிக்கு வெளியே கோக்கைன் பயன்படுத்துவது குற்றமாகக் கருதாத போதும் போட்டித் தொடர் ஒன்றுக்கு இடையே இந்த ஊக்கமருந்தை பெற்றிருப்பதால் திக்வெல்ல மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டு மிகவும் பாரதூரமானது என்று கருதப்படுகிறது.

அவர் மீது தண்டனை விதிக்கப்படும் பட்சத்தில் அனைத்து வகை விளையாட்டிலும் அவருக்கு நான்கு ஆண்டுகள் தடை விதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. எனினும் ஏற்கனவே அவருக்கு கிரிக்கெட் போட்டிகளில் ஆடுவதற்கு இலங்கை கிரிக்கெட் சபை இடைக்கால தடை விதித்துள்ளது.

லங்கா பிரீமியர் லீக் தொடரில் திக்வெல்ல தலைமையிலான கோல் மாவல்ஸ் அணி இறுதிப் போட்டி வரை முன்னேறி இறுதி ஆட்டத்தில் ஜப்னா கிங்ஸ் அணியிடம் தோல்வியை சந்தித்தது.

எனினும் இதற்கு முன்னர் 2021 ஆம் ஆண்டு இலங்கை அணி இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது கொவிட் கட்டுப்பாடுகளை மீறியதன் காரணமாக திக்வெல்ல, தனுஷ்க குணதிலக்க மற்றும் குசல் மெண்டிஸ் ஆகியோருக்கு இலங்கை கிரிக்கெட் சபை ஓர் ஆண்டு போட்டித் தடை மற்றும் அபராதம் விதித்ததோடு பின்னர் அது ஆறு மாதங்களாக குறைக்கப்பட்டது.

31 வயதான நிரோஷன் திக்வெல்ல இதுவரை 54 டெஸ்ட், 55 ஒருநாள் மற்றும் 28 டி20 சர்வதேச போட்டிகளில் இலங்கை சார்பில் பங்கேற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்

### உக்ரைன் தலைநகரில் ரஷ்யா கடும் தாக்குதல்: மூவர் பலி



உக்ரைன் தலைநகர் கீவ் மீது ரஷ்யா நடத்திய சரமாரியான தாக்குதலில் 3 பேர் கொல்லப்பட்டனர். மேற்கு லுட்ஸ்க், கிழக்கு டினிப்ரோ மற்றும் தெற்கு சபோரிஜியா பகுதிகளில் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

ரஷ்யா மற்றும் உக்ரைன் போர் கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வரும் நிலையில், அண்மையில் உக்ரைன் படைகள் ரஷ்ய பகுதிகளுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்நிலையில், நேற்று (26) அதிகாலை உக்ரைன் தலைநகர் கீவ் மீது ரஷ்யா ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானத் தாக்குதல் நடத்தியது.

தலைநகர் கீவில் குண்டுவெடிப்புச் சத்தம் கேட்டதாகவும், இந்த தாக்குதலால் நகரில் மின்சாரம் மற்றும் தண்ணீர் விநியோகம் தடைபட்டுள்ளதாகவும் கீவ் மேயர் விட்டலி கிளிட்ச்கோ தெரிவித்துள்ளார்.

உக்ரைன் சுதந்திர தினத்தையொட்டி (ஓக. 24), ரஷ்யா தாக்குதல் நடத்த அதிக வாய்ப்பு இருப்பதாக அமெரிக்க தூதரகம் கடந்த வாரம் எச்சரிக்கை விடுத்தது கவனிக்கத்தக்கது.

### முதலாளி அழைப்பை நிராகரிக்க அவுஸ்திரேலியாவில் புது சட்டம்



வேலை நேரத்திற்குப் பின்னர் தொழில் வழங்குநரிடம் இருந்து வரும் நியாயமற்ற அழைப்புகளை துண்டிப்பதற்கு ஊழியர்களுக்கு அவுஸ்திரேலியாவில் சட்டரீதியான அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் அமுலுக்கு வந்திருக்கும் புதிய சட்டத்தின்படி, நியாயமற்றது என கருதப்படும் பட்சத்தில் வேலை நேரத்திற்கு வெளியில் முதலாளியிடம் இருந்து வரும் தொடர்புகளை கண்காணிப்பது, வாசிப்பது அல்லது பதில் அளிப்பதை நிராகரிக்க ஊழியர்களுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது.

கொவிட் பெருந்தொற்றுக்குப் பின்னர் தொலைதூர வேலை பிரபலமடைந்து டிஜிட்டல் தொடர்பாடல்கள் அதிகரித்திருக்கும் நிலையில் ஊழியர்களின் தொழில் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கைக்கு இடையிலான எல்லைகள் குறைந்து வரும் நிலையிலேயே இந்த புதிய சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஊழியர்கள் வேலை செய்யும் ஒவ்வொரு மணி நேரத்துக்கும் சம்பளம் கிடைப்பதை உறுதிசெய்வதாகவும் இந்த சட்டம் உள்ளது.

கடந்த ஆண்டு அவுஸ்திரேலிய ஊழியர்கள் சராசரியாக 280 மணி நேரத்துக்கு மேல் சம்பளமின்றி வேலை பார்த்தனர். அந்த நேரத்திற்கான மதிப்பு சுமார் 90 பில்லியன் டொலர் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

### அடையாள அட்டை சோதிக்கப்பட்டு வீதியில் பயணித்த 22 பேர் பாகிஸ்தானில் சுட்டுக்கொலை



தென்மேற்கு பாகிஸ்தானில் வாகனங்களை நிறுத்தி அதில் சென்றவர்களின் அடையாள அட்டையை சோதித்த பின்னர் துப்பாக்கி தாரிகளால் குறைந்தது 22 பேர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

மதவாத, பிரிவினைவாத மற்றும் இனவாத மோதல்கள் இடம்பெற்றுவரும் பலுகிஸ்தான் மாகாணத்தில் உள்ள நெடுஞ்சாலை ஒன்றிலேயே கடந்த ஞாயிறு (25) இரவு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதன்போது துப்பாக்கிதாரிகள், அடையாள அட்டைகளை சோதித்து பஞ்சாபில் இருந்து வந்தவர்களை தனியே பிரித்து சுட்டுக் கொன்றிருப்பதோடு வாகனங்களுக்கும் தீ வைத்துள்ளனர்.

முஸாகேல் மாவட்டத்தில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலுக்கு பலொக் விடுதலைப் படை என்ற ஆயுதக் குழு பொறுப்பேற்றுள்ளது.

'30 தொடக்கம் 40 ஆயுததாரிகள் வரை இருந்துள்ளனர். அவர்கள் 22 வாகனங்களை நிறுத்தியுள்ளனர்' என்று மூத்த உள்ளூர் அதிகாரியான நஜிபுல்லா ககார் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

பஞ்சாபுக்கு செல்லும், பஞ்சாபில் இருந்து வரும் வாகனங்கள் சோதிக்கப்பட்டுள்ளன. பஞ்சாபைச் சேர்ந்த தனிநபர்கள் அடையாளம் காணப்பட்டு சுடப்பட்டுள்ளனர்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் சிவில் உடையில் இருக்கும் இராணுவத்தினரையே இலக்கு வைத்ததாக பலொக் விடுதலைப் படை குறிப்பிட்டுள்ளது.

பாகிஸ்தானில் உள்ள மாகாணங்களில் மிகவும் பெரியது பலுகிஸ்தான். அதிக வளங்களை கொண்ட மாகாணமாக இருந்தபோதும் வளர்ச்சியடையாத ஒரு பிராந்தியமாக அது உள்ளது.



# காசா போர் நிறுத்தப் பேச்சுகளில் முன்னேற்றம் இல்லை; இஸ்ரேல் புதிய வெளியேற்ற உத்தரவு

## மீண்டும் தாக்குதல் நடத்துவதாக ஹிஸ்புல்லா சூளுரை

காசாவில் மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் மற்றொரு பாடசாலை மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி அங்கு புதிய வெளியேற்ற உத்தரவை பிறப்பித்திருக்கும் நிலையில் கெய்ரோவில் இடம்பெறும் போர் நிறுத்த பேச்சுவார்த்தையில் எந்த முன்னேற்றமும் எட்டப்படவில்லை.

இஸ்ரேலின் லெபனானுடனான வடக்கு எல்லையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பாரிய அளவில் மோதல் வெடித்த சூழலில் நிலைமை சற்றுத் தணிந்தபோதும் போர் பதற்றம் தொடர்ந்து நீடித்து வருகிறது. ஈரானும் இஸ்ரேல் மீது பதிலடி கொடுப்பது குறித்து மீண்டும் ஒருமுறை வலியுறுத்தியுள்ளது.

இந்நிலையில் கெய்ரோவில் இடம்பெற்றுவரும் புதிய சுற்று போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகளில் மத்தியஸ்தர்களால் முன்வைக்கப்பட்ட சமரசத்திற்கான பரிந்துரைகளை இஸ்ரேல் அல்லது ஹமாஸ் தரப்புகள் நிராகரித்த நிலையில் உடன்பாடு எதுவும் எட்டப்படவில்லை என்று இரு எகிப்து வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்நிலையில் பத்து மாதங்களுக்கு மேல் நீடிக்கும் போரை முடிவுக்குக் கொண்டுவரும் அமெரிக்கா தலைமையிலான பேச்சுவார்த்தைகள் வெற்றி அளிப்பதற்கான வாய்ப்பு தொடர்பில் அவர்கள் சந்தேகத்தை வெளியிட்டுள்ளனர்.

எனினும் இந்தப் பேச்சுவார்த்தை 'ஆக்கபூர்வமானது' என்று விபரித்திருக்கும், அமெரிக்க மூத்த அதிகாரி ஒருவர், இறுதியான மற்றும் செயற்படுத்தக்கூடிய உடன்படிக்கை ஒன்றை அடைவதில் அனைத்துத் தரப்புகளும் உற்சாகத்துடன் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

நீடிக்கும் பிரச்சினைகள் மற்றும் விடயங்கள் தொடர்பில் தீர்வு காண்பதற்கு எதிர்வரும் நாட்களில் தொடர்ந்து செயற்படவுள்ளோம்' என்று அந்த அதிகாரி குறிப்பிட்டதாக ரோய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. பேச்சுவார்த்தையாளர்கள் தொடர்ந்தும் கெய்ரோவில் தங்கி இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலைத் தொடந்து வெடித்த காசை போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு கடந்த பல மாதங்களாக விட்டு விட்டு பேச்சுவார்த்தைகள் இடம்பெறறபோதும் அந்த முயற்சிகள் இதுவரை வெற்றி அளிக்கவில்லை.

அமெரிக்கா, எகிப்து மற்றும் கட்டாரின் மத்தியஸ்தத்துடன் இடம்பெறும் புதிய சுற்று பேச்சில், எகிப்துடனான காசாவின் தெற்கு எல்லையை ஒட்டி இருக்கும் 14.5 கிலோமீற்றர் நீளம் கொண்டு குறுகிய நிலப்பகுதியான பிலடெல்பியா தாழ்வார பகுதியில் இஸ்ரேல் நிலைகொண்டிருப்பது இழுபறிக்கு காரணமான முக்கிய விடயங்களில் ஒன்றாக உள்ளது.

பிலடெல்பியா தாழ்வாரம் மற்றும் காசாவை இரண்டாக பிரிக்கும் வகையில் அமைந்திருக்கும் நெட்செரிம் தாழ்வாரப் பகுதியில் இஸ்ரேலியப் படை நிலைகொண்டிருப்பதற்கு மாற்றாக பல யோசனைகளை மத்தியஸ்தர்கள் முன்வைத்தபோதும் அது ஒன்றையும் போர் தரப்புக்குள் ஏற்கவில்லை என்று எகிப்து வட்டாரம் மூலம் தெரியவருகிறது.

இஸ்ரேலிய சிறையில் இருந்து ஹமாஸினால் விடுவிக்கக் கோரும் பலஸ்தீன கைதிகள் தொடர்பில் இஸ்ரேல் எதிர்ப்பை வெளியிட்டிருப்பதோடு அவ்வாறு விடுவிக்கப்படுபவர்கள் காசாவை விட்டு வெளியேறவும் இஸ்ரேல் நிபந்தனை விதித்திருப்பதாக தெரியவருகிறது.

கடந்த வியாழக்கிழமை தொடக்கம் எஞ்சியுள்ள இடைவெளியை குறைப்பதற்கு இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் எகிப்து இடையே கூட்டங்கள் கூடுவதும் கலைவதுமாக நிலைமை தொடர்கிறது என்று மேற்படி அமெரிக்க மூத்த அதிகாரி தெரிவித்துள்ளார். இந்நிலையில் எகிப்து மற்றும் கட்டார் மத்தியஸ்தர்கள் முன்மொழிவுகள் தொடர்பில் மூத்த ஹமாஸ் பிரதிநிதிகளுடன் கடந்த சனிக்கிழமை கலந்துரையாடியுள்ளனர்.

எனினும் தாழ்வாரத்தில் இருந்து துருப்புகளை வாபஸ் பெறும் கடப்பாட்டில் இருந்து இஸ்ரேல் பின்வாங்குவதாகவும், அது போர் நிறுத்தம் ஆரம்பிக்கும்போது அதிக மக்கள் தொகை கொண்ட வடக்கு காசாவுக்கு இடம்பெயர்ந்த மக்கள் திரும்பும்போது அவர்கள் கண்காணிப்புக்கு உட்படுத்துவது உட்பட புதிய நிபந்தனைகளை முன்வைக்கிறது என்றும் ஹமாஸ் தெரிவித்துள்ளது.



'ஜுலை 2 இல் நாம் இணங்கியதில் இருந்து பின்வாங்குவது அல்லது புதிய நிபந்தனைகள் தொடர்பிலான பேச்சுவார்த்தைகளை நாம் ஏற்கமாட்டோம்' என்று ஹமாஸ் அதிகாரியான ஒசாமா ஹம்தான், அல் அக்ஸா தொலைக்காட்சிக்கு கடந்த ஞாயிறன்று கூறியிருந்தார்.

காசா போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் இராணுவத்தினர் மற்றும் ஆண்கள் உட்பட இஸ்ரேலிய பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க அமெரிக்கா முன்வைத்த முன்மொழிவுக்கு ஹமாஸ் கடந்த ஜுலையில் இணங்கியமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மத்தியஸ்தர்களுடன் பேச்சுவார்த்தையை நடத்திய பின்னர் ஹமாஸ் பிரதிநிதிகள் கடந்த ஞாயிறன்று கெய்ரோவில் இருந்து புறப்பட்டுச் சென்றதாக மூத்த அதிகாரியான இஸ்ஸத் எல் ரெஷிக் தெரிவித்துள்ளார். எட்டப்படும் எந்த ஓர் உடன்படிக்கையும் நிரந்தர போர் நிறுத்தம் ஒன்றை கொண்டுவருவதாகவும் காசாவில் இருந்து இஸ்ரேல் முழுமையாக வாபஸ் பெறுவதாகவும் இருக்க வேண்டும் என்று ஹமாஸ் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

எவ்வாறாயினும் காசாவில் தொடர்ந்து மோதல் நீடிக்கும் நிலையில் நேற்றுக் காலை மத்திய காசாவின் நுஸைரத் அகதி முகாமின் வடக்கில் அடைக்கலம் பெற்றுள்ள மக்கள் வசிக்கும் பாடசாலை மீது இடம்பெற்ற செல் குண்டு வீச்சில் பலஸ்தீன வயோதிப பெண் ஒருவர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை இஸ்ரேலின் புதிய வெளியேற்ற உத்தரவை அடுத்து மத்திய காசாவில் இயங்கும் ஒரே மருத்துவமனையான அல் அக்ஸா தியாகிகள் மருத்துவமனையில் இருந்து நோயாளிகள் மற்றும் இடம்பெயர்ந்த மக்கள் வெளியேறி வருகின்றனர்.

மத்திய காசாவில் முன்னர் 'மனிதாபிமான பகுதி' ஒன்றாக அறிவிக்கப்பட்ட டெயிர் அல் பலாஹ்வின் கிழக்கு பகுதியில் இருந்து பலஸ்தீனர்களை வெளியேறும்படி இஸ்ரேல் இராணுவம் ஞாயிறன்று உத்தரவிட்டது.

'நாம் நோய்வாய்ப்பட்டவர்கள், இந்த நிலையில் எம்மால் எங்கு செல்ல முடியும்? இது வாழ்க்கையல்ல, நாங்கள் இறந்துவிட்டோம்' என்று கால் முறிந்த நிலையில் இருக்கும் உம் முஹமது குறிப்பிட்டுள்ளார்.

இந்த மருத்துவமனை சுற்றுப்பகுதியில் கடந்த ஒன்பது மாதங்களாக கூடாரம் ஒன்றில் வசித்து வரும் மஹா அல் செர்சக், புதிய வெளியேற்ற உத்தரவை கேட்டு அதிர்ச்சி அடைவதாகவும் எங்கே போவது என்று தெரியவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

காசாவில் கடந்த 10 மாதங்களுக்கு மேல் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 40,500ஐ நெருங்கியுள்ளது.

இதேவேளை காசா போர் பிராந்தியத்திலும் போர் பதற்றத்தை ஏற்படுத்தி இருக்கும் சூழலில் போரை விரும்பவில்லை என்றும் ஆனால் போருக்கு தயாராய் இருப்பதாகவும் இஸ்ரேல் மற்றும் லெபனானின் ஈரான் ஆதரவு ஹிஸ்புல்ல அமைப்பு தெரிவித்துள்ளன.

ஹிஸ்புல்லா தலைவர் ஹஸன் நஸ்ரல்லா நேற்று முன்தினம் (25) தொலைக்காட்சியில் பேசினார்.

இஸ்ரேலிய உளவுத்துறை நிலையத்தைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தியதாக அவர் குறிப்பிட்டார். டெல் அவிவிலிருந்து சுமார் ஒன்றரை கிலோமீற்றர் தொலைவில் அந்த நிலையம் உள்ளது.

இஸ்ரேலிய ஆகாய வெளிக்குள் நுழைந்து ஹிஸ்புல்லா திட்டமிட்டபடி தாக்குதல் நடத்த முடிந்தது என்று நஸ்ரல்லா கூறினார். விளைவுகள் போதுமானதாக இல்லையென்றால் ஹிஸ்புல்லா மீண்டும் தாக்குதல் நடத்தும் என்றும் குறிப்பிட்டார்.

ஹிஸ்புல்லா அமைப்பு நூற்றுக்கணக்கான ரொக்கெட் குண்டுகள் மற்றும் ஆளில்லா விமானங்களை பயன்படுத்தி இஸ்ரேல் மீது ஞாயிற்றுக்கிழமை தாக்குதல் நடத்தியதோடு பதிலுக்கும் இஸ்ரேலின் சுமார் 100 போர் விமானங்கள் லெபனானில் தாக்குதல்களை நடத்தியது.

இந்நிலையில் டெஹ்ரானில் வைத்து ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மைல் ஹனியே படுகொலை செய்யப்பட்டதற்கு பதிலடி கொடுக்கப்படும் என்று ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி மீண்டும் ஒருமுறை வலியுறுத்தியுள்ளார்.

'டெஹ்ரானில் இஸ்ரேலிய பயங்கரவாத தாக்குதலுக்கு ஈரானின் பதிலடி உறுதியானது என்பதோடு நன்கு திட்டமிடப்பட்ட மற்றும் அளவிடப்பட்டதாக இருக்கும்' என்று அரக்சி எக்ஸ் சமூகதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஓகஸ்ட் மாதம் 27ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.